# அத்தியாயம் 1

# பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

## 1.1 பொதுநோக்கு








உலகளாவிய ரீதியிலும் உள்நாட்டிலும் முன்னொருபோதும் நிகழாததும் பாதகமானதுமான அபிவிருத்திகளின் மத்தியிலும் 2008இல் இலங்கைப் பொருளாதாரம் 6 சதவீதம் கொண்ட உண்மை வளர்ச்சியைப் பதிவு செய்ததன் மூலம் அதன் தாக்குப்பிடிக்கும் தன்மையை நிரூபித்துக் காட்டியுள்ளது. இவ்வாண்டின் முதற்பகுதியில் உலகளாவிய பொருளாரத்தில் உணவு மற்றும் வலு நெருக்கடிகள், கூடியளவில் விரிவடைந்து செல்லும் வர்த்தக மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவைகள், 1980இற்குப் பின்பு முன்னெப்போதுமில்லாத உயர் மட்டங்களுக்கு அதிகரித்துச் செல்லும் பணவீக்கம், உயர் பாதுகாப்புச் செலவினம் மற்றும் கிழக்கு மாகாணத்தின் புனரமைப்பு, மீள்குடியேற்றம் மற்றும் புனர்நிர்மாணச் செலவுடன் இணைந்து உள்நாட்டு வாழ்க்கைச் செலவு மீது உணவு மற்றும் வலுவின் உயர் விலைகளின் தாக்கத்தைக் குறைக்கும் பொருட்டு வழங்கப்பட்ட தீர்வைத் தளர்த்தல்களால் எழும் வரி விலக்களிப்புக்கள் காரணமாக இறை நிலுவைகள் மீது ஏற்படும் அழுத்தம் என்பவற்றால் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு அச்சுறுத்தலுக்குள்ளானது. இவ்வாண்டின் பிற்பகுதியை நோக்கி ஐக்கிய அமெரிக்காவில் நூறு ஆண்டுக்கும் மேல் பழமை வாய்ந்த பிரதான நிதியியல் நிறுவனமான லெக்மன் பிரதேர்ஸின் திடீர் வீழ்ச்சிக்குப் பின்பு ஐக்கிய அமெரிக்காவில் துணை வாடிக்கையாளர் ஈட்டுச் சந்தைப் பிரச்சனைகளிலிருந்து ஆரம்பமான உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளின் இரண்டாவது அலை 2008 செத்தெம்பரிலிருந்து முன்னெப்பொழுதுமில்லாத உலகளாவிய நிதியியல் குழப்பநிலைக்கு இட்டுச் சென்றது. உலகளாவிய நிதியியல் குழப்பநிலை, பாதுகாப்பிற்காக, தோற்றம் பெற்று வரும் சந்தைப் பொருளாதாரங்களிலிருந்தான மூலதனப் பாய்ச்சல்களின் நேர்மாற்றலை விரைவுபடுத்தி 2008 இறுதியில் குறுகிய காலப்பகுதியினுள் ஆசியப் பிராந்தியத்திலிருந்து கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 120 பில்லியன் வெளிப்பாய்ச்சலை விளைவித்தது. 2008 யூலை இறுதியில் முன்னெப்பொழுதுமில்லாத உயர் மட்டமான ஐ.அ.டொலர் 3.56 பில்லியனுக்கு முன்மதியுடன் திரட்டப்பட்ட இலங்கையின் வெளிநாட்டு அலுவலர்சார் ஒதுக்குகளில் கிட்டத்தட்ட 50 சதவீதத்தால் குறைவடைந்த வெளிநாட்டு மூலதனத்தின் திடீர் மீளப்பெறுகையால் இலங்கையும் அதன் பங்கைச் சமாளிக்க வேண்டியிருந்தது. இதன் விளைவாக,

2008 யூலை இறுதியில் ஐ.அ.டொலர் 515 மில்லியன் கொண்ட சென்மதி நிலுவைகளின் திரண்ட மிகை 2008 இறுதியில் ஐ.அ.டொலர் 1.2 பில்லியன் கொண்ட பற்றாக்குறைக்கு மாறியது.

**மேற்கூறிய சவால்களுக்கு மத்தியிலும் மத்திய வங்கி இரு முக்கிய குறிக்கோள்களான பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை அடைவதில் அதன் கவனத்தைக் தொடர்ந்து ஒருமுகப்படுத்தியது.** கணியம்சார் ரீதியான இலக்கிடலூடான நாணய விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் பெருமளவு தங்கியிருக்கும் வங்கியின் நாணயக் கொள்கை உபாயம் ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம் 2008 யூனிலான 28.2 சதவீதத்திலிருந்து 2009 பெப்புருவரி இறுதியில் 7.6 சதவீதத்திற்கு முன்னெப்பொழுதுமில்லாத கூர்மையான மெதுவடைவைப் பதிவு செய்ததன் மூலம் அதன் பயனுறுதித்தன்மையை நிரூபித்துக் காட்டியது. தடுமாறி வீழ்ச்சியடையும் உலகளாவிய உணவு மற்றும் வலு விலைகள், உள்நாட்டு வேளாண்மையிலான உயர் உற்பத்தியால் சாதகமான வழங்கல் பக்கத்து அதிர்வுகளுடன் இணைந்து உள்நாட்டு விலைகளூடாக அத்தகைய விலைக் குறைப்பை அனுமதித்தல் என்பனவும் விலை உறுதிப்பாட்டை அடைவதில் நாணயக் கொள்கை முயற்சிகளை வலுப்படுத்தின. உள்நாட்டுக் கேள்வியைக் கட்டுப்படுத்தும் நாணயக் கொள்கை மற்றும் தெளிவின்றித் தோன்றும் உலகளாவிய மந்தநிலை வெளிநாட்டுக் கேள்வியைக் குறைத்தமை என்பவற்றுக்கு மத்தியிலும் குறிப்பாக இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் புதுப்பிக்கப்பட்ட பொருளாதாரச் செயற்பாடு மற்றும் கவர்ச்சிகரமான விலைகளால் பெரும்பாலும் உதவப்பட்ட வேளாண்மை உற்பத்தி சாதகமான அபிவிருத்தியைப் பதிவு செய்தது. பிரதான உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் தொடர்ந்து நடைபெற்றமையும் பொருளாதார வளர்ச்சியை தொடர்ந்து நான்காவது ஆண்டாக 6 சதவீதத்திற்கும் கூடுதலாகப் பேணுவதற்கும் உதவியது. உயர் பொருளாதார வளர்ச்சி தொடர்ந்தமையால் ஏற்பட்ட நன்மைகள் முன்னெப்பொழுதுமில்லாத குறைந்த மட்டங்களிலான தொழில் வாய்ப்பின்மையிலும் வறுமை மட்டத்திலும் பிரதிபலித்தன.

வரைபடம் 1.1 பொருளாதார வளர்ச்சியும் தொழிலின்மையும்




**உலகளாவிய நிதியியல் நெருக்கடி உள்நாட்டு வங்கித்தொழில் துறைக்கு வெளிநாட்டு நிதியிடல் வழிமுறைகளை குறைக்கின்ற வேளையில் கடந்த காலத்தில் அளவுக்கதிகமான உள்நாட்டுப் படுகடன் விரிவாக்கம்** மற்றும் இறுக்கமான நாணயக் கொள்கையிலிருந்து விளைவிக்கப்பட்ட உயர் வட்டி வீதங்கள், பிரதான நிதியியல் நிறுவனத்துடன் இணைந்த சட்ட ரீதியற்ற உள்நாட்டு வைப்பு ஏற்கும் நிறுவனத்தின் திடீர் வீழ்ச்சி என்பவற்றுக்கு மத்தியிலும் மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட முன்மதியுடைய ஒழுங்குவிதிகள் மற்றும் நேரம் பிந்தாத நடவடிக்கை நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பேணுவதை இயலச் செய்தது.

**வரவு செலவுத்திட்டம் 2008இல் அறிவிக்கப்பட்ட இலக்குகளுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் இறைக்கொள்கையினை நடைமுறைப்படுத்தல் மிகவும் சவால்மிக்கதாக விளங்கியது.** முன்பு நிகழாத இரு வெளிநாட்டு அதிர்ச்சிகளான 2008இன் முதலரைப்பகுதியிலான உலகளாவிய உணவு மற்றும் வலு நெருக்கடிகள், இவ்வாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் தீவிரம் என்பன பொருளாதாரத்தைப் பாதித்திருக்கையில் நாட்டுக்கு நிரந்தரமான சமாதானத்தைக் கொண்டு வரும் பொருட்டு பயங்கரவாதத்திற்கு எதிரான இறுதிக் கட்டத்தைத் தொடர்வதற்கான செலவை அரசு பொறுப்பேற்க வேண்டியிருந்தது. புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி வேலையை விரைவுபடுத்துவதற்கான தேவை, சார்பு ரீதியிலான உயர் உள்நாட்டு வட்டி வீதங்கள், 2008இன் முதலரைப்பகுதியில் பெற்றோலியம், வளமாக்கி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் உயர் பன்னாட்டு விலைகள் என்பன செலவினத்தை விஞ்சுவதற்கு அழுத்தங்களை ஏற்படுத்திய வேளையில் எரிபொருள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மீதான வரிகள் மற்றும் தீர்வைகளின் விலக்களிப்புக்கள், இவ்வாண்டின் பிற்பகுதியில் காணப்பட்ட இறக்குமதிகள் மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகளிலான மெதுவடைவு என்பன கணிசமான அரசிறைப் பற்றாக்குறையை உருவாக்கின. எதிர்பார்க்கப்பட்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை விட கூடிய அளவை நிதியிடல், வெளிநாட்டு வர்த்தக நிதியிடல் உண்மையாகவே குறைந்து செல்லல், அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளின் திடீர் மீளப்பெறுகை என்பன அரசை உள்நாட்டு வங்கி நிதியிடலில் கூடியளவு தங்கியிருக்க வற்புறுத்தியது. இச் சவால்கள் இறை வெளிப்பாட்டை வரவு செலவுத்திட்டம் 2008இன் அடிப்படை எடுகோள்களிலிருந்து விலகியிருக்கச் செய்தது.

**இலங்கைப் பொருளாதாரம் அண்மைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அபிவிருத்திகளுடன் வரலாற்று ரீதியில் முக்கியமான கட்டமொன்றிற்கு வந்துள்ளது.** மூன்று தசாப்தங்களாக நீண்ட மோதல் முடிவுக்கு வந்தமை நிரந்தர அடிப்படையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை நாட்டின் ஏனைய பகுதியுடன் கூடியளவு இணைத்ததுடன் உலகளாவிய பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியுடன் புதிய வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டு நாட்டை உயர் வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்கான சிறந்த அத்திவாரத்தை ஏற்படுத்தும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பயன்படுத்தப்படாத மூலவளங்களின் பெருமளவை அதிகரித்தளவில் அடைவது நாட்டின் வளர்ச்சி உத்வேகத்தை அதிகரிக்கும் அதேவேளை மற்றைய மாகாணங்களுடன் ஒருங்கிணைத்ததன் மூலம் பொருளாதாரத்துக்கு பாரிய உத்வேகத்தை வழங்கும். இது பெரும்பாலும் மாகாணங்களின் ஒருங்கிணைப்புடன் விரிவடைந்த சந்தைகள், இயற்கை மற்றும் மனித வளங்களின் சிறந்த பயன்பாடு, செயற்றிறன் மற்றும் புதுப்பித்தலை சரியான முறையில் நெறிப்படுத்தல் ஆகிய துறைகளில் காணப்படும். அதேவேளை, புதிய சூழ்நிலை அதிகரித்த வெளிநாட்டு முதலீடுகள், ஏனைய தனியார் முதலீடுகள் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான உதவி என்பவற்றுக்கு இட்டுச் செல்லும் நம்பகத்தன்மையை கட்டியெழுப்பும். உலகப் பொருளாதாரத்தின் தற்போதைய மந்த நிலைமைகளும் நாட்டிலுள்ள தனியார்துறை வியாபாரம் மற்றும் முதலீட்டுத் துணிகர முயற்சிகள் என்பன நெருக்கடி நிலைமையை சிறந்த முறையில் எதிர்கொள்வதற்கு அவற்றின் நிலைகளை அதற்கேற்றவாறு ஒழுங்குபடுத்த வேண்டும். உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு வழிமுறைகளை மேற்கொள்ளும் அதேவேளை அவற்றின் வியாபார மாதிரிகளுக்கும் முகாமைத்துவ நடைமுறைகளுக்கும் மாற்றங்களை அறிமுகப்படுத்துவதற்கும் இது முக்கிய சந்தர்ப்பமாக இருக்கும். விரிவடைந்து செல்லும் நிலைமையைச் சமாளிப்பதற்கு அரசதுறையும் அதன் கொள்கைகளை மீள ஆலோசிப்பதுடன் மீளவும் உருவாக்க வேண்டும். இப் புதிய அபிவிருத்திகள் அடுத்த உலகளாவிய வியாபாரத்தின் சுழற்சி மேலே வரும் பொழுது புதிய வாய்ப்புக்களைப் பயன்படுத்தும் விதத்தில் முழுநாட்டையும் தயார் நிலையில் வைத்திருக்கும். தோற்றம் பெற்றுவரும் வாய்ப்புக்கள் பொருத்தமான கொள்கைகளுடனும் சிறந்த முகாமைத்துவத்துடனும் பயனுறும் வகையிலும் உபாய ரீதியிலும் பயன்படுத்தப்படுமாயின் நாட்டை உயர் நிலைக்கு இட்டுச் செல்கின்ற பிரமாண்டமான உள்ளார்ந்த வளத்தை நாடு கொண்டிருக்கும்.

## 1.2 2008இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புக்கள்

### உண்மைத்துறை அபிவிருத்திகள்

**2008இல் 6.0 சதவீத பொருளாதார வளர்ச்சி இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் காணப்பட்ட 6.5 சதவீதம் கொண்ட கவர்ச்சிமிக்க வளர்ச்சி செயலாற்றத்தின் மூலம் பெறப்பட்டது.** எனினும், 2008இன் பிற்பகுதியில் பொருளாதாரம் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் பாதகமான வெளிநாட்டு அபிவிருத்திகளின் காரணமாக வளர்ச்சி 2008இன் இறுதிக் காலாண்டில் 4.3 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. எனினும், முன்னைய ஆண்டில் கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகளில் அவதானிக்கப்பட்ட 7 சதவீதத்திற்கும் கூடுதலான வளர்ச்சி வீதங்கள் குறைவான வெளிநாட்டுக் கேள்வி மற்றும் இவ்வாண்டின் நான்காம் காலாண்டில் உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாடு மெதுவடைந்தமையின் முக்கிய காரணத்தால் முறையே 5.9 சதவீதத்திற்கும் 5.6 சதவீதத்திற்கும் மெதுவடைந்தது. எனினும், வேளாண்மைத்துறை பொருட்களின் உயர் விலைகள் மற்றும் கிழக்கு மாகாணத்தின் மீளெழுச்சி என்பனவற்றினால் நன்மையடைந்து 7.5 சதவீதம் கொண்ட கவர்ச்சியான வீதத்தில்

**அட்டவணை 1.1**

**நிலையான விலைகளில் (2002) கைத்தொழில் மூலங்களின்படி மொத்தத் தேசிய உற்பத்தி**

| துறை | பெறுமதி (ரூ. மில்லியன்) | | மொ. உ.உ இன் பங்கின் (%) | | வீத மாற்றம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008(ஆ) |
| **வேளாண்மை** | **265,870** | **285,897** | **11.9** | **12.1** | **3.4** | **7.5** | **6.1** | **15.1** |
| வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, காட்டுத்தொழில் | 241,285 | 258,881 | 10.8 | 10.9 | 2.3 | 7.3 | 3.8 | 13.2 |
| மீன்பிடித் தொழில் | 24,585 | 27,016 | 1.1 | 1.1 | 15.6 | 9.9 | 2.3 | 1.8 |
| **கைத்தொழில்** | **635,199** | **672,790** | **28.5** | **28.4** | **7.6** | **5.9** | **31.6** | **28.3** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 42,631 | 48,090 | 1.9 | 2.0 | 19.2 | 12.8 | 4.8 | 4.1 |
| தயாரிப்பு | 394,233 | 413,680 | 17.7 | 17.5 | 6.4 | 4.9 | 16.8 | 14.6 |
| மின்வலு, எரிவாயு, நீர் | 55,339 | 56,847 | 2.5 | 2.4 | 4.6 | 2.7 | 1.7 | 1.1 |
| கட்டடவாக்கம் | 142,996 | 154,173 | 6.4 | 6.5 | 9.0 | 7.8 | 8.3 | 8.4 |
| **பணிகள்** | **1,331,587** | **1,406,814** | **59.6** | **59.5** | **7.1** | **5.6** | **62.3** | **56.6** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 546,145 | 571,911 | 24.5 | 24.2 | 6.1 | 4.7 | 22.3 | 19.4 |
| சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் | 9,199 | 8,741 | 0.4 | 0.4 | -2.3 | -5.0 | -0.1 | -0.3 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் | 286,764 | 310,029 | 12.8 | 13.1 | 10.5 | 8.1 | 19.2 | 17.5 |
| வங்கியியல், காப்புறுதி மற்றும் உண்மைச்சொத்து | 193,375 | 206,048 | 8.7 | 8.7 | 8.7 | 6.6 | 10.9 | 9.5 |
| வதிவிட உரிமை | 72,345 | 73,137 | 3.2 | 3.1 | 1.1 | 1.1 | 0.6 | 0.6 |
| அரச பணிகள் | 171,259 | 181,051 | 7.7 | 7.7 | 6.0 | 5.7 | 6.8 | 7.4 |
| தனியார் பணிகள் | 52,500 | 55,896 | 2.4 | 2.4 | 7.8 | 6.5 | 2.7 | 2.6 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **2,232,656** | **2,365,500** | **100.0** | **100.0** | **6.8** | **6.0** | **100.0** | **100.0** |
| **வெளிநாட்டிலிருந்தான தேறியகாரணி வருமானம்** | -24,365 | -53,117 | | | 15.3 | -118.0 | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | **2,208,291** | **2,312,383** | | | **7.1** | **4.7** | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

வளர்ச்சியடைந்தது. பணிகள்துறை மொத்த வளர்ச்சிக்கு 57 சதவீதம் கொண்ட ஆகக் கூடிய பங்களிப்பைத் தொடர்ந்து வழங்குகையில் கைத்தொழில் மற்றும் வேளாண்மைத்துறைகள் முறையே 28 சதவீதத்திற்கும் 15 சதவீதத்திற்கும் பங்களிப்புச் செய்தன. பணிகள் துறையில் முக்கிய செயலாற்றும் துறைகளாக போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல்; வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத் துணைத்துறைகள் விளங்கின. மொ.உ.உற்பத்தியின் 24 சதவீதப் பங்கைக் கொண்ட மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக துணைத்துறை வெளிநாட்டுத்துறை நிகழ்வுகளின் காரணமாக மெதுவடைந்தது. கைத்தொழில்துறையில், உலகளாவிய மெதுவடைவிலிருந்து தோன்றிய பாதகமான வெளிநாட்டு அபிவிருத்திகள் காரணமாக தயாரிப்புத்துறையின் குறைவான செயலாற்றம் கைத்தொழில்துறையில் அவதானிக்கப்பட்ட மெதுவடைவுக்கான முக்கிய பங்களிப்புக் காரணியாக விளங்கியது. வேளாண்மைத்துறை, தேயிலை உற்பத்தி அதன் வரலாற்றில் எந்தவொரு முதலரைப்பகுதிக்கான செயலாற்றத்தினையும் விட சிறந்த உற்பத்தியைப் பதிவு செய்தமை மற்றும் சிறுபோகத்தில் நெற்துறையும் அபரிமித அறுவடையைப் பதிவு செய்தமை என்பவற்றின் மூலம் கவர்ச்சிகரமான வளர்ச்சியுடன் சிறப்பாகச் செயலாற்றியது. மீன்பிடித்துறையின் செயலாற்றமும் முன்னைய ஆண்டின் உயர்தளம் மீதான வளர்ச்சி தொடர்ந்தமையால் மிகவும் பலம் வாய்ந்ததாகக் காணப்பட்டது. முதல் ஒன்பது மாதங்களின் பொருளாதார வளர்ச்சி 6.5 சதவீதத்தில் இருந்தமை தொழிலின்மை வீதம் 2006 மற்றும் 2007 இலான முறையே 6.5 சதவீதத்துடனும், 6.0 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 2008இல் 5.2 சதவீதம் கொண்ட குறைந்த அளவுடனான வீழ்ச்சியைப் பதிவு செய்வதற்கு காரணமாக விளங்கியது.

**2008இல் வேளாண்மைத்துறை பொருளாதார வளர்ச்சிக்கான சாதகமான பங்களிப்புடன் பன்முகத் தன்மையான செயலாற்றத்தைப் பிரதிபலித்தது. நெல், சீனி, மீன் மற்றும் இறப்பர் போன்ற துணைத்துறைகள் கணிசமான உயர் வளர்ச்சி வீதங்களைக் காட்டியது.** நெல் உற்பத்தியிலான குறிப்பிடத்தக்க வளர்ச்சி, நெல்லுக்கான உயர்ந்தளவான பண்ணை விலைகள், கிழக்கு மாகாணத்தில் அதிகரித்த பிரதேசத்தில் பயிர்ச்செய்கை மேற்கொண்டமை, உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசின் தேசிய நிகழ்ச்சித்திட்டம் நிறைவேற்றப்பட்டமை என்பவற்றின் காரணமாக பயிர் செய்யப்பட்ட காணிகளின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டதாகும். அதிகரித்த சீனி உற்பத்தி பெரும்பாலும் உற்பத்தியை அதிகரிப்பதற்கு சீனித் தொழிற்சாலைகளால் பின்பற்றப்பட்ட உபாயத்தால் விளைவிக்கப்பட்டிருக்கையில் மீன் உற்பத்தியின் அதிகரிப்பு பெரும்பாலும் சாதகமான வானிலை நிலைமை, விடுவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் மீன்பிடித் தொழிற்பாடுகளிலான அதிகரிப்பு அது போல் நீர் நிலைகளின் முகாமைத்துவம் தொடர்பாக சமூக பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டத்தின் ஊக்குவிப்பு, கட்டணமின்றி பெருமளவு மீன் குஞ்சுகளை விடுவித்தமை போன்றவற்றால் உந்தப்பட்டது. இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் மிகவும் கவர்ச்சிகரமான விலைகளால் அதிகரித்த நன்மையடைந்த இறப்பர் உற்பத்தி அதிகரித்த போதிலும், கேள்வியின் உலகளாவிய மெதுவடைவு மற்றும் வீழ்ச்சியடைந்து செல்லும் எண்ணெய் விலைகள் காரணமாக இயற்கை இறப்பரின் வீழ்ச்சியடைந்து செல்லும் விலைகள் என்பவற்றின் பின்னணியில் இரண்டாம் அரைப்பகுதியில் இறப்பர் உற்பத்தி சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**தேயிலை, தெங்கு, பால் மற்றும் பண்ணைத்தொழில் போன்ற வேளாண்மையின் துணைத்துறைகள் எதிர்பார்க்கப்பட்டதை விடக் குறைந்தளவான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இவ்வாண்டின் பிற்பகுதியில் கொழும்பு தேயிலை ஏலத்தில் தேயிலை விலைகளின் கூர்மையான திரும்பல் மற்றும் வீழ்ச்சியடைந்து செல்லும் விலைகளைத் தணிப்பதற்கு பின்பற்றப்பட்ட வழிமுறைகள் இவ்வாண்டின் இறுதியில் உற்பத்தியை பெருமளவில் வீழ்ச்சியடையச் செய்து இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் ஆற்றல்மிக்க வளர்ச்சி உத்வேகம் வீழ்ச்சியடைய வழிவகுத்தது. தெங்கு உற்பத்தியிலான வளர்ச்சி பெரும்பாலும் 2007இல் நிலவிய கடுமையான வரட்சி மற்றும் *வெலிகம இலைவாடல்* என அறியப்பட்ட புதிய தெங்கு நோய் என்பன காரணமாக ஏற்பட்டது. தேசிய பால் உற்பத்தியின் வளர்ச்சி மிகச் சிறிதாக இருந்தபோதிலும், சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் பால் உற்பத்தியில் சுயதேவையைப் பூர்த்தி செய்வதற்கான அரசின் கொள்கையுடன் இணங்கிச் செல்லும் வகையில் பாலின் உயர் உற்பத்தியைப் பெறுவதற்கு விலங்குகளைத் தரமுயர்த்தல் என்பவற்றின் காரணமாக தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பால் உற்பத்தியில் வியக்கத்தக்க அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டது. கோழி இறைச்சி உற்பத்தியின் வளர்ச்சி, விலங்குத் தீன் கலவையின் ஆக்கக் கூறுகளின் அதிகரித்த விலைகளால் விளைவிக்கப்பட்ட அதிகரித்த உற்பத்திச் செலவின் முக்கிய காரணமாக எதிர்பார்த்ததை விடக் குறைவாகக் காணப்பட்டது.

**ஏனைய வேளாண்மை ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி 2008இல் கலப்பான செயலாற்றத்தைக் காட்டியது.** கொக்கோ, கராம்பு, பாக்கு மற்றும் கோப்பியின் உற்பத்தி அதிகரிப்புகளைக் காட்டியிருக்கையில் வெற்றிலை, ஏலக்காய், மிளகு, கறுவா மற்றும் முந்திரிப்பருப்பின் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. குறிப்பாக, 2008இல் கராம்பு அறுவடை தனிச்சிறப்பு வாய்ந்த செயலாற்றத்தைக் காட்டியமைக்கு கராம்பின் நான்காண்டு உற்பத்தி வட்டத்தில் இவ்வாண்டு அமைந்து செழிப்பு அறுவடையைக் கொண்டிருந்தமையே காரணமாகும். இதேவேளை, வீழ்ச்சியடைந்த உலகக் கேள்வி மற்றும் இதனால் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி கறுவா உற்பத்தியை வீழ்ச்சியடையச் செய்திருக்கையில் மிளகு உற்பத்தி பிரதான பயிர்ச்செய்கைப் பிரதேசங்களிலான அளவுக்கதிகமான மழையாலும் இறக்குமதி செய்யும் நாடுகளால் விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகளாலும் பாதிப்படைந்தது.

**2008இன் முதலரைப்பகுதியில் வேளாண்மை உற்பத்திகளால் பெறப்பட்ட சாதகமான விலைகள் மூன்றாம் காலாண்டிலிருந்து ஆரம்பமான பொருட்களின் திடீர் உயர் விலை ஏற்றங்கள் இல்லாமற் போனதுடன் கூர்மையான நேர்மாற்று நிலையைக் காட்டின.** பெருந்தோட்டத்துறை

மற்றும் பெருந்தோட்டத்துறையல்லாத் துறைகள் இரண்டிலும் பாதிப்படைந்த வேளாண்மைத்துறைகளுக்கு எழுச்சியூட்டும் பொருட்டு 2008 திசெம்பரில் அறிவிக்கப்பட்ட பொருளாதார தூண்டல் பொதியினைத் தொடர்ந்து வரவு செலவுத்திட்டம் 2009 இனூடாக அரசு நிவாரணமளிக்கும் வழிமுறைகள் பலவற்றை எடுத்தது. இதன்படி, அரசு தீர்வை வீதங்களை மாற்றுவதற்கும் செஸ்வரியை அறிமுகப்படுத்தி திருத்தியமைப்பதற்கும் சுங்கத்தில் பிரயோகிக்கத்தக்க ஏனைய தீர்வைகளை அறிமுகப்படுத்துவதற்கும் வழிமுறைகளை மேற்கொண்டதுடன் அதற்குப் புறம்பாக உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதை நோக்காகக் கொண்டு "அப்பி வவமு - றட்ட நகெமு" என அழைக்கப்படும் "நாம் பயிர் செய்வோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" என்ற தொனிப்பொருளின் கீழ் 2007இல் ஆரம்பிக்கப்பட்ட அரசின் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை வலுப்படுத்துவதற்கு நிதியியல் உதவியை வழங்குவதற்கும் பல பரிகாரமளிக்கும் வழிமுறைகளை மேற்கொண்டது.

**கைத்தொழில்துறை முதல் ஒன்பது மாதங்களில் 6 சதவீதத்திற்கும் கூடுதலான வளர்ச்சியைப் பேணியதுடன் உலகளாவிய மெதுவடைவுடன் நான்காம் காலாண்டில் அது 5.2 சதவீதத்திற்கு மெதுவடைந்தமையின் விளைவாக 2008இல் 5.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** பிரதேச கைத்தொழில் மயமாக்கம் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள், தொடர்பான அமைச்சுக்களால் மேற்கோள்ளப்பட்ட பல வழிமுறைகளால் ஊக்குவிக்கப்பட்டன. பிரதேச கைத்தொழில் மயமாக்கத்தை வசதிப்படுத்துவதற்கு "நிபயும் சிறிலங்கா" என அழைக்கப்படும் "இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டது". , "கமட்ட கர்மாந்த" என அழைக்கப்படும் "கிராமத்துக்கு கைத்தொழில்" மற்றும் "நெகினகிற நவோதய" என அழைக்கப்படும் "கிழக்கின் உதயம்" போன்ற சிறப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. உலகளாவிய பொருளாதார மெதுவடைவால் பாதிக்கப்பட்ட குறிப்பிட்ட கைத்தொழில்களின் நீடித்து நிலைத்திருக்கும் தன்மையைப் பேணுவதை உதவுவதற்காக பல இறை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், இவ் வழிமுறைகள் இறப்பர், சோளம் போன்ற உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் பயன்பாட்டை ஊக்கப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது.

**புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் வகை வெளிநாட்டுக் கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக கூர்மையான மெதுவடைவை அனுபவித்தது.** எனினும், உலகளாவிய பொருளாதாரத்தின் மெதுவடைவுக்கு மத்தியிலும் கைத்தொழிலின் வருங்காலச் சவால்களை எதிர்கொள்வதற்கு ஆடை தயாரிப்பாளர்களால் பல வழிமுறைகள் மேற்கொள்ளப் பட்டன. இவ் வழிமுறைகள் குறைவான வலுப் பாவனை, நீரைப் பாதுகாத்தல், திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் குறைவான காபன் வெளிப்படுத்துகை என்பவற்றுக்கான உலகளாவிய அடிப்படை அளவுக் குறியீட்டை கவனத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. இரசாயனங்கள், பெற்றோலியம், நிலக்கரி இறப்பர் மற்றும் பிளாத்திக்கு என்பவற்றை தயாரிக்கும் கைத்தொழில்கள் முக்கிய கைத்தொழில் துறை நாடுகளில் உந்து ஊர்திக் கைத்தொழிலின் நலிவான செயலாற்றத்திலிருந்து எழுந்த குறைவடைந்த பன்னாட்டுக்


**அட்டவணை 1.2** **கூட்டுக் கேள்வியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும் - 2007 மற்றும் 2008**

| விடயம் | ரூ. பில்லியன் | | வளர்ச்சி % | | மொ.உ.உ.இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008(ஆ) | 2007(அ) | 2008(ஆ) |
| 1. உள்நாட்டுக் கேள்வி | 3,950.0 | 5,002.2 | 21.1 | 26.6 | 110.4 | 113.4 |
| 1.1 நுகர்வு | 2,949.7 | 3,787.4 | 20.9 | 28.4 | 82.4 | 85.9 |
| தனியார் | 2,403.2 | 3,073.7 | 20.9 | 27.9 | 67.2 | 69.7 |
| அரசு | 546.5 | 713.8 | 21.1 | 30.6 | 15.3 | 16.2 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்) | 1,000.3 | 1,214.8 | 21.7 | 21.4 | 28.0 | 27.5 |
| தனியார் | 807.4 | 928.8 | 14.8 | 15.0 | 22.6 | 21.1 |
| அரசு | 192.9 | 286.0 | 61.9 | 48.3 | 5.4 | 6.5 |
| 2. தேசிய வெளிநாட்டுக் கேள்வி | -371.3 | -591.7 | -14.8 | -59.3 | -10.4 | -13.4 |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,041.9 | 1,098.4 | 17.7 | 5.4 | 29.1 | 24.9 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,413.3 | 1,690.1 | 16.9 | 19.6 | 39.5 | 38.3 |
| 3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ) (1) + (2) | 3,578.7 | 4,410.6 | 21.8 | 23.2 | 100.0 | 100.0 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (3) - (1.1) | 629.0 | 623.1 | 26.1 | -0.9 | 17.6 | 14.1 |
| தனியார் | 686.7 | 711.6 | 20.7 | 3.6 | 19.2 | 16.1 |
| அரசு | -57.7 | -88.5 | 17.7 | -53.3 | -1.6 | -2.0 |
| 5. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -39.1 | -99.0 | 3.4 | -153.6 | -1.1 | -2.2 |
| 6. தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 245.0 | 277.7 | 23.8 | 13.3 | 6.8 | 6.3 |
| 7. தேசிய சேமிப்புக்கள் (4) + (5) + (6) | 834.9 | 801.8 | 27.2 | -4.0 | 23.3 | 18.2 |
| 8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி | | | | | | |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீடு (4) - (1.2) | -371.3 | -591.7 | | | -10.4 | -13.4 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7) - (1.2) | -165.4 | -413.0 | | | -4.6 | -9.4 |
| 9. அலுவல்சார் கொடைகளற்ற வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை (2) + (5) + (6) (இ) | -165.4 | -413.0 | | | -4.6 | -9.4 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானது
(ஆ) செல்மதி நிலுவை மதிப்பீடுகிலான வேறுபாடு திரட்டுவதிலுள்ள கால இடைவெளியிலுள்ள மாரணத்தினாலாகும்.

மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 1.2 சேமிப்பும் முதலீடும்




கேள்வி காரணமாக மோசமாக பாதிப்படைந்தன. மட்பாண்டக் கைத்தொழிலும் முக்கியமாக மூலப்பொருள் மற்றும் வலுவின் அதிகரித்த செலவிலிருந்து எழும் உயர் உற்பத்திச் செலவு; கட்டடவாக்கத் துறையிலிருந்து சுவர் ஓடுகளுக்கான குறைவடைந்த கேள்வி மற்றும், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாட்டிலிருந்து மேசைப் பொருட்களுக்கான குறைந்த கேள்வி என்பவற்றால் பாதிப்படைந்தது.


**சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத் துறையிலான சுருக்கத்துடன் பணிகள்துறை மெதுவடைந்தது. ஏனைய சகல துறைகளும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவான வளர்ச்சியைப் பதிவு செய்தன.** இம் மெதுவடைவு முக்கியமாக ஏற்றுமதி வர்த்தகம், போக்குவரத்து மற்றும் நிதியியற் பணிகள் என்பவற்றின் செயற்பாடுகளின் மெதுவடைவிலிருந்து தோன்றியது. எனினும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத்துறை மற்றும் போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத்துறையின் கூறுகளான முறையே இறக்குமதி வர்த்தகம் மற்றும் அஞ்சல் மற்றும் தொடர்பூட்டல் உயர் வீதங்களில் விரிவாக்கங்களைப் பதிவு செய்தன. உலகளாவிய பொருளாதார மெதுவடைவிலிருந்து தோன்றிய ஏற்றுமதி வர்த்தகத் துணைத்துறையிலான மெதுவடைவு பணிகள் துறையில் வளர்ச்சி உத்வேகத்திற்கான மெதுவடைவில் பெருமளவு பங்களிப்பைச் செய்தது. தொலைத் தொடர்பூட்டல் துறையிலான வளர்ச்சி அதிகரித்த தொலைபேசி அடர்த்தியால் பிரதிபலிக்கப்பட்டவாறு உள்ளடக்க பரப்பெல்லையில் ஏற்பட்ட விரிவாக்கத்தால் பெரிதும் உதவப்பட்டது.

## வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

**வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் சவால்மிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சூழல்களுக்கு மத்தியிலும் 2008இன் மூன்றாம் காலாண்டு வரை உறுதியாக முன்னேற்றமடைந்த போதிலும் இதன் பின்னர் உலகில் ஊடுருவிப் பரவிய நிதியியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் பின்னணியில் நேர்மாறாகியது.** வெளிநாட்டுத்துறை குறிகாட்டிகளில் அநேகமானவை; ஏற்றுமதிகள், தொழிலாளர் பணவனுப்பல்கள், சென்மதி நிலுவைகள், குறுகிய கால முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகள் என்பன உலகளாவிய நிதியியல் நெருக்கடி தீவிரமடைவதற்கு முன் ஆரம்ப எறிவுகூறல்களுக்கும் மேல் செயலாற்றின. பிரதான வர்த்தகப் பங்காளர்களின் பொருளாதார மெதுவடைவு, அதிகரித்துச் செல்லும் எண்ணெய் விலைகள் மற்றும் உற்பத்திச் செலவு, சார்பு ரீதியில் உறுதியான செலாவணி வீதம், உயர் வட்டி வீதங்கள் மற்றும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் கீழான சலுகைகளைப் புதுப்பித்தல் பற்றிய நிச்சயமற்ற தன்மை போன்ற பல சவால்களுக்கு மத்தியிலும் ஏற்றுமதிகள் இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 10 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. பன்னாட்டுச் சந்தைகளில் முன்பு நிகழாத பெற்றோலியம் மற்றும் பொருட்களின் உயர் விலைகள் காரணமாக இறக்குமதிச் செலவினம் 33.7 சதவீதத்தால் கூர்மையாக வளர்ச்சியடைந்ததுடன் 2008 செத்தெம்பர் இறுதியில் வர்த்தகப் பற்றாக்குறையை 88.1 சதவீதத்தால் விரிவடையச் செய்தது. விரிவடைந்த வர்த்தகப் பற்றாக்குறை முதல் ஒன்பது மாதங்களிலும் 20 சதவீதத்திற்கும் கூடுதலாக வளர்ச்சியடைந்த அதிகரித்த தனியார் பணவனுப்பல்களால் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை கட்டுப்படுத்த உதவியது. அரசு மற்றும் தனியார் துறைக்கான தேறிய வெளிநாட்டு குறுங்கால உட்பாய்ச்சல்கள், 2008 செத்தெம்பர் இறுதியில் ஐ.அ.டொலர் 1,004 மில்லியன் என்ற உச்ச அளைவ அடைந்ததுடன் மூலதன மற்றும் நிதியியல் கணக்கில் மிகையை உருவாக்க உதவியது. இது உயர் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை நிதியிட தேவைக்கும் அதிகமானதாக விளங்கி 2008 செத்தெம்பர் இறுதியில் மிகையை உருவாக்கியது.

**இவ்வாண்டில் முழு வெளிநாட்டு நிதியியல் தோற்றப்பாடு விரைவாக மாறியதுடன் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்கள் மோசமடைந்தமையினால் 2008 செத்தெம்பர் இறுதி வரை நாட்டினால் அடையப்பட்ட திருப்திகரமான வெளிநாட்டுத்துறைச் செயலாற்றம் நலிவடைந்தது.** ஐக்கிய அமெரிக்காவில் துணை வாடிக்கையாளர் ஈட்டுச் சந்தைக் கடன் வழங்கலால் தோற்றுவிக்கப்பட்ட நிதியியல் நெருக்கடி ஏனைய பிரதான சந்தைகளுக்கும் பரவி பின்பு உலகளாவிய நிதியில் குழப்ப நிலையை விளைவித்து படிப்படியாக உண்மைத் துறைகளுக்கும் கசிந்தது. ஐக்கிய அமெரிக்கா உள்ளிட்ட குறிப்பாக முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலான உலகளாவிய வளர்ச்சியில் விளைவிக்கப்பட்ட மெதுவடைவு வலு மற்றும் ஏனைய பொருட்களுக்கான உலகளாவிய கேள்வியின் கணிசமான வீழ்ச்சிக்கு இட்டுச் சென்றது. இவ்வாண்டின்

வரைபடம் 1.3 பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதியும் மசகெண்ணெய் இறக்குமதியின் சராசரி விலையும்




இறுதியில் உலகளாவிய கேள்வியிலான சுருக்கத்திலிருந்து பாதிப்படைந்த ஏற்றுமதிகள் இறுதிக் காலாண்டில் 2.8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இறுதிக் காலாண்டிலான பின்னடைவு 2008இல் ஏற்றுமதிகள் 6.5 சதவீதத்தால் வளர்ச்சியடைய வழிநடத்தியது. எனினும், இவ்வாண்டின் முற்பகுதியில் பன்னாட்டுச் சந்தையில் கவர்ச்சியான விலைகளை அடைந்ததன் முக்கிய காரணமாக வேளாண்மை ஏற்றுமதிகள் இதில் கிட்டத்தட்ட 70 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்தன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிடையேயான அதிகரித்த போட்டியின் முக்கிய காரணமாக ஐக்கிய அமெரிக்காவில் தைத்த ஆடை உற்பத்திகள் மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. ஐ.அ.டொலருக்கெதிராக யூரோவினதும் இசுரேலிங் பவுணினதும் கூர்மையான பெறுமதித் தேய்வு இலங்கையின் ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையை ஓரளவிற்கு இல்லாமற் செய்தது. இருப்பினும், ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதிகள் ஐக்கிய அமெரிக்காவின் பின்னடைவை எதிரீடு செய்து அதிகரித்தது. சேருமிடங்களின் நியதிகளில் ஐக்கிய அமெரிக்கா மிக முக்கியமான தனிச் சந்தையாக விளங்கியது. பிராந்தியமாக ஐரோப்பிய ஒன்றியம் அண்மைய ஆண்டுகளில் அதன் முக்கியத்துவத்தை தொடர்ந்து அதிகரித்தது.

**உலகளாவிய நிதியியல் நெருக்கடி வரலாற்று ரீதியில் உயர் விலைகளைக் காட்டிய பெற்றோலியம் உள்ளிட்ட அநேகமான பொருட்களின் விலைகள் 2008இன் நான்காம் காலாண்டிலிருந்து வீழ்ச்சியடைவதற்கு வழியமைத்தது.** விலைகளில் எதிர்பார்க்கப்படாத வீழ்ச்சி இறுதிக் காலாண்டில் இறக்குமதிச் செலவினம் மீது சாதகமான விளைவைக் கொண்டிருந்தது. முதல் மூன்று காலாண்டுகளில் 61.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த பெற்றோலிய இறக்குமதிகள் நான்காம் காலாண்டில் 25.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. பெற்றோலியத்துடன் ஏனைய இறக்குமதிகள் மீதான செலவினத்திலான குறைவடைவு இறக்குமதிகள் மிக விரைவாக மெதுவடைவதற்கு வழிநடத்தி இறுதிக் காலாண்டில் சமதளமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதன் விளைவாக, இறக்குமதிகள் 2008இல் 24.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. சகல முக்கிய வகை இறக்குமதிகளும் அதிகரித்து பரந்த அடிப்படையிலான விரிவாக்கத்தைப் பிரதிபலித்தன. ஏற்றுமதிகளிலான குறைந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2008இல் இறக்குமதிகள் மீதான செலவினத்தின் உயர் வளர்ச்சி 2008இல் வர்த்தகப் பற்றாக்குறையில் கணிசமான விரிவாக்கத்துக்குப் பங்களிப்புச் செய்தது. மொத்த வர்த்தகப் பற்றாக்குறை 2007இன் ஐ.அ.டொலர் 3.7 பில்லியனிலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 5.9 பில்லியனுக்கு 60.6 சதவீதத்தால் விரிவடைந்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகப் பற்றாக்குறை 2007இன் 11.3 சதவீதத்திலிருந்து 2008இல் 14.4 சதவீதத்திற்கு மோசமடைந்தது.

**பணிகள் துறையில், போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல், கணனி மற்றும் தகவல் பணிகள், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதிப் பணிகள் என்பவற்றிலான பலமான செயலாற்றம் பயணம் மற்றும் ஏனைய வியாபாரப் பணிகளிலான மெதுவடைவால் பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது.** சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சி உத்வேகம் 2008இல்

வரைபடம் 1.4 சென்மதி நிலுவை




மந்த நிலையிலேயே காணப்பட்டது. ஆண்டின் ஆரம்பத்தில் வருகைகள் பெரும்பாலும் சுற்றுலாப் பயணிகளை பெருமளவில் கொண்டிருக்கும் சில பிரதான நாடுகளால் வழங்கப்பட்ட பயண ஆலோசனைகளால் பாதிப்படைந்தது. ஆண்டு முன்னேறிச் செய்கையில், உலகளாவிய பொருளாதார மந்தநிலை ஆரம்பமானதுடன் வருகைகள் மேலும் வீழ்ச்சியடைந்தன.

**அலுவல்சார் ஒதுக்குகளின் முதலீட்டிலிருந்தான குறைந்த வட்டி வருமானம், ஐ.அ.டொலருக்கெதிராக யூரோ மற்றும் இசுரேலிங் பவுண் போன்ற பிரதான நாணயங்களின் கூர்மையான பெறுமானத் தேய்வு காரணமாக வெளிநாட்டு ஒதுக்குகளில் ஏற்பட்ட பெறுமதி இழப்புக்கள் என்பன காரணமாக தேறிய காரணி வருமானம் 2008இல் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, வெளிநாட்டு முதலீட்டாளர்களால்** நாட்டிற்கு வெளியே அனுப்பப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீட்டுத் தொழில் முயற்சிகளின் இலாபங்களிலும் பங்கிலாபங்களிலும் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பால் வருமானக் கணக்கிலான வெளிப்பாய்ச்சல்கள் அதிகரித்தன. எனினும், இம் முதலீட்டாளர்கள் ஏற்கனவே உள்ள தொழிற்பாடுகளை விரிவாக்குவதற்காக தமது இலாபங்களையும் பங்குலாபங்களையும் மீள முதலீடு செய்தமையின் காரணமாக, இவ் வெளிப்பாய்ச்சல்கள் நிதியியல் கணக்கின் உட்பாய்ச்சல்களை எதிரீடு செய்தன.

**தொழிலாளர் பணவனுப்பல்கள் உட்பாய்ச்சல்களின் பிரதான மூலமாக தொடர்ந்து விளங்கி 2008இன் வர்த்தகப் பற்றாக்குறையும் ஏறத்தாழ 50 சதவீதத்தினை நிதியிட்டது.** தொழிலாளர் பணவனுப்பல்கள் 2007இன் ரூ.2,502 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2008இல் உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 2,918 மில்லியனை அடைந்தது. இதற்கு முக்கிய காரணங்களான வெளிநாட்டுத் தொழிலுக்காகச் செல்லும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு, எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் வருமான மட்டத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் சராசரிக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, உயர் கூலியைக் கொண்ட நாடுகளுக்கு அதிகரித்த புலம்பெயர்வு என்பன விளங்கின. முன்னொருபோதுமில்லாத உயர் இறக்குமதிச் செலவினத்தால் வழிநடத்தப்பட்ட அதிகரித்த வர்த்தகப் பற்றாக்குறை காரணமாக

நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2007இன் ஐ.அ.டொலர் 1,401 மில்லியனிலிருந்து 2008இல் ஐ.அ.டொலர் 3,775 மில்லியனுக்கு இரு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியின் நியதிகளில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2007இன் மொ.உ.உற்பத்தியின் 4.3 சதவீதத்திலிருந்து 2008இல் மொ. உ.உற்பத்தியின் 9.3 சதவீதத்திற்கு மோசமடைந்தது.

**2008இன் முதல் ஒன்பது மாதங்களில் முன்னெப்போதுமில்லாத உயர் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை அளவுக்கும் மிஞ்சி எதிரீடு செய்த மூலதன மற்றும் நிதியியற் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள் உலகளாவிய நிதியியல் நெருக்கடி தீவிரமடைந்ததுடன் பின்பு எதிர்பாராதவாறு நேர்மாறாகியது.** மீள்முதலீட்டிற்காக வைத்திருக்கப்பட்ட வருவாய்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் சாதனைமிக்க உயர்மட்டங்களை அடைந்தன. கடன்கள் மற்றும் கொடைகள் இரண்டையும் உள்ளடக்கிய அரசுக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் உலகளாவிய நிதியியல் நெருக்கடி காரணமாக வெளிநாடுகளால் நிதியிடப்பட்ட செயற்றிட்டங்களுக்கான இணைக்கிணை நிதியங்களின் பற்றாக்குறை காரணமாக 2008இல் வீழ்ச்சியடைந்தன. இவ்வாண்டின் இறுதியில் உலகளாவிய நிதியியல் நெருக்கடி தீவிரமடைந்ததன் விளைவாக சில வர்த்தகக் கடன்கள் கிடைக்காத போதிலும் அரசு 2007இன் ஐ.அ.டொலர் 1.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2008இல் ஐ.அ.டொலர் 1.4 பில்லியன் பெறுமதியான கடன்களையும் கொடைகளையும் திரட்டக் கூடியதாகவிருந்ததுடன் இதில் ஐ.அ.டொலர் 500 மில்லியன் நாட்டுக்கான முறியின் பெறுகைகளை உள்ளடக்கியிருந்தது. கடன் உட்பாய்ச்சல்களின் பெரும்பகுதி சலுகை அடிப்படையிலான நியதிகளில் இருந்ததுடன் இது கொழும்பு துறைமுகத்தின் விரிவாக்கம், தென்பகுதி அதி விரைவுப்பாதை மற்றும் புதிய அம்பாந்தோட்டைத் துறைமுகம் போன்றவற்றின் விரிவாக்கம் போன்றன உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலை நோக்கி நெறிப்படுத்தப்பட்டது.

**குறுகிய கால உட்பாய்ச்சல்கள் 2008இல் மூலதன மற்றும் நிதியியற் கணக்கிலான மாற்றங்களின் முக்கிய உந்துசக்தியாக விளங்கின.** மூலதனக் கணக்கை மேலும் தாராளமயப்படுத்தும் ஒரு பகுதியாக 2008 மேயிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் பெறுமதியின் ஆகக் கூடியது 10 சதவீதம் வரை முதலிடுவதற்கு அரசு வெளிநாட்டவர்களை அனுமதித்தது. இதன் விளைவாக, வெளிநாட்டவர்கள் வசமிருந்த வெளிநின்ற திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் முதலீடுகள் 2008 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 641 மில்லியன் கொண்ட உச்ச மட்டத்தை அடைந்தது. எனினும், உலகளாவிய நிதியியல் நெருக்கடி தீவிரமடைந்ததுடன் இது கடுமையான வீழ்ச்சியால் பாதிப்படைந்ததுடன் 2008 செத்தெம்பர் வரை பதிவு செய்யப்பட்ட உட்பாய்ச்சல்கள் திடீரென நேர்மாறான நிலையை அடைந்து 2008 இறுதியில் ஐ.அ.டொலர் 213 மில்லியன் கொண்ட வெளிப்பாய்ச்சலாக மாற்றமடைந்தது. இது, உலகளாவிய

**அட்டவணை 1.3 வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்**

| விடயம் | ஐ.அ.டொ. மில் 2007 | ஐ.அ.டொ. மில் 2008(அ) | % மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **7,640** | **8,137** | **6.5** |
| வேளாண்மை உற்பத்திகள் | 1,507 | 1,855 | 23.1 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 5,967 | 6,159 | 3.2 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 128 | 122 | -4.2 |
| ஏனைய ஏற்றுமதிகள் | 38 | - | -100.0 |
| **இறக்குமதிகள்** | **11,296** | **14,008** | **24.0** |
| நுகர்வுப் பொருட்கள் | 2,002 | 2,549 | 27.3 |
| இடைநிலைப் பொருட்கள் | 6,517 | 8,341 | 28.0 |
| முதலீட்டு பொருட்கள் | 2,685 | 2,979 | 10.9 |
| ஏனையவை | 92 | 139 | 51.1 |
| ***வர்த்தக நிலுவை*** | ***-3,656*** | ***-5,871*** | ***60.6*** |
| **பணிகள், தேறிய** | **302** | **402** | **33.1** |
| பெறுகைகள் | 1,775 | 2,003 | 12.8 |
| கொடுப்பனவுகள் | 1,472 | 1,601 | 8.8 |
| **வருமானம், தேறிய** | **-358** | **-972** | **171.5** |
| பெறுகைகள் | 449 | -32 | -107.1 |
| கொடுப்பனவுகள் | 807 | 940 | 16.5 |
| **நடைமுறை மாற்றல்கள்,தேறிய** | **2,311** | **2,666** | **15.4** |
| தனியார் பணவனுப்பல், தேறிய | 2,214 | 2,565 | 15.9 |
| பெறுகைகள் | 2,502 | 2,918 | 16.6 |
| கொடுப்பனவுகள் | 288 | 353 | 22.6 |
| உத்தியோகபூர்வ மாற்றல்கள், தேறிய | 97 | 101 | 4.1 |
| **நடைமுறைக் கணக்கு நிலுவை** | ***-1,401*** | ***-3,775*** | ***169.5*** |
| **மூலதனக் கணக்கு** | ***269*** | ***291*** | ***8.2*** |
| **நிதியியல் கணக்கு** | ***1,828*** | ***1,483*** | ***-18.9*** |
| நேரடி முதலீடு, தேறிய | 548 | 691 | 26.1 |
| உட்பாய்ச்சல்கள் | 603 | 752 | 24.7 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 55 | 62 | 12.7 |
| தனியார் நீண்டகாலம், தேறிய | 31 | 74 | 138.7 |
| உட்பாய்ச்சல்கள் | 199 | 265 | 33.2 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 168 | 191 | 13.7 |
| அரசு, நீண்டகாலம், தேறிய | 672 | 252 | -62.5 |
| உட்பாய்ச்சல்கள் | 1,290 | 1,059 | -17.9 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 618 | 807 | 30.6 |
| அரசு, குறுங்காலம், தேறிய | 372 | -213 | -157.3 |
| குறுங்காலம்: | 205 | 679 | 231.2 |
| இதில் பட்டியலிடப்பட்ட முதலீடு, தேறிய | 101 | 60 | -40.6 |
| தவறுகளும் விடுபாடுகளும் | -165 | 777 | |
| **மொத்த நிலுவை** | ***531*** | ***-1,225*** | |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (ஆ.தீ.ஓ தவிர்ந்த) | 3,063 | 1,753 | |
| மாதத்துக்கான இறக்குமதிகள் | 3.3 | 1.5 | |
| மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் (ஆ.தீ.ஓ தவிர்ந்த) | 4,511 | 2,992 | |
| மாதத்துக்கான இறக்குமதிகள் | 4.8 | 2.6 | |
| படுகடன்களுக்கான சட்ட இசைவுத் தாமதம் | 106.8 | 113.4 | |
| ஏற்றுமதி விலைச் சுட்டெண் | 113.6 | 134.9 | |
| இறக்குமதி விலைச் சுட்டெண் | 94.0 | 84.1 | |
| **செலாவணி வீதங்கள் (சராசரி)** | | | உயர்வு(+), தேய்வு(-) |
| ரூ./ஐ.அ.டொ. | 110.62 | 108.33 | 2.1 |
| ரூ./யென் | 0.94 | 1.05 | -10.5 |
| ரூ./யூரோ | 151.63 | 159.32 | -4.8 |
| ரூ./ஸ்டேர்லிங் பவுண் | 221.46 | 200.73 | 10.3 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கொடுகடன் இறுக்கத்தின் மத்தியில் முதலீட்டாளர்கள் நிரம்பல் மற்றும் திரவத்தன்மையில் கவனம் செலுத்தி நிதியங்களை நகர்த்தியதன் காரணமாக இறுதிக் காலாண்டில் ஐ.அ.டொலர் 430 மில்லியன் கொண்ட தொகை மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டதால் ஏற்பட்டதாகும். இம் முதலீடுகளின் திரவத்தன்மையால்

எழும் திடீர் வெளிநாட்டுச் செலாவணித் தேவைப்பாட்டைச் சமாளிப்பதற்கும் முதலீட்டாளர்களிடையே நம்பகத்தன்மையை உருவாக்குவதற்கும் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தேவையற்ற அழுத்தத்தை ஏற்படுத்தாது வெளிநாட்டு முதலீட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் நிதியங்களின் மீளப் பெற்றுக் கொள்ளலை வசதிப்படுத்துவதற்கு அத்தகைய நோக்கத்திற்காக உருவாக்கப்பட்ட கடன்கரைப்பு நிதியத்தை மத்திய வங்கி பயன்படுத்தியது.

**தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வெளிநாட்டு முதலீடு 2008இல் அதிகரித்தது.** குறிப்பாக, வலு மற்றும் மின்வலு, தொலைத் தொடர்பூட்டல் மற்றும் நிதித்துறைகளில் தனியார்துறை தொழில் முயற்சிகளால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட தவணைக் கடன்பாடுகள் 2008இல் உள்நாட்டு வட்டி வீதங்கள் சார்பு ரீதியில் உயர்ந்து காணப்பட்டமையால் அதிகரித்தன. பட்டியலிடப்பட்ட முதலீடுகள், தனியார் குறுங்கால கொடுகடன்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் சொத்துக்களிலும் பொறுப்புக்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவற்றை உள்ளடக்கிய குறுகிய கால மூலதன உட்பாய்ச்சல்களும் பெற்றோலிய இறக்குமதிகளுக்காக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஈரானிய தொடர் கொடுகடன் வசதி நீடிக்கப்பட்டமையின் பெருமளவு காரணத்தால் கணிசமானளவில் அதிகரித்தன. கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான மொத்த உட்பாய்ச்சல்கள் சாதனைமிக்க மட்டத்திற்கு அதிகரித்த போதிலும், தேறிய பட்டியலிடப்பட்ட முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2008இல் வீழ்ச்சியடைந்தன.

**இவ் அபிவிருத்திகளின் விளைவாக, 2008 யூலை இறுதியளவில் ஐ.அ.டொலர் 515 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவு செய்த சென்மதி நிலுவைகள் 2008 இறுதியில் ஐ.அ.டொலர் 1,225 மில்லியன் கொண்ட பற்றாக்குறையாக மாறின.** இதனால், முதல் ஒன்பது மாதங்களில் 3 மாத இறக்குமதிக்குச் சமனான வசதியான மட்டத்தில் பேணப்பட்ட வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் உலகளாவிய நிதியியல் நெருக்கடி தீவிரமானதுடன் மொத்த வெளிப்பாய்ச்சல்கள் உட்பாய்ச்சல்களைவிட உயர்ந்து காணப்பட்டமையால் இதன் பின்பு படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. 2008 இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் கொடுப்பனவுகளுடனும் அது இல்லாமலும் முறையே ஐ.அ.டொலர் 2,561 மில்லியனுக்கும் ஐ.அ.டொலர் 1,753 மில்லியனுக்கும் வீழ்ச்சியடைந்தன.

**நாட்டின் ஒதுக்கு மட்டங்களைக் கட்டியெழுப்புவதற்கு மத்திய வங்கி 2009இல் பல வழிமுறைகளை மேற்கொண்டது.** மத்திய வங்கி, “சுவப்” என அழைக்கப்படும் நாணய பரிமாற்றல் ஒழுங்குமுறை ஏற்பாடுகளுக்காக மூன்று நாடுகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. அத்தகைய ஒழுங்குமுறைகளின் கீழ் மத்திய வங்கி 2009இல் இதுவரை ஐ.அ.டொலர் 200 மில்லியனைப் பெற்றுள்ளது. இத்துடன், ஒதுக்குகளை அதிகரிப்பதற்கு ஏனைய பல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. புலம்பெயர்ந்த இலங்கையரிடையே திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் முதலீடுகளை ஊக்குவித்தல், வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மீது அக் கணக்குகளில் உயர்ந்தளவு உட்பாய்ச்சலை ஊக்குவிப்பதற்கு உழைக்கப்பட்ட வட்டி மீது ரூபாவில் செலுத்தப்பட்ட 20 சதவீத மிகையூதிய வட்டியின் அறிமுகம் என்பன அத்தகைய முன்னெடுப்புக்களில் சிலவாகும். மேலும், இலங்கைக்கு உதவுவதற்கு பன்னாட்டு நாணய நிதியத்தின் உதவிக்குப் பதிலிறுக்கும் வகையில் அரசு பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து துணைநில் ஒழுங்குவசதியைக் கோரியது.

**கடந்த சில ஆண்டுகளில் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சியடைந்து செல்லும் போக்குடன் நாட்டின் நடுத்தர மற்றும் நீண்டகால மற்றும் குறுகிய கால படுகடனை உள்ளடக்கியுள்ள மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2007இன் 43.2 சதவீதத்திலிருந்து 2008இல் மொ.உ.உற்பத்தியின் 37.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** ஐ.அ.டொலர் நியதிகளில் மொத்த வெளிநாட்டுப் படுகடன் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பெருமளவு குறுகிய காலப்படுகடன் மற்றும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களால் அடிப்படையில் உந்தப்பட்டு 2008இல் ஐ.அ.டொலர் 15,107 மில்லியனுக்கு கிட்டத்தட்ட 8.0 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த வெளிநாட்டுப் படுகடன் மற்றும் வங்கித்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டுப் படுகடனும் பொறுப்புக்களும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2007இன் 51 சதவீதத்திலிருந்து 2008இல் 43.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொ. உ.உற்பத்தியின் சதவீதமாக வங்கித்தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் முழுமையான நியதிகளில் 6.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த போதிலும், இது ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக 2008 இறுதியில் ஐ.அ.டொலர் 2,669 மில்லியனுக்கு 7.1 சதவீதத்தால் அதிகரித்தன.

**அரச படுகடன் வெளிநாட்டுப் படுகடனின் முக்கிய பங்கிற்கு தொடர்ந்து வகை கூறியது.** மொத்த நடுத்தர மற்றும் நீண்ட தவணைப் படுகடனில் அரச படுகடன் 92 சதவீதத்திற்கு வகை கூறுகையில் எஞ்சிய பங்கு தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் கடன்பாடுகளையும் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான படுகடன் கடப்பாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தியது. அரசின் மொத்த வெளிநாட்டுப் படுகடனில் சலுகை ரீதியிலான படுகடன் கிட்டத்தட்ட 86 சதவீதத்திற்கு வகை கூறியது. நாடு குறைந்த நடுத்தர வருமானம் பெறும் நிலைக்கு வந்தமை பல்புடை நிதியியல் நிறுவனங்களிலிருந்தான சலுகை ரீதியிலான கடனின் கிடைப்பனவை குறைத்துள்ளதுடன் அரசின் அபிவிருத்தி செயற்றிட்டங்களை நிதியிடுவதற்கு சலுகை ரீதியற்ற கடன்களைத் தேடுவதற்கு அரசைக் கட்டாயப்படுத்தியது. எனினும், அரசு அதன் சலுகை ரீதியிலான படுகடன் இருப்பை குறைந்த இடர்நேர்வு மட்டத்தில் பேணி படுகடன் பணிகள் மீதான அரசின் பணியைக் குறைத்தது.

**மொத்த வெளிநாட்டு படுகடன் பணிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய கடன் தீர்ப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் வணிக ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்களின்**


**சதவீதமாக 2007இன் 13.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 15 சதவீதத்திற்கு அதிகரித்தன.** இது பெரும்பாலும் அரசின் வர்த்தகக் கடன்பாடுகளின் அதிகரித்த படுகடன் பணிக்கொடுப்பனவுச் செலவு மற்றும் 2005இல் சுனாமியின் அடிப்படையில் படுகடனுக்கான சட்ட இசைவுத் தாமதம் காரணமாக ஒரு முறை மாத்திரம் மேற்கொண்ட குறைப்பிற்குப் பின்பு 2006 இலிருந்து மீள் அட்டவணையிடப்பட்ட படுகடனின் மீள்கொடுப்பனவுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதாலும் ஏற்பட்டது.

**2008இல் மத்திய வங்கியின் செலாவணி வீதக் கொள்கை உலகளாவிய நாணயச் சந்தைகளில் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்தளவு தளம்பலுக்கு மத்தியிலும் முக்கியமாக உறுதிப்பாட்டில் கவனம் செலுத்தியதுடன் வெளிநாட்டுப் போட்டித்தன்மையைப் பேணுவதற்கு படிப்படியான பெறுமதித் தேய்வையும் அனுமதிக்கிறது.** வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அளவுக்கதிகமான தளம்பலைத் தணிப்பதற்கும் ரூபாவின் தேவையற்ற பெறுமதி உயர்வால் பாதிக்கப்படாது ஏற்றுமதித்துறையின் போட்டித்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் மத்திய வங்கி உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியை கிரமமாக ஈர்த்ததன் மூலம் 2008இன் முற்பகுதியில் அதன் ஒதுக்கு நிலையைப் பலப்படுத்தியது. உலகளாவிய நிதியியல் நெருக்கடி தீவிரமடைந்ததைத் தொடர்ந்து திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளிலான குறுகிய கால முதலீடுகள் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டமை மற்றும் உயர் பெறுமதி கொண்ட பெற்றோலியச் செலவுகளின் கொடுப்பனவுகள் காரணமாக வெளிநாட்டுச் செலாவணியின் பாரிய வெளிப்பாய்ச்சல்கள் 2008இன் இறுதிக் காலாண்டில் செலாவணி வீதம் பெறுமதி தேய்வடைவதில் பெருமளவு அழுத்தத்தை ஏற்படுத்தியது. இதன்படி, மத்திய வங்கி 2008இன் இறுதிக் காலாண்டில் அளவுக்கதிகமான தளம்பலைத் தவிர்ப்பதற்கு சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்கியது. இதன் விளைவாக, 2008 இறுதியில் ஐ.அ.டொலருக்கெதிரான ரூபாவின் பெறுமானத் தேய்வு 2007இன் கிட்டத்தட்ட 0.93 சதவீத பெறுமானத்தேய்வுடன் ஒப்பிடுகையில் 3.91 சதவீதமாக விளங்கியது.

### இறைத்துறை அபிவிருத்திகள்

**வரவு செலவுத்திட்டம் 2008இல் அரசின் இறைத்துறை உபாயம் வரவு செலவுத்திட்டத்துடன் முன்வைக்கப்பட்ட “நடுத்தரகால பேரண்ட இறைக் கட்டமைப்பு: 2008 - 2011”இல் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதில் கவனம் செலுத்தியது.** நடுத்தரகால பேரண்ட இறைக் கட்டமைப்பு பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் உயர் மட்டத்தை அடைவதை நோக்காகக் கொண்ட “பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பு” இல் தெளிவாகக் கூறப்பட்ட அரசின் ஒட்டுமொத்த அபிவிருத்தி உபாயத்தை தொடர்ந்து அடிப்படையாகக் கொண்டிருக்கும். வரவு செலவுத்திட்டம் 2008இன் இறை இலக்குகளை அடைவது பல காரணங்களால் சவால்மிக்கதாக விளங்கியது; முதலாவதாக, பயங்கரவாதத்திற்கெதிரான தீவிரமான போருக்காகவும் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி வேலையை விரைவுபடுத்துவதற்காகவும் அதிகரித்த ஒதுக்கீடுகளின் தேவை. இரண்டாவதாக, 2008 நடுப்பகுதி வரை நிலவிய சார்பு ரீதியிலான உயர் பணவீக்கம் மற்றும் ஆண்டு முழுவதும் உள்நாட்டுச் சந்தையில் நிலவிய சார்பு ரீதியிலான உயர் வட்டி வீதங்கள். மூன்றாவதாக, 2008 யூலை இறுதிவரை நிலவிய பெற்றோலியம், வளமாக்கி மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் உயர் பன்னாட்டு விலைகள். நான்காவதாக, 2008 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து தீவிரமடைந்த உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாடுகளில் மெதுவடைவை விளைவித்தமை, அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் மற்றும் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகளுக்காக எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகள் உண்மையிலேயே குறைந்து போதல். இவை வரவு செலவுத்திட்டம் 2008இன் அடிப்படை எடுகோள்களில் விலகலை இட்டுச் செல்வதால் இலக்கிடப்பட்ட இறை வெளிப்பாட்டைப் பாதித்தன.


வரைபடம் 1.5 அரசிறை, செலவினம் மற்றும் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை




**பாதகமான இவ் அபிவிருத்திகளுக்கு மத்தியிலும் இறைத்துறை 2008இல் கலப்பான செயலாற்றத்தை எடுத்துக் காட்டியது.** 2008இன் முதல் ஒன்பது மாதங்களில் நிலவிய சார்பு ரீதியில் சிறந்த இறைச் செயலாற்றம் இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் கணிசமானளவில் மாற்றமடைந்ததுடன் சில முக்கிய இறைக் கூட்டுக்களின் வருடாந்த வெளிப்பாட்டில் விலகலை ஏற்படுத்தியது. இவ்வாண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் மொத்த அரசிறை சார்பு ரீதியில் 22 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் தொடர்ந்து அதிகரித்த வேளையில் மொத்த செவினமும் தேறிய கடன் வழங்கலும் 20 சதவீதத்தினால் அதிகரித்தன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களுக்கிடையேயான நிதியிடல் கலவை ஓரளவு சிறந்து விளங்கியதுடன் அரசு 2008 செத்தெம்பர் வரை மத்திய வங்கிக்கு வெளிநின்ற படுகடனை தொடர்ந்து மீளச் செலுத்தியது.

**2008 செத்தெம்பர் நடுப்பகுதியளவிற்குப் பின்பு மோசமடைந்த உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் காரணமாக இச் சாதகமான அபிவிருத்திகள் இவ்வாண்டின் பிற்பகுதியில் விரைவாக மாற்றமடைந்தன.** இதன் விளைவாக, பெயரளவு

வரைபடம் 1.6 மொ.உ.உ.இன் சதவீதமாக அரச படுகடன்





நியதிகளிலான மொத்த வருடாந்த அரசிறை 16 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்தது. இது, ஊர்தி இறக்குமதிகளின் குறைந்த அளவு மற்றும் பெறுமதி, நேரடி மற்றும் மறைமுக வரி இரண்டிலுமிருந்தான அரசிறையில் வீழ்ச்சியை ஏற்படுத்திய உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாடுகளிலான மெதுவடைவு என்பவற்றின் காரணமாக பன்னாட்டு வர்த்தகம் தொடர்பான வரிகளில் ஏற்பட்ட கூர்மையான வீழ்ச்சியால் ஏற்பட்டது. பெயரளவு நியதிகளிலான மீண்டெழும் செலவினம் வரவு செலவுத்திட்ட இலக்கை விஞ்சிய போதிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. மீண்டெழும் செலவினம் விஞ்சிக் காணப்பட்டமை முக்கியமாக சம்பளங்கள் மற்றும் கூலிகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள், வளமாக்கி உதவுதொகை, பயங்கரவாத செயற்பாடுகளை ஒழித்தல் மற்றும் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் செயற்பாடுகளை ஒழித்தல் மற்றும் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் தீவிரப்படுத்தப்பட்ட மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி வேலை என்பவற்றில் எதிர்பார்க்கப்பட்ட செலவினத்தை விட உயர்ந்து காணப்பட்டமையால் ஏற்பட்டது. இருந்தபோதிலும், அரச முதலீடு மொ.உ.உற்பத்தியின் 6.0 சதவீதத்தில் பேணப்பட்டமை, முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட 6.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் மிகச் சிறிய வீழ்ச்சியை மட்டுமே பிரதிபலித்ததுடன் இடர்பாடுள்ள நிதியியல் நிலைமைகளின் கீழ் பாராட்டத்தக்க சாதனையாகும். இச் செயலாற்றம் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களைத் தொடர்ந்து மேற்கொள்ளல் கிராமிய மக்களுக்கு அதிகாரமளிப்பதை நோக்காகக் கொண்ட பல எண்ணிக்கையான மாகாண மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்பாடுகளின் நடைமுறைப்படுத்தல் என்பவற்றினூடாக அடையப்பட்டது. எனினும், அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றம் வெளிநாட்டு வர்த்தக நிதியிடலின் குறைந்த பாய்ச்சல் மற்றும் செயற்றிட்டங்களின் முன்னுரிமைப்படுத்தல் மற்றும் நிதியங்கள் விடுவிக்கப்படுவதைத் தேவைப்படுத்திய அரசின் அரசிறையில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாக எதிர்பார்ப்புக்களை விட குறிப்பிடத்தக்களவில் குறைவாகக் காணப்பட்டது. இவ் அபிவிருத்திகளின் இணைந்த விளைவாக 2008இல் மொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை ஆரம்ப இலக்கான 7.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டைப் போலவே மொ.உ.உற்பத்தியின் 7.7 சதவீதமாக விளங்கியது.

**2008இல் மொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் நிதியிடல் கலவை ஆரம்ப வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடுகையில் கணிசமான மாற்றத்தைப் பிரதிபலித்தது.** பன்னாட்டு நிதியியல் சந்தைகளிலான இறுக்கமான திரவத்தன்மைக்கு மத்தியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு அரசு உள்நாட்டுக் கடன்பாடுகள் மீது கூடியளவில் தங்கியிருக்க முடிவு செய்தது. இதன்படி, தேறிய உள்நாட்டு நிதியிடலை மொ.உ.உற்பத்தியின் 7.1 சதவீதத்திற்குக் கணிசமானளவில் அதிகரித்ததுடன் வெளிநாட்டு மூலங்களிலிருந்தான தேறிய நிதியிடல் இலக்குகளைவிட குறிப்பிடத்தக்களவில் குறைவாக விளங்கியதுடன் மொ.உ.உற்பத்தியில் 0.6 சதவீதத்திற்கு வகை கூறியது. உள்நாட்டு வங்கியல்லாத்துறையில் மூலவளங்களின் மட்டுப்படுத்தப்பட்ட கிடைப்பனவு மற்றும் அரச பிணையங்களில் நிலவிய சார்பு ரீதியிலான உயர் வட்டி வீதங்கள் என்பவற்றின் முக்கிய காரணத்தால் வங்கி நிதியிடலை நாடுதல் அதிகரித்தது. 2008இல் வங்கித்தொழில் முறைமையிலிருந்தான மொத்தக் கடன்பாடுகளில் கிட்டத்தட்ட நான்கில் மூன்று பங்கு இவ்வாண்டின் நான்காம் காலாண்டில் மேற்கொள்ளப்பட்டது. இதேவேளை, மொ.உ.உற்பத்திக்கான அரசின் வெளிநின்ற படுகடன் விகிதம் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து பெரும்பாலும் பெயரளவு படுகடனிலான வளர்ச்சியை விட பெயரளவு மொ.உ.உற்பத்தியின் உயர் வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

### நாணயத்துறை அபிவிருத்திகள்

**பணவீக்கம் 2008இன் நடுப்பகுதியிலான 28.2 சதவீதம் கொண்ட உச்சமட்டத்திலிருந்து 2008இல் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 14.4 சதவீதத்தால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தமைக்கு, முதலாவதாக மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட தொடர்ச்சியான இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகள் மற்றும் இரண்டாவதாக 2008 நடுப்பகுதியளவில் பன்னாட்டு பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட கூர்மையான வீழ்ச்சி காரணமாக அமைந்தன.** பணவீக்கத்திலான கணிசமான மெதுவடைவு சந்தைத் திரவத்தன்மையைக் கட்டுப்படுத்துவதற்கு கணியம் சார் இலக்குகளில் மத்திய வங்கியின் உபாயம் கவனம் செலுத்தியதை உறுதிப்படுத்தியதுடன் இதனூடாக சந்தை வீதங்களை விரைந்த வீதத்தில் சீராக்குவதற்கு அனுமதித்தமை உயர் பணவீக்கச் சூழலில் கூடியளவு

வரைபடம் 1.7 ஒதுக்குப்பணத்தினதும், விரிந்த பணத்தினதும் வளர்ச்சி



சிறப்புக்குறிப்பு 1

## உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் பின்னணியில் இலங்கை

2007இல் ஐக்கிய அமெரிக்க துணை முதன்மை ஈட்டுச் சந்தையில் தோற்றம் பெற்ற தற்போதைய உலக நிதியியல் நெருக்கடியானது துரித கதியில் நிதிச் சந்தைகளில் பரவியது. இது ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்காவோடு நெருங்கிய நிதியியல் தொடர்புகளையுடைய வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களுக்கும் அதனைத் தொடர்ந்து உலகம் பூராவும் சிதறிப் பரவியது. முன்னெப்பொழுதுமில்லாத மட்டத்தை அடைந்த விலைகளிலான ஏற்ற இறக்கத்தால் ஏற்பட்ட தற்போதைய உலகப் பொருளாதார நெருக்கடியைப் பின்தொடர்ந்த நிதியியல் நெருக்கடி தற்போதைய உலக பொருளாதார ஒழுங்கு நிறுவியதற்குப் பின்னர் அனுபவிக்கப்படாததொன்றாக விளங்கியது. வர்த்தகம், கைத்தொழில் உற்பத்திகள் மற்றும் நிதியியல் பாய்ச்சல்களில் உலகளாவிய வழிமுறைகளிலான மெதுவடைவுப் பாதை போன்றவை பாரதூரமான அதிர்ச்சியை உண்டாக்கியுள்ளது. உலக பொருளாதார வளர்ச்சி பற்றிய எதிர்வுகூறல்கள் படிப்படியாக மந்தகதியிலான முன்னேற்றத்தினையே அடைகின்றன. 2009 சனவரியில் வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் அடிப்படை எதிர்வுகூறல் மற்றும் ஐக்கிய நாடுகளிலிருந்தான ஆகப் பிந்திய எதிர்வுகூறல்கள் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 2009இல் பூச்சியத்திற்கு அண்மித்ததாக வளர்ச்சியடையும் என்பதையும் எதிர்க்கணிய வளர்ச்சியின் சாத்தியத்தைக் கூட அவை நிராகரிக்கவில்லை.

மென்மையடையும் உலக நிதியியல் முறைமையானது, வளர்ந்து வரும் நாடுகள் உலகப் பொருளாதாரத்துடன் கொண்டுள்ள தொடர்புகளின் தீவிரத்திற்கமைவாக பாதகமான விளைவுகளைக் கொண்டிருந்தன. இலங்கையைப் பொறுத்தவரையில், மூலதனக் கணக்கு தாராளமயப்படுத்தப்பட ாமையாலும், உள்ளூர் வங்கிகள் சிக்கல் நிறைந்த நிதியியல் கருவிகளை வியாபாரத்தில் ஈடுபடுத்தாமையாலும் நாட்டின் நிதியியல்துறை மீது உலக நிதி நெருக்கடியின் நேரடித்தாக்கம் குறைந்தளவினதாகவே காணப்பட்டது. இருப்பினும் பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் ஏற்பட்ட திரவத்தன்மைப் பற்றாக்குறை மற்றும் மெய்த்துறைகளுக்கு பரவி ஏற்படுத்திய கடுமையான தாக்கமும் நாட்டினால் பலமாக உணரப்பட்டது.

உலக நிதி நெருக்கடி காரணமாக, அபிவிருத்தி அடைந்து வரும் சந்தைகளில் முதலிட்ட பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகரித்துச் செல்லும் திரவத்தன்மைத் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு தமது குறுங்கால முதலீடுகளைத் தமது தாய் நாட்டிற்கே திருப்பி அனுப்பினர். இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. வெளிநாட்டுச் செலாவணியின் அதிகரித்த வெளிப்பாய்ச்சல் மற்றும் ஏற்றுமதிக்கான குறைந்த கேள்வி காரணமாக குறைவடைந்த உட்பாய்ச்சல்களுடன் இணைந்து கொடுகடன் வழிமுறைகள் குறைவடைந்து செல்வதற்கு மத்தியில் செலாவணி வீதத்தை பெறுதி குறைக்கச் செய்ய வேண்டிய அழுத்தத்தினை ஏற்படுத்தின. உள்நாட்டின், வெளிநாட்டு நாணயச் சந்தையில் ஐ.அ.டொலரின் திரவத்தன்மையைப் போதுமானளவில் பேணுவதை உறுதி செய்யும் பொருட்டு மத்திய வங்கியானது செலாவணி வீதத்தில் வரையறையுடன் கூடிய நெகிழ்ச்சித்தன்மையை அனுமதித்த வேளையில் உள்நாட்டிலுள்ள வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டை உறுதி செய்வதற்கு சந்தைக்கு ஐ.அ.டொலர்களை வழங்கியது. உள்நாட்டுச் சந்தைக்கான ஐ.அ.டொலரை வழங்கியதன் மூலம் ரூபாவின் திரவத்தன்மை தொடர்ச்சியான பற்றாக்குறைக்குட்பட்டதுடன், ரூபாய்க் கடன்பாட்டுச் செலவுகளை தொடர்ந்தும் உயர் மட்டத்திலிருப்பதற்கு வழிகோலியது. திரவத்தன்மைப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக, மத்திய வங்கியானது வெளிநாட்டு செலாவணித் தொழிற்பாடுகளூடாக ஈர்க்கப்பட்ட திரவத்தன்மையைத் தளர்த்தி நியம ஒதுக்குத் தேவையை மூன்று முறைகள் 3 சதவீத புள்ளிகளினால் குறைத்து 7.00 சதவீதமாக்கியதோடு, திறைசேரி உண்டியல்களை முதலாந்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகளில் கொள்வனவு செய்தது. எஞ்சிய எந்தவொரு பற்றாக்குறையும் ஓரிரவு அடிப்படையில் நேர்மாற்று கொடுக்கல் வாங்கல்களூடாக ஈடுசெய்யப்பட்டன. இவ் வழிமுறைகள் கொள்கை வட்டி வீதத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட குறைப்புக்களால் உதவப்பட்டதுடன் இது நாணயத் தளர்த்தலுக்கு வழி செய்த வீழ்ச்சியடைந்து செல்லும் பணவீக்கத்தால் இயக்கப்பட்டது.

நிதி நெருக்கடியின் விளைவாக, பாரிய ஏற்றுமதி நிலையமாகவிருந்த இலங்கையின் ஏற்றுமதி நெருக்கடியைத் தொடர்ந்து மெதுவடைந்து, குறிப்பாக ஆடை உற்பத்திகள் உள்ளடங்கலான இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான கேள்வியைக் குறைத்தது. 2008ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுகளிலும் 9.6 சதவீத அதிகரிப்பினைக் காட்டிய ஏற்றுமதிகள் 2008ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் 2.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதிச் சந்தையில் காணப்படும் கடும் போட்டித்தன்மையினாலும், இலங்கையில் உற்பத்திச் செலவு ஒப்பீட்டளவில் உயர்வாயுள்ளதாலும் பல ஏற்றுமதியாளர்கள் ஒப்பீட்டளவில் குறைந்த இலாப மட்டங்களுடன் தொழிற்படுகிறார்கள், கேள்வி குறைவடைகின்ற நிலையில், தைத்த ஆடை ஏற்றுமதிகளுக்கான வளர்ச்சியை நீடித்து நிலைத்திருக்கச் செய்வது கடினம் என்பதனை பல ஏற்றுமதியாளர்கள் அறிந்திருக்கின்றார்கள். பன்னாட்டு சந்தைகளில் தேயிலை விலையில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக இலங்கையின் தேயிலைத் துறையும் மோசமாக பாதிக்கப்பட்டது. இறப்பர், கறுவா போன்ற ஏனைய வேளாண்மை ஏற்றுமதிப் பயிர்களின் பன்னாட்டு விலைகள் குறைவடைந்ததன் காரணமாக, உற்பத்தி தொடர்ந்து நீடித்து நிலைத்திருக்காததால் அரசாங்கம் விலைகளை உறுதிப்படுத்துவதற்காக தலையிட வேண்டி ஏற்பட்டது. இவற்றிற்கு மேலதிகமாக, இறப்பர் சார்ந்த உற்பத்திகள், வைரங்கள், ஆபரணங்கள் போன்ற ஏனைய ஏற்றுமதி சார்ந்த துறைகளும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டமையால் அரசாங்கம் இம் முக்கிய துறைகளுக்கு புத்துயிரளிப்பதற்காக பொருளாதாரத் தூண்டல் பொதியை வழங்க வேண்டியிருந்தது. இதற்கிடையில், சில உள்ளூர்க் கைத்தொழில்கள், மந்தமான கேள்வியை எதிர்பார்த்து குறுங்காலத்திற்கு தொழிலாளர்களைத் தொழிலிலிருந்து நீக்கியுள்ளன.

இதுவரை, இலங்கை மீதான நெருக்கடியின் தாக்கத்தின் பாரதூரமான மிதமானளவில் காணப்பட்டது. எப்படியாயினும், அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் மெதுவடைவின் காலம் தாழ்த்திய மற்றும் தாமதமான விளைவுகளால் இதன் தீவிரம் இனிமேல் தான் தெரியவருமென பரவலாக நம்பப்படுகிறது. உலக மொத்த தேசிய உற்பத்தியில் 90 சதவீதத்தையும், உலக வர்த்தகத்தில் 80 சதவீதத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜி - 20 இலுள்ள பெரும்பாலான நாடுகள் மந்த நிலையிலிருக்குமென்றே கருதப்படுகிறது. வளர்ந்த பொருளாதாரங்களின் மந்த நிலையானது வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள், ஏற்றுமதிக் கேள்விகள், இறக்குமதிகள், பண்ட விலைகள், படுகடன் புரள்வுகள், குறுங்கால வெளிநாட்டு நிதியிடல்கள், செலாவணிவீத அசைவுகள் மற்றும் ஒதுக்கங்கள் ஆகியவற்றின் மீது கடுமையான தாக்கங்களைக் கொண்டிருக்கும். வர்த்தக வருமானத்தின் பங்கால் அளவிடப்படும், உயர் வர்த்தக திறந்த தன்மையானது வெளிநாட்டுப் பாதிப்புள்ளாகும் தன்மைக்கு கூடியளவில் உள்ளாவதை வெளிப்படுத்துகின்றது. மொத்த ஏற்றுமதிகளில் விவசாயத்தின் பங்கு 15 சதவீதத்திலும் குறைவாகவிருப்பினும், சமீப வருடங்களில் தேயிலையால் வழிநடத்தப்பட்ட வேளாண்மைப் பொருட்கள் பெற்ற விலைகள் ஏற்றுமதி வருவாய்களின் அடிப்படையை வழங்கின. வேளாண்மை ஏற்றுமதிகள் ஏற்றுமதி வளர்ச்சியின் 70 சதவீதத்திற்கு பங்களித்தன. கைத்தொழில்துறையின் மந்தமான செயற்பாடு ஆடை ஏற்றுமதிகளால் ஓரளவிற்கு ஈடு செய்யப்பட்டது. எனினும், தைத்த ஆடைகளின் ஏற்றுமதிகள் ஏனைய ஏற்றுமதியாளர்களிடமிருந்தான கடுமையான போட்டிக்கு மத்தியில், பன்னாட்டு சந்தைகளில் மோசமடைந்து செல்லும் கேள்வியைக் கவனத்திற்கு கொள்கையில் புதுப்பிக்கப்பட்ட அழுத்தத்தை எதிர்கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. வீழ்ச்சியடைந்து செல்லும் கேள்வி காரணமாக பொருட்களின் விலைகளிலான வீழ்ச்சியுடன் இணைந்த ஏற்றுமதிகளின் குறைந்த அளவு 2009இல் ஏற்றுமதிகள் மீது தாக்கத்தைக் கொண்டிருக்கும். சமீப ஆண்டுகளில், இயன்றவரையில் உற்பத்தித்திறனான வளங்களே ஏற்றுமதித்துறைக்கு மாற்றம் பெற்றன. எனவே, ஏற்றுமதிகளுக்கான குறைந்த கேள்வி அண்மைக் காலத்தில் குறைந்தளவிலான முதலீடு, குறைந்தளவிலான ஏற்றுமதி ஆகிய இரண்டையும் எடுத்துக் காட்டுகின்றது. இறக்குமதிகளிலான வீழ்ச்சி வர்த்தக நிலுவை, சென்மதி நிலுவை இறுதியாக ஒதுக்கங்கள் என்பவற்றில் சாதகமான தாக்கத்தை உண்டுபண்ணும். எனினும், மொத்த இறக்குமதிகளில் 82 சதவீதத்திற்கும் கூடுதலாக வகை கூறும் மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப்பொருட்களின் இறக்குமதி நிதியிடலில்லாத காரணத்தால் உற்பத்தி இயலளவிலும் உற்பத்தித்திறனான வளங்களின் பாய்ச்சலிலும் தடையை ஏற்படுத்தி சுருங்கிச் செல்லும் வளர்ச்சி வாய்ப்புக்களுக்கு புதிய அச்சத்தை ஏற்படுத்துகிறது.

இலங்கையின் சுற்றுலாத்துறையில் பாரிய பங்கைக் கொண்டிருக்கும் மேற்கு ஐரோப்பா தொடர்ச்சியான பொருளாதார மந்த நிலையை நோக்கிச் செல்கிறது. எனவே உலக பொருளாதார வாய்ப்புக்களின் நிச்சயமற்ற தன்மையின் ஏற்றம், நாணயமாற்று வீத அசைவுத் தளம்பல்கள், சுற்றுலா ஆர்வம் மேம்பட்ட நாடுகளிலுள்ள உயர்வான தொழில் இழப்பு மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையிழப்பு காரணமாக சுற்றுலாத்துறை 2009இல் மீள் எழுச்சி பெறுவது கேள்விக்குறியாகவுள்ளது. மேலும், கிழக்கு பசுபிக் கரை, ஐரோப்பிய நாடுகள் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் உயர் வருமானம் பெறும் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த பல தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்படும் உயர் இடர்நேர்வு வீதம் காணப்படும் அதேவேளை குறைந்த வருமானம் பெறும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மெதுவடைவால் பெருமளவில் பாதிக்கப்படமாட்டார்கள். எண்ணெய் வருமானத்திலான வீழ்ச்சி அது போல் மத்திய கிழக்கில் பொருளாதார நிலைமைகளிலான இறக்கம் இப்பிராந்தியத்தில் பொருளாதார உறுதிப்பாட்டின்மைக்கு இட்டுச் செல்லும். எனினும், மத்திய கிழக்கிலுள்ள புலம்பெயர்ந்த தொழிற்படையின் தன்மையை நோக்கும் போது 2009இல் பணவனுப்பல்கள் சார்பு ரீதியில் உறுதியுள்ளதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

உலக பொருளாதார மந்த நிலைக்கு மத்தியில் அபிவிருத்தியடைந்த நாடுகள் தம்மைப் பாதுகாத்தல் தொடர்பாக எழும் அச்சமானது, உலகப் பொருளாதாரத்தை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு செல்லும் புத்தாயிராக்கத்தில் இடர்நேர்வுகளைத் தோற்றுவிக்கலாம் என்பதோடு, குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு வியாபார முதலீட்டின் சுயாதீன பாய்ச்சலைத் தடை செய்யலாம். இலங்கை கரைகடந்த வெளிமூலங்களை வழங்கும் முடிவிடமாக தோற்றம் பெற்று வருவதால் வெளியிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் வெளியிலிருந்து அறிவைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பணிகள் போன்ற ஏற்றுமதிகள் உள்ளிட்ட பொருட்களிலான வர்த்தகம் அது போல பணிகளிலான வர்த்தகம் மீது உலகளாவிய பொருளாதார மெதுவடைவின் தாக்கத்தை மோசமாக்கலாம்.

இறுக்கமான உயர் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது நாட்டினுடைய சேமிப்பு முதலீட்டு இடைவெளியைப் பிரதிபலிக்கிறது. எதிர்வரும் ஆண்டுகளில் உறுதியான உயர் வளர்ச்சி வீதத்தினை அடைவதற்குத் தேவையான உற்பத்தித் திறனுடைய நீண்டகால முதலீடுகளுக்குப் போதுமான தேசிய சேமிப்பு கிடைக்காமை கணிசமான வெளிநாட்டு மூலதனத்தின் அவசியப்பாட்டை எடுத்துரைக்கிறது. அண்மைய ஆண்டுகளில் உள்நாட்டு நிதிச் சந்தையில் நிலவும் உயர் வட்டி வீதங்கள் வியாபாரச் செயற்றிட்டங்களுக்கும் வியாபார விரிவாக்கத்துக்குமான நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அரச மற்றும் தனியார் துறைகள் வெளிநாட்டுக் கடன்கள் பெறுவதை ஊக்குவிக்கின்றன. சில முதலீட்டுச்சபை நிறுவனங்கள் உள்ளிட்ட பல தனியார்துறை நிறுவனங்கள்; குறிப்பாக சக்தி மற்றும் வலு, தொலைத் தொடர்பூட்டல்கள் மற்றும் நிதியியல்துறைகளைச் சார்ந்த தொழில்முயற்சிகள் 2008இல் வெளிநாட்டு வசதிகளைப் பெற்றன. தொடர்புடைய இணைக்கிணை நிதியங்களினால் வழங்கப்பட்ட வர்த்தக ரீதியான நிதியிடல் உதவிகளின் மூலம் 2008இல் பல தரப்பட்ட வெளிநாட்டு நிதி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இருந்தபோதிலும், விரிவடையும் உலகளாவிய நெருக்கடி இவ்வகை நிதிப்பாய்ச்சல்களுக்கு தடையை ஏற்படுத்தி வியாபார விரிவாக்கம், நடைமுறையிலிருக்கும் நிகழ்ச்சித்திட்டங்களின் தொடர்ச்சியான தன்மை என்பவற்றைப் பாதிப்பதோடு, உள்நாட்டுப் பணச் சந்தையிலும் கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்துகிறது.

குறைந்தளவிலான இறக்குமதிகள், இலாபங்கள், பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றினால், நெருக்கடியின் இணைந்த விளைவு அரசின் அரசிறையை பாதிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு, உள்நாட்டு நிதியிடல் கூட உயர் பற்றாக்குறையை நிதியிடும் இயலளவைத் தடுக்கலாம். அரசாங்கமானது பொருளாதாரத்தின் நலிவடைந்த துறைகளை உயிர்ப்பிப்பதற்காக தூண்டல் பொதிகளை வழங்கியுள்ளது. அதேவேளை, வடக்குக் கிழக்கு மாகாணங்களின் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக மேலதிக செலவினங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை அரசிற்குள்ளது. எனவே, பொருளாதார நடவடிக்கைகளிலான மெதுவடைவு மற்றும் குறுங்கால வெளிநாட்டு நிதியிடல்கள் என்பவை அரசின் வரவு செலவுத்திட்ட நிலையில் மேலதிக கீழ் நோக்கிய இடர்நேர்வுகளை தோற்றுவிக்கும். எனவே, குறைவடையும் அரச வருமானங்கள் மற்றும் கணிசமாக அதிகரிக்கும் அரச செலவீனங்கள் போன்றவை வடிவமைக்கப்பட்டுள்ள "பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பு 2006 - 2016" இன் கூட்டிணைந்த அரசிறைச் செயற்பாட்டில் தற்காலிக இடைவிலகலுக்கு இட்டுச் செல்லும்.

நாட்டின் நிதியியல் முறைமை ஆரோக்கியமாக இருந்ததுடன் உலகளாவிய நெருக்கடியால் கணிசமானளவில் நேரடியாகப் பாதிப்புள்ளாகவில்லை. எனினும், நெருக்கடியின் விளைவாக, இலங்கை வெளிநாட்டு ஒதுக்குகளை இழந்ததுடன் வெளிநாட்டுச் செலாவணியின் கணிசமான உட்பாய்ச்சல் உறுதிப்படுத்தப்படாதவிடத்து இலங்கை சென்மதி நிலுவைகள் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இச் சூழ்நிலையில், நாடு வெளிநாட்டில் வதியும் இலங்கையரால் அரச பிணையங்களிலான முதலீடுகளின் ஊக்குவிப்பு, 'சுவப்' என அழைக்கப்படும் பரிமாற்றல் வசதிகளை ஒழுங்கு செய்தல், வதியாதோர் வெளிநாட்டு நாணய மற்றும் வதியும் வெளிநாட்டு நாணய கணக்குகள் மீதான மிகை ஊதிய வட்டி என்பவற்றை உள்ளடக்கிய பல வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. இவை நாட்டின் படுகடன் மீள்கொடுப்பனவு இயலளவு மீது பன்னாட்டு ரீதியில் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் பன்னாட்டு நாணய நிதியத்துடனான முடிவுக்காகக் காத்திருக்கும் துணைநிலை ஒழுங்குகளால் மேலும் பலப்படுத்தப்படுவதுடன் அரசால் எதிர்பார்க்கப்பட்டவாறு இறைத் திரட்சியை உறுதிப்படுத்தும் அதேவேளையில் மூலதன உட்பாய்ச்சல்களை மேலும் ஊக்கப்படுத்தும்.

பயனுறுதிமிக்கதாக விளங்கியது. 2009இன் முதலாம் காலாண்டில் பணவீக்கம் எதிர்பார்க்கப்பட்டதைவிட விரைவான வீதத்தில் மேலும் மெதுவடைந்ததுடன் பெப்புருவரி இறுதியில் ஒற்றை இலக்க மட்டங்களை அடைந்தது. பணவீக்கம் கூடியளவிற்கு முகாமைப்படுத்தக் கூடிய மட்டங்களில் உறுதியடைவதால் மத்திய வங்கி அதன் 2009இன் கொள்கை வீதத்தால் உருவாக்கப்பட்ட வட்டி வீத வேறுபாட்டினுள் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகளை நடத்துவதற்கும் வட்டி வீதங்களை ஒதுக்குப் பண இலக்குடன் ஒத்திருக்கும் மட்டமளவில் பேணுவதற்கும் உத்தேசித்துள்ளது.


**ஒதுக்குப் பணத்தில் கூடியளவு கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் சுமூகமான விரிவாக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு, நாளாந்த ஒதுக்குப் பணத்தின் காலாண்டு சராசரியின் அடிப்படையில் 2008 இற்கான காலாண்டு இலக்குகளை ஏற்படுத்துவதன் மூலம் ஒதுக்குப்பண இலக்கிடல் அணுகுமுறை 2008இல் மேலும் திருத்தியமைக்கப்பட்டது.** இதன்படி, 2008இல் ஒதுக்குப் பணத்திலான ஆண்டுச் சராசரி வளர்ச்சிக்கான இலக்கு ஆரம்பத்தில் 14.7 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டதுடன் இது 2008இற்கும் அதற்கப்பாலுக்குமான வழிகாட்டலில் அறிவிக்கப்பட்டது. எனினும், உலகளாவிய நிதியியல் நெருக்கடியைத் தொடர்ந்து தோற்றம் பெற்ற திரவத்தன்மைத் தடையை விடுவிப்பதற்கும் பணவீக்க எதிர்பார்ப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் ஆண்டின் இறுதியை நோக்கி குறிப்பாக நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டிலான மாற்றங்களுக்கு மத்தியிலும் கொள்கை நிலையைப் பேணுவதற்கும் நாணயக் கொள்கையை மேலும் இறுக்கமாக்கும் பொருட்டு இலக்கிடப்பட்ட வளர்ச்சி இவ்வாண்டில் மூன்று தடவைகளில் திருத்தியமைக்கப்பட்டு 9.7 சதவீதத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஒதுக்குப் பண இலக்குகளுடன் இணைந்திருக்கும் மட்டத்தில் சந்தைத் திரவத்தன்மையைப் பேணுவதற்கு மத்திய வங்கி தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் பெரிதும் தங்கியிருக்கின்றது. எனவே, திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் மத்திய வங்கியின் துணைநில் வசதிக்கு சந்தைப் பங்கேற்பாளர்களின் நுழைவு மீது கலண்டர் மாதமொன்றுக்கு 3 தடவைகள் மாத்திரம் என்ற அளவுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன் இவை மத்திய வங்கியால் மதிப்பிடப்பட்டவாறு திரவத்தன்மைப் பற்றாக்குறைக்குச் சமனான அளவுள்ள தொகைக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது. இவ் வரையறைகளுக்கும் அப்பால் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவுப் பொறிமுறைக்கான நுழைவு 19 சதவீதம் கொண்ட தண்ட வீதத்தில் அனுமதிக்கப்படும். அதன் இறுக்கமான நாணயக் கொள்கை நிலையை நடைமுறைப்படுத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் தொழிற்பாடுகளூடாக ஈர்க்கப்பட்ட திரவத்தன்மையைப் பிரதியீடு செய்வதைத் தவிர மத்திய வங்கி முதலாந்தரச் சந்தை ஏலங்களிலும் விசேட சந்தர்ப்பங்களிலும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்வதிலிருந்தும் ஒதுங்கிக் கொண்டது. அளவு இலக்குகளைப் பேணுவதற்கு திரவத்தன்மையை முகாமை செய்வதை நோக்காகக் கொண்ட கொள்கை வழிமுறைகளுடன் இணங்கிச் செல்லும் வகையில் சந்தை வட்டி வீதங்கள் சார்பு ரீதியில் உயர்ந்த மட்டங்களில் மாற்றமின்றித் தொடர்ந்து விளங்கின.

**உள்நாட்டு நிதியியல் சந்தை மீது உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் பாதகமான தாக்கத்தைத் தணிப்பதற்கு குறிப்பாக இவ்வாண்டின் இறுதிக் காலாண்டில் மத்திய வங்கி பல வழிமுறைகளை எடுத்தது.** உயர்ந்தளவில் காணப்பட்ட உலகளாவிய திரவத்தன்மைப் பற்றாக்குறையில் அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளில் வெளிநாட்டு


முதலீட்டின் வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் வெளிநாட்டுக் கடன் வசதிகள் குறைவடைந்து சென்றமை வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகளைத் திரட்டுவதை இடர்பாடாக்கியுள்ளதுடன் உள்நாட்டின் வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் கடுமையான திரவத்தன்மைப் பற்றாக்குறையை உருவாக்கியதுடன் பாரிய எண்ணெய்ச் செலவு மற்றும் வெளிநாட்டுக் கடன்களின் தீர்ப்பனவு உள்ளிட்ட மேலதிகக் கேள்வியைச் சமாளிப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணியை வழங்குவதற்கு மத்திய வங்கியைத் தேவைப்படுத்தியது. இது நாணயக் கொள்கை வழிமுறைகளூடாக தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய பாரிய ரூபாத் திரவத்தன்மைப் பற்றாக்குறையை சந்தையில் உருவாக்கியதுடன் இது இதன்படி, வர்த்தக வங்கிகளின் சகல ரூபா வைப்புப் பொறுப்புக்கள் மீதான நியதி ஒதுக்குத்தேவையை 2008 ஒத்தோபரிலும் நவெம்பரிலும் இரு தடவைகளில் முறையே 2.25 சதவிகித புள்ளியிலிருந்து 7.75 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டதன் மூலம் ரூ.24.5 பில்லியனை வங்கித்தொழில் முறைக்கு விடுவித்தது. இத்துடன், மத்திய வங்கி ரூபாத் திரவத்தன்மையை அதிகரிப்பதற்கு முதலாம்தர மற்றும் இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டிலும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்திருக்கையில் 2008 ஒத்தோபரில் மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியைப் பெறுவதிலுள்ள கட்டுப்பாடுகளை தற்காலிகமாகத் தளர்த்தியது.

**மத்திய வங்கி ஒதுக்குப் பணத்திலான வளர்ச்சியை 2008இன் காலாண்டு இலக்குகளினுள் பேணுவதில் வெற்றி கண்டது.** எனினும், உலகளாவிய நிதியியல் நெருக்கடியிலிருந்து விளைவிக்கப்பட்ட திரவத்தன்மைக் கட்டுப்பாடுகளால் கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள் மீள விதிக்கப்பட்டமையால் ஏற்பட்ட தாக்கம் காரணமாக ஒதுக்குப் பண விரிவாக்கம் இவ்வாண்டின் பிற்பகுதியில் விரைவான வீதத்தில் மெதுவடைந்தது. இதன் விளைவாக, ஆண்டுச் சராசரி ஒதுக்குப் பண வளர்ச்சி வருடாந்த இலக்கான 9.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் கிட்டத்தட்ட 8.5 சதவீதத்திற்கு மெதுவடைந்தது. ஒதுக்குப் பணத்திலான போக்குடன் இணைந்து விரிந்த பணத்திலான விரிவாக்க வீதமும் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியான 11 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008 இறுதியில் 8.5 சதவீதத்திற்கு கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. விரிந்த பண நிரம்பலிலான விரிவாக்கம் மத்திய வங்கியினதும் வர்த்தக வங்கிகளினதும் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2008

வரைபடம் 1.8 **பணவீக்க அசைவுகள்**




வரைபடம் 1.9 **சந்தை வட்டி வீத அசைவுகள்**




இறுதியில் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமையால் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பால் மட்டுமே ஏற்பட்டது. வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் தனியார்துறைக்கான கொடுகடனிலான மெதுவடைவுக்கு மத்தியிலும் அரசுக்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட உயர் வளர்ச்சி காரணமாக, குறிப்பாக, இவ்வாண்டின் பிற்பகுதியில் குறிப்பிடத்தக்களவில் அதிகரிக்கத் தொடங்கியது. இவ்வாண்டின் முதலாம் காலாண்டில் 2007 இறுதியிலான மட்டங்களை விட குறைந்தளவில் விளங்கிய அரசுக்கான தேறிய கொடுகடன் குறிப்பாக இதற்குப் பின்னர் உலகளாவிய நிதியியல் நெருக்கடி காரணமாக அரசால் எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு நிதியிடலைத் திரட்டுவதில் காணப்படும் இடர்பாடுகள் காரணமாக பெருமளவில் அதிகரிக்கத் தொடங்கியது. அரசுக்கான தேறிய கொடுகடனிலான விரிவாக்கம் மத்திய வங்கியாலும் வர்த்தக வங்கிகளாலும் மேற்கொள்ளப்பட்ட கொடுகடனில் அவதானிக்கப்பட்டது. மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பு திறைசேரி உண்டியல்களில் அதன் உடமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு அது போல் அரசுக்கு வழங்கப்பட்ட தற்காலிக முற்பணங்களுக்கு வகை கூறியது. மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு குறிப்பாக மூன்றாம் காலாண்டில் சந்தையிலான திரவத்தன்மைத் தடைகளை விடுவிப்பதற்கு மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைப் பெருமளவில் பிரதிபலிக்கிறது. இதேவேளை தனியார்துறைக்கான கொடுகடன் தொடர்ந்து மெதுவடைந்து இவ்வாண்டின் மூன்றாம் காலாண்டில் ஒற்றை இலக்க மட்டங்களை அடைந்தது. கொடுகடன் வளர்ச்சியிலான மெதுவடைவு உயர் சந்தை வட்டி வீதங்கள், உலகளாவிய பொருளாதாரத்துக்கான எதிர்க்கணிய தோற்றப்பாடு மற்றும் உள்நாட்டு வியாபாரத்தின் வாய்ப்புக்கள் மீதான அதன் தாக்கம் அது போல் வங்கிகளின் சொத்துக்களின் தரம் மற்றும் திரவத்தன்மை மீதான வங்கியின் கரிசனைகள் போன்ற பல காரணிகளால் ஏற்படுத்தப்பட்டது.

**மத்திய வங்கியின் தொடர்பூட்டல் கொள்கை பணவீக்க எதிர்பார்ப்புக்களை தடுத்து நிறுத்தி நிலையாக வைத்திருப்பதிலும் சந்தை எதிர்பார்ப்புக்களுக்கும் மத்திய வங்கியின் எறிவுகளுக்குமிடையேயான இடைவெளியைச் சுருக்குவதிலும் வெற்றி கண்டுள்ளது.** மத்திய வங்கி அதன் கொள்கைத்

தீர்மானங்களையும் அவற்றின் அடிப்படைக் கோட்பாடுகளையும் வங்கியின் கிரமமான வெளியீடுகள், பத்திரிகை வெளியீடுகள் மற்றும் பொது மக்களுக்கான அறிவித்தலூடாக பொதுமக்களுக்கு, நேரம் பிந்தாது அறிவித்தது. இது சந்தை எதிர்பார்ப்புக்கள் மற்றும் மத்திய வங்கியின் சொந்த நோக்குகளுக்கிடையேயான இடைவெளியைக் குறைக்க உதவியதுடன் சந்தைகளின் உணர்வுத்திறனிலிருந்தான அண்மைக் கால எதிர்வுகூறலை அதிகரிப்பதுடன் கொள்கை முன்னெடுப்புக்களுக்கு சந்தைகளின் சுமுகமான சீராக்கத்தை விளைவிக்கிறது. மத்திய வங்கியின் பயனுறுதிமிக்க தொடர்பூட்டல் உபாயங்கள் பொதுமக்களால் புரிந்து கொள்ளப்பட்டவாறு எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பணவீக்கத்திலான படிப்படியான வீழ்ச்சியைக் காட்டும் பொதுமக்களின் பணவீக்க எதிர்பார்ப்புக்களிலான போக்குகளால் வெளிப்படுத்தப்பட்டது. அதன் பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் மத்திய வங்கியும் சந்தைப் பங்கேற்பாளர்கள் மற்றும் ஆர்வலர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடும் அதன் கொள்கையைத் தொடர்ந்து மேற்கொண்டது. இது சம்பந்தமாக, மத்திய வங்கியின் நாணயக் கொள்கையை உருவாக்குகையில் நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவின் கருத்துக்களும் மத்திய வங்கியால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

### நிதியியல் முறைமை உறுதிப்பாடு

**உலகளாவிய நிதியியல் சூழ்நிலையானது, குறிப்பாக 2008 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து தீவிரமடைந்த குழப்ப நிலைகளினால் பாதிப்புக்குள்ளானது.** ஐ.அமெரிக்கா துணை முதன்மை ஈட்டுச் சந்தை நெருக்கடியின் தாக்கம் உலகின் மற்றைய பகுதிகளுக்கும் பரவியதன் விளைவுயாதெனில் உலகளாவிய ரீதியில் கொடுகடன் நெருக்கடி உருவானமையேயாகும். உலகம் முழுவதிலுமுள்ள நிதியியல் சந்தைகளில் திரவத்தன்மை வறிதடைந்தமை உண்மை மாறிகளின் மீதும் சிறு சிறு தாக்கங்களை ஏற்படுத்தியிருந்தது.

**இலங்கையின் நிதியியல்துறை, பன்னாட்டு நிதியியல் சந்தைகளின் குழப்ப நிலைமைகளின் தற்செயலான நிகழ்வுகளின் தாக்கங்களுக்கு வரவேற்கத்தக்க விதத்தில் முகம் கொடுத்தது.** உள்ளூரில் தொழிற்படுகின்ற வங்கிகள், ஐ.அமெரிக்காவின் ஈட்டுடன் தொடர்புபட்ட பிணையங்களுக்கு அல்லது வேறு எங்காவது முறிவடைந்துபோன நிதியியல் நிறுவனங்களுக்கு நேரடியான வெளிப்படுத்துகைகளைக் கொண்டிராத வேளையில் இலங்கையின் மூலதனக் கணக்கு பகுதியளவில் மூடப்பட்டமையும் அதேபோன்று ஆற்றல் வாய்ந்த ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு காணப்பட்டமையும் உள்நாட்டு நிதியியல் முறைமைகளைப் பாதுகாத்துக் கொண்டன. மேலும், 2008 சனவரியிலிருந்து நாட்டின் நிதியியல் இடையீட்டில் பெரும் பங்கிற்கு வகை கூறும் உரிமம் பெற்ற வங்கிகள், கொடுகடன் சந்தை மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளுக்கான அம்சங்கள் என்பனவற்றை தன்னகத்தே கொண்ட பாசல் II மூலதன போதுமை கட்டமைப்பிற்கு மாறிக் கொண்டமையும் உள்நாட்டு நிதியியல் முறைமை மேலும் வலுப்பெற உதவின. 2008இல் வர்த்தக வங்கியொன்றினால் எதிர் நோக்கப்பட்ட திரவப்பிரச்சனை மற்றும் சில அதிகாரமளிக்கப்படாத நிதியியல் வியாபாரங்கள் முறிவடைந்தமை என்பன காரணமாக உள்நாட்டு நிதியியல்துறையும் அழுத்தங்களுக்குட்பட்டது. எனினும், மத்திய வங்கி பிரச்சனைக்குள்ளான வர்த்தக வங்கியினை மீட்பதற்கு சரியான நேரத்தில் முன் வந்ததுடன், விரும்பத்தகாத வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிகழ்வுகளிலிருந்து தோன்றக்கூடிய எந்தவொரு முறையியல் சார்ந்த இடர்நேர்வுகளையும் தடுக்கும் விதத்தில் வழிமுறைகளையும் நடைமுறைப்படுத்தியது. இதன் காரணமாக, இலங்கையின் நிதியியல் முறைமை ஆற்றல் மிக்கதாகவும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு தொடர்ந்து உதவியளிப்பதாகவும் காணப்பட்டது.

**நாணயக் கொள்கை இறுக்கமாக்கப்பட்டமையினைக் கருத்திற்கொண்டு வங்கிகளின் கடன் வழங்கலில் மிதமான தன்மை காணப்பட்ட போதும், 2008இல் வங்கிகள் ஒப்பீட்டு ரீதியில் சிறந்த முறையில் செயலாற்றின.** இப் போக்கு, குறிப்பாக இறுதிக் காலாண்டில் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் மீது உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் எதிர்க்கணிய தாக்கத்தின் காரணமாக மாற்றமடைந்தது. இருப்பினும், வங்கிகள் அவற்றின் இலாபகரமான தன்மையினைப் பேணிக் கொண்டன. வங்கித்தொழில் துறைக்கான மூலதனப் போதுமை விகிதமும் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச விகிதமான பத்து சதவீதத்திற்கு மிக மேலே காணப்பட்ட வேளையில் வங்கித்தொழில்துறையின் திரவ நிலைமையும் வசதியானதொரு மட்டத்தில் பேணப்பட்டது. எனினும், செயற்படாக்கடன் விகிதம் ஓரளவிற்கு அதிகரித்தது.

**இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளும் குத்தகைக்கு விடும் கம்பனிகளும் ஓரளவு இடர்ப்பாடுகளை எதிர்நோக்கின.** நிதியியல் கம்பனிகள், முக்கியமாக நிதிக்குத்தகைக்கு விடல் மற்றும் தவணைக் கொள்வனவு என்பனவற்றுடன் தொடர்பான அவற்றின் கடன் வழங்கல் நடவடிக்கைகளில் மெதுவான தன்மையினைப் பதிவு செய்தன. அவர்களது இலாபத்தன்மை வீழ்ச்சியடைந்த வேளையில் அவற்றின் செயற்படாக் கடன்களின் விகிதம் அதிகரித்தது. எனினும், நிதிக் கம்பனிகளுக்கான குறைந்தபட்ச மூலதனத்தேவைப்பாட்டினை மத்திய வங்கி அதிகரித்தமையின் விளைவாக அவற்றின் பொதுவான மூலதன நிலைமை மேம்பாடடைந்து அதிர்வுகளை எதிர் நோக்கும் அவற்றின் இயலாற்றலை அதிகரித்தது. சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகளும் இலாபத்தில் வீழ்ச்சித் தன்மையினைக் கொண்டிருந்தன. அவர்கள் படுகடன் பிணையங்களை வழங்குவதன் மூலமாக நிதிகளைத் திரட்டுவதற்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியமையானது நிதித் தடைகளை வெற்றிகொள்ள அவர்களுக்கு உதவியது.

**அனைத்து காப்புறுதிக் கம்பனிகளும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளினால் குறைத்துரைக்கப்பட்டவாறான கடன் தீராற்றலைப் பேணியமையின் காரணமாக காப்புறுதித்துறை ஆரோக்கியமான தன்மையைக் கொண்டிருந்தது.** காப்புறுதிக் கம்பனிகள் அவற்றின் சொத்துப்பட்டியலில் பெரும்பகுதியினை அரச பிணையங்களில் வைத்திருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதன் காரணமாக, அவை, தற்போதைய நிதியியல் குழப்ப நிலைமைகளில் காணப்படும் கொடுகடன் மற்றும் சந்தை

இடர்நேர்வுகளைச் சமாளிக்கக் கூடியனவாக இருந்தன. எனினும், அவர்களின் இலாபத்தன்மை, அவர்களது காப்புறுதிக் கட்டண வருமானத்தின் வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவான தன்மையுடன் சேர்ந்து குறைவடைந்தது.

**ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் தளம்பல்களைக் கொண்டிருந்த பங்குச் சந்தை, ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியில் அனைத்து பங்கு விலைச்சுட்டெண் மற்றும் மிலங்கா விலைச்சுட்டெண் ஆகிய இரண்டு சுட்டெண்களிலும் கடுமையான வீழ்ச்சியைப் பதிவு செய்தது.** இவ்வாண்டுப் பகுதியில் காணப்பட்ட உயர்ந்த வட்டி வீதங்களும் குறைந்த கம்பனி வருவாய்களும் பங்குச் சந்தையின் செயலாற்றத்தின் மீது எதிர்க்கணிய தாக்கத்தினைக் கொண்டிருந்த வேளையில், உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் விளைவாக உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கை மெதுவடைந்தமையானது கொழும்புப் பங்குச் சந்தையில் பங்கு விலைகளின் மீது மேலும் கீழ் நோக்கிய அழுத்தத்தினை விளைவித்தது. எனினும், பட்டியலிடப்பட்ட கம்பனிகள் தொடர்பாக இடம்பெற்ற பாரிய பெறுமதியினைக் கொண்ட பல கொடுக்கல் வாங்கல்களின் காரணமாக 2008இல் வெளிநாட்டு நிதியின் உட்பாய்ச்சல்கள் சாதனை மட்டமான உயர்ந்த அளவினை அடைந்தன.

**நிதியியல் முறைமைக்கு பக்கபலமாக விளங்கும் சட்ட கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.** பிரதேச வங்கிகளைப் பலப்படுத்தி வலுவூட்டும் நோக்குடன் பிரதேசிய சங்வர்த்தன வங்கிச்சட்டம் இயற்றப்பட்டது. கொடுகடன் தகவல் பணியகச் சட்டம் திருத்தப்பட்டமையின் மூலம் அதன் நடவடிக்கைகளினது செயற்பரப்பு விரிவடைந்ததுடன், காப்புறுதிக் கம்பனிகள், பொது வசதிக் கம்பனிகள், அரச முகவர்கள் மற்றும் மத்திய வங்கி என்பனவற்றின் பணிகளைப் பயன்படுத்துவதும் இயலுவதாயிற்று. தயாரிக்கப்பட்ட அல்லது திருத்தப்பட்ட மற்றைய சட்டங்களிடையே, திருத்தப்பட்ட சட்டமான நிதிக் கம்பனிகள் சட்டம் அதிகாரமளிக்கப்படாத நிதி வியாபாரங்களையும் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதனையும் கொண்டு நடத்துகின்ற ஆட்களையும் கம்பனிகளையும் தடை செய்கின்ற சட்டத்தினை வலுப்படுத்தும். திருத்தப்பட்ட சட்டம் "வைப்புக்கள்" என்பதற்கு பரந்த வரைவிலக்கணத்தினையும் கொண்டிருக்கிறது. நுண்பாக நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்வதற்காக புதிய சட்டமொன்று வடிவமைக்கப்பட்டு வருகின்றது. அதேவேளை, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு உள்நாட்டு மூலதனச் சந்தையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் பிணையமயப்படுத்தலுடன் தொடர்பான புதிய சட்டமொன்றினைத் தயாரித்து வருகின்றது.

## 1.3 வெளிநாட்டு பொருளாதார சூழலும் தோற்றப்பாடும்

**2004 இலிருந்து 4 சதவீதத்திற்கும் மேலாக விரிவடைந்த உலகளாவிய பொருளாதாரம், நிதியியல் நெருக்கடிகள் தீவிரமடைந்தமையின் காரணமாக 2008இல் பின்னடைவினைக் கொண்டிருந்தது.** நிதியியல் சந்தைகளில் ஏற்பட்ட குழப்ப நிலைமைகளின் பெருமளவு காரணமாக 2007இன் இறுதிக் காலாண்டில் குறிப்பிடத்தக்களவிற்கு மெதுவடைந்த உலகளாவிய பொருளாதாரம், 1930 களின் மாபெரும் மந்த நிலைமைக்குப் பின்னர், பாரிய முன்னேற்றங் கண்ட பொருளாதாரங்களில் ஏற்பட்ட ஆழமான மந்த நிலைமைகளின் காரணமாக 2008இல் பெரும் வீழ்ச்சிப் போக்கொன்றினுள் நுழைந்தது. முன்னேற்றங் கண்ட பொருளாதாரங்களில் காணப்பட்ட கீழ் நோக்கிய போக்கு, தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் ஆற்றல்மிக்க கொள்கைக் கட்டமைப்பினையும் வலுவான அரசதுறை ஐந்தொகையினையும் கொண்டிருந்த போதும் அத் தொகுதியிலுள்ள நாடுகளை மோசமாகப் பாதித்தன. ஐ.அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் வீழ்ச்சிப் போக்கு காணப்பட்டமையினைத் தொடர்ந்து அந் நாடுகளுடன் வலுவான வர்த்தகத் தொடர்புகளைக் கொண்டிருந்த நாடுகளிலும் வீழ்ச்சித்தன்மை காணப்பட்ட வேளையில் பெருமளவு

**அட்டவணை 1.4**

**உலகப் பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடுகளும் (அ)**

| விடயம் | உண்மை | | எறிவுகள் | |
|---|---|---|---|---|
| | 2006 | 2007 | 2008 | 2009 |
| **உலக வெளியீடு** | **5.0** | **5.2** | **3.4** | **0.5** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 3.0 | 2.7 | 1.0 | -2.0 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.9 | 2.0 | 1.1 | -1.6 |
| யூரோ பகுதி | 2.8 | 2.6 | 1.0 | -2.0 |
| ஐக்கிய இராச்சியம் | 2.8 | 3.0 | 0.7 | -2.8 |
| யப்பான் | 2.4 | 2.4 | -0.3 | -2.6 |
| தோற்றம் பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 7.7 | 8.3 | 6.3 | 3.3 |
| அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 9.6 | 10.6 | 7.8 | 5.5 |
| சீனா | 11.1 | 13.0 | 9.0 | 6.7 |
| இந்தியா | 9.7 | 9.3 | 7.3 | 5.1 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **9.2** | **7.2** | **4.1** | **-2.8** |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 7.4 | 4.5 | 1.5 | -3.1 |
| தோற்றம் பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 14.9 | 14.5 | 10.4 | -2.2 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 8.2 | 5.9 | 3.1 | -3.7 |
| தோற்றம் பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 11.0 | 9.6 | 5.6 | -0.8 |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 2.3 | 2.1 | 3.5 | 0.3 |
| தோற்றம் பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 5.1 | 6.4 | 9.2 | 5.8 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொலர்கள்) | | | | |
| எண்ணெய் | 20.5 | 10.7 | 36.4 | -48.5 |
| எரிபொருள் அல்லாதவை | 28.7 | 14.1 | 7.4 | -29.1 |
| **ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் (சதவீதம்)** | **5.4** | **5.3** | **3.0** | **1.3** |

(அ) வேறுவிதமாகக் குறிப்பிட்டாலன்றி ஆண்டு சதவீத மாற்றம்

மூலம்: உலகப் பொளாதரப் தோற்றப்பாடு (சன. 2008 மற்றும் ஒத் 2007) ப.நா.நிதியம்

நடைமுறைக் கணக்கு பற்றாக்குறைக்கு நிதியிட வங்கியுடன் தொடர்பான அல்லது சொத்துப்பட்டியல் உட்பாய்ச்சலில் தங்கியிருக்கும் சில நாடுகள் திடீரென தோன்றிய இறுக்கமான வெளிநாட்டு நிதியிடலினால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. பன்னாட்டு நாணய நிதியத்தின் வோல்ட் எக்கனமிக் அவுட்லுக் இன் (2009 சனவரி - பூரணப்படுத்தப்பட்டது) கருத்துப்படி உலகப் பொருளாதாரம் 2007 இன் வளர்ச்சியான 5.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 3.4 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஐ. அமெரிக்காவின் பொருளாதாரம் நிதியியல் நெருக்கடிகளின் நேரடித் தாக்கத்தின் காரணமாகப் பாதிக்கப்பட்ட போதும் ஐ.அமெரிக்கா பெடரல் றிசேர்வின் உரிய நேரத்திலமைந்த தூண்டல் மூலம் கிடைத்த தீவிரமான கொள்கை தீர்வின் காரணமாக ஐ.அமெரிக்காவின் பொருளாதாரம் 2007இன் நான்காம் காலாண்டின் பின்னர் சராசரியாக 1.3 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேற்கு ஐரோப்பாவில் பொருளாதார நடவடிக்கைகள் கணிசமானளவிற்கு மெதுவடைந்தமைக்கு எண்ணெய் விலைகளின் மோசமான தாக்கம், இறுக்கமடைந்த கொடுகடன் நிலைமைகள், பல பொருளாதாரங்களிலும் வீடமைப்பு சரிவுற்றமை மற்றும் ஐ.அமெரிக்காவின் மெதுவடைவு என்பன காரணங்களாக அமைந்தன. ஆரம்பத்தில் மிகுந்தளவிற்கு தாக்குப்பிடிக்கக் கூடிய தன்மையினைக் காட்டிய யப்பானிய பொருளாதாரம் அண்மையில் ஏற்றுமதிகள் மெதுவடைந்தமையினாலும் உள்நாட்டுக் கேள்வியின் மீதான வர்த்தக மாற்று விகிதம் மோசமடைந்தமையின் தாக்கத்தினாலும் பாதிக்கப்பட்டது. தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளின் வளர்ச்சி 2007இன் முதல் மூன்று காலாண்டுப்பகுதியிலும் 8.0 சதவீதத்திலிருந்து அதனைத் தொடர்ந்து வந்த மூன்று காலாண்டுப்பகுதியில் 7.5 சதவீதத்திற்கு குறைவடைந்ததுடன் 2007இன் 8.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2008இல் 6.3 சதவீதத்திற்கு மெதுவடையுமென எதிர்பார்க்கப்பட்டது.

**2009இல் உலகப் பொருளாதாரம் சுருக்கமடையும் என எதிர்பார்க்கப்படுவதாக பெருமளவில் நம்பப்படுகிறது.** உலகளாவிய வளர்ச்சி 2009இல் 0.5 - 1.0 சதவீதத்திற்கிடையில் இருக்குமென பன்னாட்டு நிதியம் எறிவு செய்துள்ளதுடன் இது 2010இல் மீட்சிடைய முன் உலகப் போர் II இற்குப் பின்னர் ஏற்பட்ட ஆகக் குறைந்த வளர்ச்சியாகும். மேம்பட்ட பொருளாதாரங்கள் பலவற்றினாலும் நாணய மற்றும் இறைக்கொள்கை வழிமுறைகள் இரண்டும் தொடர்ச்சியாக நடைமுறைக்கிடப்பட்ட போதும், அத்தகைய கொள்கைகள், சந்தையில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மையினை அகற்றத் தவறிவிட்டமையினால் உண்மையான பொருளாதாரத்தினை வீழ்ச்சியடையச் செய்யும் விதத்தில் நிதியியல் நெருக்கடிகள் தொடர்ந்தன. வீட்டு அலகுகளின் பெறுமதி குறைவடைதன் காரணமாக, மேம்பட்ட மற்றும் தோற்றம்பெற்று வருகின்ற அனைத்து பொருளாதாரங்களிலும் சொத்துக்களின் பெறுமதி வீழ்ச்சியடைகின்றமையானது நுகர்வோர் கேள்வியின் மீது கீழ் நோக்கிய அழுத்தங்களை ஏற்படுத்தியதன் காரணமாக பன்னாட்டு வர்த்தகம் மிகக் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. மேலும், வீட்டுடமைகள் மற்றும் முதலீட்டாளர்களிடையேயான நிச்சயமற்ற தன்மை செலவினங்களை பிற்போட அவர்களைத் தூண்டியதன் மூலம் நுகர்வுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் மற்றும் முதலீட்டுப் பொருட்களுக்கான கேள்வியை குறைவடையச் செய்தது. இந்த நிச்சயமற்ற பின்னணிக்கெதிராக, முன்னேற்றங் கண்ட பொருளாதாரத்தின் வளர்ச்சி 2008இன் 1.0 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2009இல் முன்னேற்றங்கண்ட பொருளாதாரத்தின் வளர்ச்சி 2 சதவீதத்தினால் சுருக்கமடையுமென தற்பொழுது எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை கைத்தொழில் ஏற்றுமதிகளுக்கான முக்கிய ஏற்றுமதி நாடுகளாக விளங்கும் ஐ.அமெரிக்கா மற்றும் யூரோ பிரதேசங்கள் 2008இன் மதிப்பிடப்பட்ட வளர்ச்சியான முறையே 1.1 சதவீதம் மற்றும் 1.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் முறையே 1.6 சதவீதத்தினாலும் 2.0 சதவீதத்தினாலும் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களின் வளர்ச்சி 2008இன் 6.3 சதவீதத்திலிருந்து 2009இல் 3.3 சதவீதமான மெதுவான வீதத்திலேனும் தொடர்ந்து வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கு இந்நாடுகளிலிருந்து முன்னேற்றங் கண்ட நாடுகளுக்கான ஏற்றுமதிகளில் வீழ்ச்சிகள் எதிர்பார்க்கப்பட்டமையே முக்கிய காரணமாகும். தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலிருந்தான ஏற்றுமதிகள் 2008இன் 5.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் ஏறத்தாழ 0.8 சதவீதத்தினால் சுருக்கமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. உள்நாட்டுப் பொருளாதாரங்களை தூண்டுவதற்காக பல்வேறு அபிவிருத்தியடைந்த, தோற்றும் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளினால் பின்பற்றப்பட்ட இறுக்கமான கொடுகடன் மற்றும் இறை மற்றும் நாணயக் கொள்கைகளின் விரிவாக்கம் என்பனவற்றை விடுவிப்பதற்கான தொடர்ச்சியான முயற்சியின் காரணமாக, உலகளாவிய பொருளாதாரம் 3 சதவீத வளர்ச்சியுடன் 2010 அளவில் படிப்படியாக மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், 2009 இற்கும் அதற்கு அப்பாலுக்குமான வளர்ச்சி எறிவுகள் பெருமளவிற்கு நிச்சயமற்றவைகளாக இருப்பதுடன், பொருளாதார மீட்சியானது முக்கியமாக வீட்டுடமையாளர் மற்றும் முதலீட்டாளர்களிடையே நம்பிக்கையினை கொண்டு வரும் விதத்தில் பல்வேறு அரசாங்கங்களினாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற காத்திரமான கொள்கை வழிமுறைகளிலேயே முக்கியமாக தங்கியிருக்கின்றது.

**உலகளாவிய பொருளாதாரத் தேவைப்பாடு, தற்போதைய உலகளாவிய நிதியியல் நிலைமைகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகளின் கீழ் பல்வேறு கீழ் நோக்கிய இடர்நேர்வுகளை எதிர் நோக்கியது. வலுவான நிதியியல் அழுத்தங்களும் நிச்சயமற்ற தன்மைகளும் விரைவாகவும் காத்திரமான முறையிலும் கட்டுப்படுத்தப்பட்டாலொழிய மோசமடைந்து வருகின்ற நிதியியல் சந்தை நிலைமைகள் உண்மையான பொருளாதார நடவடிக்கைகளை மேலும் பாதித்து பொருளாதாரங்களில் நீண்ட பொருளாதார மந்த நிலைக்கு வழிவகுப்பது, முக்கிய**

**இடர்நேர்வாக இருக்கும்.** மேலும், பணச் சுருக்க இடர்நேர்வு முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் பலவற்றிலும் உயர்வடைந்து வருகின்ற வேளையில் தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களின் கம்பனித்துறைகள், வெளிநாட்டு நிதியிடலைப் பெறுவதில் தொடர்ந்து காணப்படும் வரையறுக்கப்பட்ட தன்மையினால் மோசமாகப் பாதிக்கப்படக் கூடுமாகையால் அது மந்தமான பொருளாதார நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கிறது.

**உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட மந்த நிலைமையின் காரணமாக யூலை தொடக்கம் பன்னாட்டு பண்ட விலைகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியுடன் 2008இன் பிற்பகுதியில் உலகளாவிய பணவீக்க அழுத்தங்கள் விடுபடத் தொடங்கின.** மசகெண்ணெய் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் உயர்வடைந்து செல்லும் பன்னாட்டு விலைகள் மற்றும் துணை முதன்மை நெருக்கடிகளின் விளைவாக ஏற்பட்ட பொருளாதார மெதுவடைவினையும் திரவப் பற்றாக்குறைகளையும் வெற்றி கொள்வதற்காக நடைமுறைக்கிடப்பட்ட விரிவாக்க இறை மற்றும் நாணயக் கொள்கை என்பனவற்றின் காரணமாக உலகளாவிய பணவீக்கம் 2008இல் விரைவாக துரிதமடையுமென ஆரம்பத்தில் எறிவு செய்யப்பட்டது. எனினும், 2008 செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து உலகளாவிய நிதியியல் நிலைமைகள் தீவிரமடைந்தமையுடன் அதன் பெறுபேறாக முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் பொருளாதாரம் கீழ் நோக்கி இறக்கமடைந்து, பண்ட விலைகள் கடுமையாக வீழ்ச்சியடைந்தமையின் மூலம் பணவீக்க அழுத்தங்கள் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவடைந்தன. 1990 களின் இறுதிப்பகுதிக்கு பின்னர் உலகப் பணவீக்கம் உயர் வீதங்களை அடைந்தமைக்கு எரிபொருள் மற்றும் உணவு விலைகளில் ஏற்பட்ட திடீர் உயர்வினால் இது உந்தப்பட்டமையே காரணமாகும். முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களின் பணவீக்கம் பண்ட விலைகள் சிலவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக யூலையில் காணப்பட்ட உச்சமட்டத்திலிருந்து குறைவடைந்து 2008 ஓகத்தில் ஏறத்தாழ 4.3 சதவீதத்தினை அடைந்தது. தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலும் இரட்டை இலக்குகளில் காணப்பட்ட பணவீக்கம் 2008 ஓகத்தில் ஏறத்தாழ 8.3 சதவீதத்தினை அடைந்தமைக்கு, இந் நாடுகளின் நுகர்வுக் கூடையில் உணவுப் பொருட்களுக்கான நிறை, முன்னேற்றங் கண்ட நாடுகளின் 10 - 15 சதவீதத்திற்கெதிராக 30 - 45 சதவீத வீச்சில் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாகவிருந்தமையே முக்கிய காரணமாகும். முன்னேற்றங் கண்ட பொருளாதாரங்களின் மெதுவடைந்த கேள்வி மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் காணப்பட்ட மந்தம் என்பனவற்றின் காரணமாக பணவீக்கம் 2008இன் 3.5 சதவீதத்திலிருந்து 2009இல் மிகக் குறைந்த மட்டமான 0.3 இற்கு வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டது. முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் சிலவற்றில் மிகக் குறைந்த பணவீக்கம் காணப்பட்ட வேளையில் உண்மைப் பொருளாதார நடவடிக்கைகள் மிக மோசமாக வீழ்ச்சியடைந்திருக்குமிடத்து சில நாடுகள் பணச்சுருக்க நிலைமையைக் கூட கொண்டிருக்கக்கூடும். தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பொருளாதாரங்களில் பணவீக்கமானது 2008இன் 9.2 சதவீதத்திலிருந்து 2009இல் ஏறத்தாழ 5.8 சதவீதத்திற்கு மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**தொடர்ச்சியான வட்டி வீதக் குறைப்புக்கள் மற்றும் நிதியியல் நெருக்கடியினால் உருவாக்கப்பட்ட திரவத்தன்மைப் பற்றாக்குறையினை கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மேலதிகத் திரவத்தன்மை என்பனவற்றின் வாயிலாக நாணயக் கொள்கை கணிசமாக விடுவிக்கப்பட்டதன் காரணமாக குறுங்கால வட்டி வீதங்கள் கடுமையாக வீழ்ச்சியடைந்தன.** 2007 யூலையிலிருந்து பன்னாட்டு நிதியியல் சந்தைகளில் காணப்பட்ட குழப்ப நிலைமைகளின் காரணமாக முன்னேற்றங்கண்ட நாடுகளிலுள்ள மத்திய வங்கிகளினால் ஆரம்பிக்கப்பட்ட வட்டி வீதக் குறைப்புக்கள், பல்வேறு தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளிலுள்ள மத்திய வங்கிகளும் பொருளாதார நடவடிக்கைகளின் சரிவினைத் தவிர்ப்பதற்காக கொள்கை வீதங்களைக் குறைத்தமையின் காரணமாக 2008இல் தொடர்ந்தும் தீவிரமடைந்தன. இதன்படி, ஐ.அமெரிக்கா அதன் அடித்தள அளவீட்டு குறியான பெடரல் நிதிய வீதத்தினை 2007 இறுதியின் 4.25 சதவீதத்திலிருந்து 2008இல் இறுதியில் 0.00 - 0.25 சதவீதத்திற்கு குறைத்தது. ஐரோப்பிய மத்திய வங்கி அதன் அடித்தள அளவீட்டு குறியினை 2008 யூலையின் 4.25 சதவீதத்திலிருந்து 2008 திசெம்பரில் 2.50 சதவீதத்திற்கு குறைத்தது. யப்பான் அதன் அடித்தள அளவீட்டுக் குறி வீதத்தினை 7 ஆண்டுகளில் முதற்தடவையாக 20 அடிப்படைப்புள்ளிகளினால் குறைத்த வேளையில் ஐக்கிய இராச்சியம் அதன் கொள்கை வீதத்தினை 1.5 சதவீதத்தினால் குறைத்தது. வரலாற்றிலேயே தனியொரு தடவையில் செய்யப்பட்ட பெரும் குறைப்பு இதுவாகும். பணச் சந்தையில் காணப்பட்ட வலுவான அழுத்தங்களின் பின்னணியில், முன்னணி மத்திய வங்கிகளில் ஐந்து அதாவது பெடரல் றிசேர்வ், ஐரோப்பிய மத்திய வங்கி, இங்கிலாந்து வங்கி, கனடா வங்கி மற்றும் சுவிற்சிலாந்து மத்திய வங்கிகள் பாரிய நிதியியல் தீங்குகளை தவிர்ப்பதற்காக கூட்டு நடவடிக்கையாக,கடன் வழங்கலை ஊக்குவிப்பதனை இலக்காக கொண்டு திரவத்தன்மையினை உட்செலுத்துவதற்காக தொடர்ச்சியான வழிமுறைகளை அறிவித்தன. தோற்றம் பெற்றுவரும் சந்தைகளிலுள்ள மத்திய வங்கிகள் கூட உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளை கட்டுப்படுத்துவதற்கும் உள்நாட்டு நிதியியல் சந்தைகளை பாதுகாப்பதற்குமாக தொடர்பான வட்டி வீதக் குறைப்புக்களை மேற்கொண்டன. கொறிய வங்கி அதன் அடிப்படை வீதத்தினை ஏறத்தாழ 4 ஆண்டுகளில் முதற்தடவையாக 4.25 சதவீதத்திற்கு குறைத்த வேளையில் தாய்வானும் அதன் அடித்தள குறியீட்டு வீதத்தினை 2008 ஒத்தோபரில் 3.25 சதவீதத்திற்கு குறைத்தது.

**திரவத்தன்மையினை வழங்குவதற்கு முக்கியமான மத்திய வங்கிகள் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொண்ட போதும், 2008இல் குறிப்பாக செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து நிதியியல் உறுதிப்பாட்டிற்கான இடர்நேர்வு தீவிரமடைந்தது.**

2007இல் வெளிக் கிளம்பிய நிதியியல் நெருக்கடியானது, மிகப் புகழ் பெற்றதும் ஐக்கிய அமெரிக்காவின் மிக முக்கியமான பழைய நிதியியல் நிறுவனமான லேமன் பிறதர்ஸ் முறிவடைந்தமையினைத் தொடர்ந்து, 2008 செத்தெம்பர் நடுப்பகுதியில் முக்கியமான பல நிறுவனங்கள் முறிவடைந்தமையினால் அல்லது முறிவடைவதற்கு அண்மித்தான நிலையினை அடைந்தமையின் காரணமாக மேலும் ஆழமடைந்து கடன் வழங்குநர்களுக்கும் இணைக்கிணைத் தரப்பினர்க்கும் குறிப்பிடத்தக்க இழப்புக்களை ஏற்படுத்தியது. இதன் விளைவாக, முக்கியமான மத்திய வங்கிகளினால் பாரியளவு திரவத்தன்மை இணைந்த முறையில் உட்செலுத்தப்பட்டதுடன் முன்னெப்பொழுதுமில்லாத அளவில் சுவப் என அழைக்கப்படும் வெளிநாட்டு செலாவணி பரிமாற்றல் தொடர்பான உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதும் சந்தை அழுத்தங்கள் கணிசமாக அதிகரித்து இணைக்கிணைத் தரப்பினர் மீதான நம்பிக்கையினை குறைவடையச் செய்ததுடன் வங்கிகளுக்கிடையிலான சந்தையினை காத்திரமான முறையில் கவர்ந்திருந்தது. இதனைத் தொடர்ந்து மற்றைய ஐ.அமெரிக்க மற்றும் ஐரோப்பிய வங்கிகள் மூடிவிடுதல், தேசிய மயமாக்கல் அல்லது ஒன்றிணைத்தல் மூலமாக உறுதியற்ற தீர்வு காண வேண்டிய தேவையினைக் கொண்டிருந்தன. எனினும், தொடர்ச்சியான உயர்ந்த நிதியிடல் அழுத்தங்களுடன் சேர்ந்த நிதியியல் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட அதிகரித்த அளவு மற்றும் விரிவடைந்த பொறுப்புக்கள், நெருக்கடியினை காத்திரமான முறையில் கட்டுப்படுத்தும் கொள்கை வகுப்போரின் இயலாற்றலைப் பாதித்தன. நிதியியல் முறைமையானது, அதிகரித்துச் செல்லும் இழப்புக்கள், வீழ்ச்சியடைந்து செல்லும் சொத்து விலைகள் மற்றும் ஆழமடைந்து வரும் பொருளாதார வீழ்ச்சி என்பனவற்றின் காரணமாக கடுமையாக நலிவடைந்து வருகின்றது. தற்போதைய உலகளாவிய சந்தை நிலைமைகளின் கீழ் இடைத்தரப்பினரின் இடர்நேர்வுகளை மதிப்பிடுவது கடினமாக இருப்பதனால் வங்கிகள் தமக்கிடையே கடன் வழங்குவதில் கூட மிக எச்சரிக்கையுடன் நடந்து கொள்வதனால் இணைத்தரப்பினர் இடர்நேர்வுகள் தொடர்பாக தீவிரமடைந்து வரும் கவலைகள் உலகளாவிய பணச் சந்தைகளின் சுமூகமான தொழிற்பாடுகளை கடுமையாகப் பாதித்துள்ளன. இச் சூழ்நிலையில், திரவத்தன்மை தொடர்பான பதற்ற நிலையினைத் தணிப்பதற்கும் வங்கிகளுக்கிடையிலான சந்தைகளை மீண்டும் வழமையான முறையில் தொழிற்பட அனுமதித்தல் மற்றும் இடையீடுகள் தொடர்வதற்கும் இணைக்கிணைத்தரப்பினரின் நம்பிக்கையினையும் நிறுவனங்களின் நிதியியல் ஆற்றலையும் கட்டியெழுப்புவது அவசியமானதாகும். இது தொடர்பாக, மத்திய வங்கியிடமிருந்தான போதுமான திரவத்தன்மைக்கான ஏற்பாடு மற்றும் கால நிதியிடல் உதவி, வங்கிகளின் மீள் மூலதனமயமாக்கல் பிரச்சனைகளுக்குரிய சொத்துக்களை கையாள்வதற்கு காத்திரமான வழிமுறைகள் என்பன தற்போது நிலவும் நிதியியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும் உலகளாவிய நிதியியல் முறைமையிலுள்ள நம்பிக்கையினை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் மிக அவசியமானவையாகும்.

**உலகளாவிய திரவ நிலைமைகள் வறிதாகிவிடுவது தோற்றமடைந்து வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் அரச மற்றும் தனியார்துறைகளை மோசமாகப் பாதிக்கக்கூடும்.** தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் பலவற்றினதும் அரசாங்கங்கள் அவற்றின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதியிடுவதற்கு வெளிநாட்டு நிதியிடலில் பெருமளவிற்கு தங்கியிருந்த வேளையில், வங்கிகள் உள்ளிட்ட தனியார்துறையினர் தமது தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான உள்நாட்டு மூலவளங்களைத் துணை நிரப்பு செய்வதற்கு வெளிநாட்டு நிதியிடலில் தங்கியிருந்தன. வெளிநாட்டு நிதியிடலைப் போதுமானளவிற்கு பெறமுடியாமல் போவது இந் நாடுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை பாதிக்கக்கூடுமென்பதுடன் இன்னும் சில விடயங்களைப் பொறுத்தவரையில் தனியார்துறை தியாகம் செய்யப்பட்டே அரசதுறைக் கடன்பாடுகள் வளர்க்கப்படுகின்றன. அண்மைய மாதங்களில் கரைகடந்த வங்கிக் கடன் வழங்கல் கணிசமாக வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டிருப்பதுடன் இதன் மூலம் தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அவற்றின் சொந்த உள்நாட்டு கொடுகடன் விரிவாக்கங்களுக்கு அல்லது வர்த்தக நிதியிடலுக்கு வெளிநாட்டு நிதியின் மீது தங்கியிருக்கும் தன்மையினையும் பாதிக்கின்றது. முதலீட்டாளர் இடர்நேர்வு ஆர்வலரில் ஏற்பட்ட குறைப்பு தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கான குறுங்கால மூலதனப்பாய்ச்சல்களில் குறைப்பொன்றினை ஏற்படுத்தி, உள்ளூர் சந்தைகளில் அழுத்தங்களையும் கொடுகடன் செலவில் உயர்ந்த அதிகரிப்புக்களையும் ஏற்படுத்தியது. தனியார்துறைக்கான நிதியியல் பாய்ச்சல் வறிதடைந்தமையின் காரணமாக, பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காகவும் நிதியியல் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்குமாக இறைத் தூண்டல்களை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்திற்கு தவிர்க்க முடியாததாக மாறியிருக்கிறது.

**செத்தெம்பர் நடுப்பகுதிக்கு பின்னர் நிதியியல் நெருக்கடிகள் தீவிரமடைந்தமையின் காரணமாக குறிப்பாக 2008இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் முக்கியமான பன்னாட்டு நாணயங்கள் உயர்ந்த தளம்பல்களைக் கொண்டிருந்தன.** மற்றைய முக்கிய நாணயங்களுக்கெதிராக 2002ஆம் ஆண்டிலிருந்து பெறுமதியில் தேய்வடைந்த ஐ.அ.டொலர், 2008இன் மூன்றாம் காலாண்டிலிருந்து அதன் போக்கினை மாற்றிக் கொண்டது. உலகளாவிய கொடுகடன் மற்றும் நிதியிடல் சந்தைகளின் பதற்றம் மிக உச்சமட்டத்திற்கு தீவிரமடைந்தமையினால் ஐ.அமெரிக்காவின் பொருளாதாரத்துடன் தொடர்பான எஞ்சிய பொருளாதாரங்களுக்கான வளர்ச்சித் தோற்றப்பாடு பற்றிய கரிசனைகளை இது பிரதிபலித்தது. ஐ.அ.டொலர், யூரோவிற்கெதிராக 8.2 சதவீதத்தினால் தேய்வடைந்து யூரோ ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மிக நலிவுற்ற மட்டத்தினை அடைந்த பின்னர் 2008இன் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில்

முறையே 9.0 சதவீதத்தினாலும் 1.9 சதவீதத்தினாலும் உயர்வடைந்தது. அதேவேளை, முதற்காலாண்டில் ஐ.அ. டொலருக்கெதிராக நலிவுற்ற யப்பானிய யென் மூன்றாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் ஐ.அ.டொலருக்கெதிராக முறையே 3.5 சதவீதத்தினாலும் 15.3 சதவீதத்தினாலும் வலுவடைந்தது. ஐ.அ.டொலருக்கெதிராக இந்தியா ரூபா உயர்ந்த வீதத்தில் தேய்வடைந்தமைக்கு, உலகளாவிய நிதியியல் நெருக்கடி தீவிரமடைந்தமை மற்றும் இந்திய பொருளாதாரத்தில் எதிர்பார்க்கப்பட்ட மெதுவான போக்கு என்பனவற்றின் காரணமாக சொத்துப்பட்டியல் முதலீடுகளில் கணிசமானளவு வெளிப்பாய்ச்சல் காணப்பட்டமையே காரணமாகும். பொருளாதார வளர்ச்சி பலயீனமடைந்தமை மற்றும் பொருளாதாரம் மந்த நிலமையொன்றிற்குள் சென்று விடுமென்ற அச்சம் என்பன காரணமாக இசுரேலிங் பவுணும் மிகக் கூடுதலாக தேய்வடைந்தது.

## 1.4 நடுத்தர கால பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடு, சவால்கள் மற்றும் கொள்கைகள்

**2009இல் இலங்கையின் பொருளாதாரம் குறைந்த வீதமொன்றில் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதன் காரணமாக 2010இல் அதன் வளர்ச்சி உத்வேகத்தினை அது மீளப்பெறும்.** 2005 இலிருந்து தொடர்ந்து நான்காண்டுகளாக 6 சதவீதத்திற்கும் கூடுதலாக பொருளாதாரம் வளர்ச்சியடைந்திருந்தமையின் காரணமாக நடுத்தரகால பேரண்டப் பொருளாதார கொள்கைக் கட்டமைப்பான, பத்தாண்டு தொலைநோக்கில் தெளிவாகக் கூறப்பட்டவாறான 8 சதவீத வளர்ச்சி இலக்கினை நடுத்தர காலத்தில் எய்தும் விதத்தில் வலுவடைந்திருந்த பொருளாதார வாய்ப்புக்கள், உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் இலங்கையில் ஏற்பட்ட உலகளாவிய மந்தம் என்பனவற்றின் தாக்கம் காரணமாக 2009இல் மெதுவடையும் போல் தோன்றுகின்றது. முன்னேற்றம் கண்ட தோற்றம் பெற்று வருகின்ற பொருளாதாரங்கள் பலவும் உலகளாவிய கொடுகடன் நெருக்கடியினைக் கையாள்வதற்கு அசாதாரண வழிமுறைகளை மேற்கொண்ட வேளையில், உள்நாட்டு பொருளாதார வளர்ச்சியை தூண்டுவதற்காக விரிவாக்க இறை மற்றும் நாணயக் கொள்கைகளைப் பின்பற்றின. இத்தகைய வழிமுறைகள் உலகளாவிய பொருளாதாரம் மீட்சியடையவும் அதன் மூலம் நடுத்தர காலத்தில் இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான கேள்வி உத்வேகப்படுத்தப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதிகள் தொடர்பாக 2008 திசெம்பரிலும் வங்கித்தொழில் மற்றும் நிதியியல் நிறுவனங்கள் தொடர்பில் 2009 பெப்புருவரியிலும் நாணயக் கொள்கையினை இலகுபடுத்துவதற்காக மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தூண்டல் பொதிகள் உள்நாட்டுக் கேள்வியை உத்வேகப்படுத்தி, பொருளாதார நடிவக்கைகளில் ஏற்படும் எந்தவொரு வீழ்ச்சியையும் தவிர்க்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருபுடை மற்றும் பல்புடை வெளிநாட்டு நிதியிடல்களுடன் திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் பொருளாதார வளர்ச்சிக்கு சில தூண்டுதல்களை தொடர்ந்தும் வழங்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் சில செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சில தாமதங்கள் ஏற்படக்கூடும். இத்திட்டங்களுக்கு குறிப்பிடத்தக்களவான உள்நாட்டு நிதியிடல் அல்லது வெளிநாட்டு வர்த்தக நிதியிடல் தேவைப்படுகின்றது. மேலும், அண்மையில் ஆயுதப்படைகளால் விடுவிக்கப்பட்ட இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கின் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் அண்மைய எதிர்காலத்தில் "கிழக்கின் மீள்எழுச்சி" மற்றும் வடக்கின் வசந்தம் (வளமான வடக்கு) ஆகிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடுத்தர காலத்தில் பல்வேறு புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தலுடன் பொருளாதார நடவடிக்கைகள் திடீரென உயர்வடையும் போல் தோன்றுகின்றது. இச் செயற்றிட்டங்களுக்கான எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிதியிடல்களின் காரணமாகவும் நாணய கொள்கை நிலை தளர்த்தல்கள் காரணமாகவும் நடுத்தர காலத்தில் மொத்த முதலீடு மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 32 சதவீதத்திற்கு உயர்வடையும் போல் தோன்றுகின்றது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தனியார் முதலீடு ஏறத்தாழ 24 சதவீதத்திற்கு உயர்வடையுமென எறிவு செய்யப்பட்டுள்ள வேளையில் அரச முதலீடு நடுத்தர காலத்தில் கிட்டத்தட்ட 8 சதவீதத்திற்கு உயர்வடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது.

**அரச மற்றும் தனியார்துறைகளுக்கான நிதியியல் உட்பாய்ச்சல்கள் 2009இல் வீழ்ச்சியடைந்து அதன் பின்னர் படிப்படியாக மீட்சியடையும் போல் தோன்றுகிறது.** தோற்றம் பெற்று வருகின்ற மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வெளிநாட்டு நிதியியல் பாய்ச்சல்கள் 2008இல் கடுமையாக வீழ்ச்சியடைந்தமைக்கு தற்போதைய நிதியியல் நெருக்கடிகளும் அதன் விளைவாக உலகளாவிய நிதியியல் சந்தைகளில் தோன்றிய நிச்சயமற்ற தன்மைகளும் காரணமாக அமைந்ததுடன் இப்போக்கு 2009இலும் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. அபிவிருத்திப் பங்காளர்களினால் ஏற்கனவே தருவதற்கு உறுதியளித்த நிதியிலிருந்து நிதியியல் உட்பாய்ச்சல்களை தொடர்ந்தும் அரசாங்கம் பெறக்கூடியதாக இருந்த போதும் போட்டித்தன்மை வாய்ந்த வட்டி வீதங்களில் பன்னாட்டுச் சந்தைகளிலிருந்து கடன்களைத் திரட்டிக் கொள்வது சவால்மிக்கதாக மாறியிருக்கிறது. இதன் விளைவாக, மேலதிக வெளிநாட்டு நிதியிடலையும் கணிசமான உள்நாட்டு நிதியிடலையும் வேண்டி நிற்கும் செயற்றிட்டங்கள் சிலவற்றின் நடைமுறைப்படுத்தலை 2009இல் குறிப்பாக பிற்போடப்பட வேண்டும் அல்லது மெதுவான வேகத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். எனினும், எதிர்பார்க்கப்படும் உலகளாவிய பொருளாதார மீட்சியுடன் நடுத்தர காலத்தில் அரசாங்கம் இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களினால் உறுதி வழங்கப்பட்ட கடன் பகிர்ந்தளிப்பினை துணை நிரப்பு செய்வதற்கு தேவைப்படும் வெளிநாட்டு வர்த்தக நிதியிடலை திரட்டக்கூடியதாக இருக்கும். 2008 இறுதியில் அரசாங்கம், 2007 இறுதியின் ஐ.அ.டொலர் 4.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து உறுதி

சிறப்புக்குறிப்பு 2

## வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தி: வாய்ப்புக்களும் உபாயங்களும்

இலங்கையில் நிலப்பரப்பின்படி மிகப் பெரிய மாகாணங்களிலொன்றான வடக்கு மாகாணம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது[1]. இது நிலப்பரப்பில் 8,884 சதுர கிலோமீற்றர்களை உள்ளடக்கி நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 13.6 சதவீதத்திற்கு வகை கூறுவதுடன் ஏறத்தாழ 1.3 மில்லியன் மதிப்பிடப்பட்ட சனத்தொகையினைக் கொண்டு நாட்டின் மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ 6.5 சதவீதமாகக் காணப்படுகிறது. வடக்கு மாகாணம் வளமான வேளாண்மை நிலங்கள், கனிப்பொருள் தாதுக்கள், காடுகள், புதர் நிலங்கள், ஈர நிலங்கள், அழகிய கடற்கரைகள், நாடு முழுவதிலுமுள்ள கடல்களில் உள்ளார்ந்த வளம் மிக்க அதியுயர் மீன் அடர்த்தியினையும் பவளப்பாறை படிவத்தையும் கொண்ட திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவு வரையான கரையோர ஆழமற்ற கடல் போன்ற இயற்கை வளங்கள் பலவற்றால் செழிப்புற்றிருக்கிறது. எனினும், கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக வடக்கு மாகாணம் உள்நாட்டு முரண்பாட்டு சூழ்நிலைகளினால் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த பிரதேசத்தில் பொருளாதார செயற்பாடுகளில் அரசின் தலையீடு கடுமையாக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. வடக்கு மாகாணத்தில் நீண்ட காலமாக நிலவி வந்த முரண்பாடு இந்தப் பிரதேசத்தின் கணிசமானளவு அழிவினைக் கொண்டு வந்துள்ளது. இது பாரிய எண்ணிக்கையான குடும்பங்களின் புலம்பெயர்வு, பெருமளவில் பாதிக்கப்பட்ட கல்வி மற்றும் பயிற்சி வசதிகள், அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளின் அழிவுகள், உற்பத்தித்திறன் வாய்ந்த சொத்துக்களினதும் கட்டடங்களினதும் அழிவு மற்றும் வேளாண்மை, கால்நடை, மீன்பிடி, சிறு கைத்தொழில் அது போல சுகாதார மற்றும் கல்விப் பணிகள் தொடர்பான முக்கிய பொருளாதார செயற்பாடுகளது கணிசனமான அழிவு போன்றவற்றினால் தெளிவாகப் புலப்படுகின்றது.

1980 களின் ஆரம்பத்தில் முரண்பாடுகள் தீவிரமடைவதற்கு முன்னர் குறிப்பாக வேளாண்மை, கால்நடையும் மீன்பிடி உள்ளிட்ட முழுமொத்த பொருளாதாரத்தில் வட மாகாணம் ஒரு முக்கிய பங்கை வகித்து கிடைக்கக்கூடியதாகவிருந்த வளங்களை பயனுறும் வகையில் பயன்படுத்தியது[2]. மேலும், நிருவாக மற்றும் வியாபாரத் துறைகளிலுள்ள தொழில் வல்லுனர் போன்ற உற்பத்தித்திறன் வாய்ந்த மனிதவளங்களை அபிவிருத்தி செய்வதிலும் இந்த மாகாணம் சிறந்து விளங்கியது. பயங்கரவாதச் செயற்பாடுகள் தீவிரமடைவதற்கு முன்னர் சிறிய தயாரிப்பு மற்றும் ஆடைகள் போன்ற சில சிறியளவிலான கைத்தொழில்களும் காணப்பட்டன. எனினும், மாகாணத்திலிருந்த பெருமளவான உட்கட்டமைப்பு வசதிகள் முரண்பாடுகளினால் அழிக்கப்பட்டுள்ளமையால் வட மாகாணத்திலிருந்த வளங்களின் பாவனை விரைவாகக் குறைவடைந்து மக்களின் வருவாய் உழைக்கும் இயலளவினையும் குறைத்தது. வடக்கு பொருளாதாரத்தை தரமுயர்த்துவதிலுள்ள முக்கிய தடைகளிலொன்று நாட்டின் தென்பகுதியுடனான கிரமமான இணைப்புக் காணப்படாமையாகும்.

பொருளாதார செயற்பாடுகளின் படிப்படியான குறைவினைத் தொடர்ந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்த மாகாணத்தின் பங்களிப்பு தொடர்ச்சியாக குவைடைந்து 2007இல் 2.9 சதவீதத்திற்கு மட்டும் வகை கூறியது. இது உள்ளார்ந்த மட்டத்தினைவிட கணிசமானளவு தாழ்ந்ததாகும். 2005இல் குடித்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டதொரு அளவீட்டின்படி வடமாகாணத்தில் மாதமொன்றிற்கு வீட்டுடமையாளரின் சராசரி வருமானம் தேசிய சராசரியான ரூ.20,048 உடன் ஒப்பிடுமிடத்து மாதமொன்றிற்கு ரூ.16,725 ஆகக் காணப்பட்டது. சிசு மற்றும் மகப்பேற்று உயிரிழப்பு, போசாக்கின்மை போன்ற ஏனைய சமூகப் பொருளாதார குறிகாட்டிகளும் முரண்பாட்டினால் வட மாகாணத்தில் மோசமடைந்தது. முழு மாகாணமும் பயங்கரவாதத்திலிருந்து விடுவிக்கப்பட்டமை இந்தப் பிரதேசத்தின் வாய்ப்புக்களை புதுப்பிப்பதற்கு பொன்னான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. எனவே, கிழக்கு மாகாணத்தைப் போன்று இந்த மாகாணத்திலும் இழந்த சுபீட்சத்தை மீண்டும் கொண்டு வருவதற்கான அனைத்தையுமுள்ளடக்கியதொரு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவசியமாகின்றது.

அரசாங்கத்தின் அனைத்தையுமுள்ளடக்கிய அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டமான ரூ.2,112 மில்லியன் செலவிலான “ரண்டொர” வில் மன்னார் பாலத்தின் கட்டுமானம் மற்றும் ரூ.11,800 மில்லியன் செலவிலான யாழ்ப்பாணத்தின் நீர் வழங்கல் செயற்றிட்டம் போன்ற பல்வேறு செயற்றிட்டங்கள் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ளன. 2009இல், வட மாகாணத்தின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக வெவ்வேறு அமைச்சுக்களினூடாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய அபிவிருத்திச் செயற்பாடுகள் கமநெகும (கிராம மீளெழுச்சி) செயற்றிட்டம், மன்னார் பாலத்தின் கட்டுமானம், காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டம் மற்றும் மகநெகும செயற்றிட்டங்கள் போன்றவற்றை உள்ளடக்குகின்றன. வட மாகாணத்தை மீளக்கட்டமைப்பதற்கான அபிவிருத்திச் செயற்றிட்டங்களை அறிமுகப்படுத்துகின்ற செயல்முறையில் வட மாகாண சபையும் ஈடுபட்டுள்ளது. எனினும், வட மாகாணத்தை விடுவிப்பதிலான கணிசமான முன்னேற்றத்துடன் வட மாகாணத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினை விரைவுபடுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் தொடர்பில் அரசாங்கம் அதன் 2009இன் வரவு செலவுத்திட்டத்தில் இம் மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கி “வடக்கின் வசந்தம்” (வடக்கின் மீளெழுச்சி நிகழ்ச்சித்திட்டம்) என்ற அனைத்தையுமுள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டத்தை அறிவித்திருந்தது. இதன்படி, இந்த நிகழ்ச்சித்திட்டம் முதலில் மக்களை மீளக் குடியமர்த்தல், வாழ்வாதாரங்கள் மற்றும் நீர் வழங்கல், சுகாதாரம், மின்வலு, நலம் மற்றும் கல்வி வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகளை மீள ஏற்படுத்துவதற்கு பொருளாதார உட்கட்டமைப்பின் புனரமைப்பு

[1] வடமாகாணம் (1) வடமாகாணத்தின் குடித்தொகையில் பெரும்பாலானோர் வாழும் யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் (2) எஞ்சிய மாவட்டங்களான கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா என்பவற்றை உள்ளடக்கிய வன்னி என வேறுபட்ட இரு பூகோள பிரதேசங்களை உள்ளடக்கியுள்ளது.

[2] குறிப்பாக யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணத்தின் முக்கிய உற்பத்திகள் கடல் உற்பத்திகள், சின்ன வெங்காயம், மாம்பழங்கள், முந்திரிகைப்பழங்கள் மற்றும் புகையிலையை உள்ளடக்குகின்றன. வீட்டுப் பாவனைப் பொருட்களைத் தயாரிக்கும் சிறிய அளவிலான பல கைத்தொழில்கள் காணப்பட்டன.

மற்றும் மீள்நிர்மாணம் மற்றும் மாகாணத்தில் வருமானத்தை உழைக்கும் செயற்பாடுகளை உருவாக்கல் என்பவற்றை நோக்காகக் கொண்டுள்ளது. வடக்கையும் தெற்கையும் இணைக்கும் புகையிரதப்பாதை மற்றும் பெருந்தெருக்களையும் பாடசாலைகள், வைத்தியசாலைகள், அரச அலுவலகங்கள் மற்றும் ஏறத்தாழ 80,000 வீடுகள் போன்றவற்றை மீள்கட்டமைப்பது இந்த திட்டத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பிரதேசத்திலுள்ள குழந்தைகள், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு புனர்வாழ்வளிப்பதும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு புனர் வாழ்வளித்து அவர்களை சமூகத்தில் பயனுள்ள பிரசைகளாக உருவாக்குவதும் முன்னுரிமைகளாக அமையும். இந்த முயற்சிகளோடு, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மலைநாட்டு உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்குமான அமைச்சிற்குநலன்புரி வசதிகளை வழங்குவதற்கும், மீள்கட்டமைப்பு மற்றும் மீள்குடியேற்ற செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்குமாக ரூ.3,000 மில்லியனை ஒதுக்கீடு செய்துள்ள வேளையில் வட மாகாணத்தில் மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டங்களை கொண்டு நடாத்துவதற்காக ரூ.500 மில்லியன் தொகை மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண பணிகள் அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளது.

தேவையான பாதுகாப்பு நடைமுறைகளைப் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் உடனடியாக நடைமுறைப்படுத்தவுள்ள "வடக்கின் வசந்தம்" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் குறுங்கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால அபிவிருத்திக்கான முன்னுரிமைகளை இறுதிப்படுத்தும் செயல்முறையில் தொடர்புபட்ட நிறுவனங்கள் தற்போது ஈடுபட்டுள்ளன. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முக்கிய கடப்பாடு தேசத்தை கட்டியெழுப்புவதற்கும் மலைநாட்டு உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்வதற்குமான அமைச்சின் வசமுள்ளது. முதற்கட்டமாக, தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மலைநாட்டு உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்குமான அமைச்சின் கீழ் 'வட பிராந்திய அபிவிருத்தி பிரிவு' என்ற புதிய பிரிவு ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. இதன்படி, நிகழ்ச்சித்திட்டங்களைத் திட்டமிடல் மற்றும் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல், ஒருங்கிணைத்தல், கண்காணித்தல், முன்னேற்றத்தினை மீளாய்வு செய்தல் மற்றும் நடவடிக்கையைப் பின்தொடரல் இந்தப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளன. வட மாகாணத்தின் மொத்த அபிவிருத்தியை கையாள்வதற்கான சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு, பொதுப்பணிகள் மற்றும் கலாச்சார விடயங்களை உள்ளடக்கியதானவொரு பல துறைகளை உள்ளடக்கிய அபிவிருத்திச் செயல்முறை இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கையாளப்படும். வட மாகாணத்தில் அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித்திறன் வாய்ந்த செயற்பாடுகளினைக் தொடங்குவதற்கான நிறுவன ரீதியான தடைகள் படிப்படியாக தீர்க்கப்படும். தொடர்புபட்ட அமைச்சுக்கள் மற்றும் அபிவிருத்தி பங்காளிகளுடன் அபிவிருத்தி செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும் மலைநாட்டு உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதற்குமான அமைச்சினால் நிறைவேற்றப்படும். முழுமொத்த நிகழ்ச்சித்திட்டத்திற்கான செலவினை மதிப்பிடுதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதுடன், இனங்காணப்பட்ட செயற்றிட்டங்களை நிதியிடுவதற்கான அபிவிருத்திப் பங்காளர்களின் உதவி பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

உள்நாட்டில் புலம்பெயர்ந்த சில மக்கள் ஏற்கனவே விசேட முகாம்களுக்கு வந்துள்ளதுடன் ஒரு உடனடி நடவடிக்கையாக அரசு அவர்களுக்கு அடிப்படைத் தேவையான உணவு, நீர், ஆடைகள், சுகாதாரம் மற்றும் புகலிடம் போன்றவற்றை சர்வதேச நிறுவனங்களினதும் பொது மக்களினதும் ஆதரவுடன் தொடர்ந்தும் வழங்கி வருகிறது. ஆரம்பத்தில் கல்வி வசதிகளும் தற்காலிகப் பாடசாலைகளில் வழங்கப்பட்டு வருகின்றன. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், ஒரு குறுங்கால வழிமுறையாக, உள்நாட்டில் புலம்பெயர்ந்த மக்களுக்காக அரை நிரந்தர வீடுகளை நிர்மாணிப்பது ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளதுடன் அரசால் நிரந்தர குடியேற்ற ஒழுங்குமுறைகள் மேற்கொள்ளும் வரை தற்காலிக முகாம்களிலுள்ள உள்நாட்டில் புலம்பெயர்ந்த மக்கள் அவ் வீடுகளில் குடியமர்த்தப்படுவர்.

மக்களின் வாழ்வாதாரங்களை மீள ஏற்படுத்துவதற்கு மீன்பிடி, வேளாண்மை, வேளாண்மைப் பதனிடல், பனை, தெங்கு மற்றும் மரமுந்திரிகை பயிரிடல் போன்றவற்றை உள்ளடக்கி கிராமத்தை அடிப்படையாகக் கொண்ட நுண்பாக கைத்தொழில்களை முக்கிய மையமாக கொண்ட பல்வேறு ஊக்குவிப்புத் திட்டங்கள் நடுத்தர காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. கூட்டுறவு அமைப்பிற்கு அதிகாரமளிப்பதற்கும் இந்த மாகாணத்தில் உள்நாட்டு நிருவாகத்துக்கு புத்துயிரளிப்பதற்கும் முன்னுரிமையளிக்கப்படும். தெருக்கள் மீள்கட்டமைக்கப்படுவதுடன் மின் வலுவைக் கடத்துவதற்கும் பகிர்ந்தளிப்புகளுக்குமான வலையமைப்புக்கள் மீள ஏற்படுத்தப்படும். நீண்ட காலத்தில் இப்பிரதேசத்தில் விரைவில் நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள அபிவிருத்தி செயற்றிட்டங்களான கண்டியையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கின்ற நெடுஞ்சாலை, யாழ்ப்பாண நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்திட்டங்கள், மன்னார் பாலம், வவுனியா, கிளிநொச்சி மின்கடத்தல் செயற்றிட்டம் மற்றும் யாழ் பல்கலைக்கழகத்தை விஸ்தரித்தல் போன்றவற்றை விரைவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வட மாகாணத்திலுள்ள பரந்த வீச்சிலான இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி, முக்கிய தொழிற்சாலைகளான காங்கேசன்துறையிலுள்ள சீமெந்து தொழிற்சாலை மற்றும் பரந்தனிலுள்ள இரசாயனத் தொழிற்சாலை போன்ற பாரிய தொழிற்சாலைகளின் மீள அமைத்தல் விரைவுபடுத்தப்படும். பனை சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் ஏனைய வேளாண்மை உற்பத்திகளான வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, முந்திரிகை மற்றும் மாம்பழம் போன்றவற்றைப் பதனிடல் போன்றவற்றில் சுய வேலை வாய்ப்பு சந்தர்ப்பங்களை மேம்படுத்துவதனை நோக்காகக் கொண்ட பல்வேறு செயற்றிட்டங்கள் இனிவரும் ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்படும். ஏ9 மற்றும் ஏ32 நெடுஞ்சாலைகளை திறப்பதன் மூலம் வட மாகாணத்தின் பொருளாதாரத்தை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் மீள இணைப்பதுடன் இது வட மாகாணத்தின் உற்பத்திகளின் ஏனைய மாகாணங்களுக்கான பாய்ச்சலையும் அதற்கு நேரிடையாக உயர்த்தி அதன் மூலம் வட மாகாணத்திலுள்ள மக்களுக்கு புதிய வாய்ப்புக்களை உருவாக்கும். இத்தகைய முயற்சிகளை நிறைவேற்றுவதற்கு அரசினாலும் தனியார் முதலீட்டாளர்களாலும் அபிவிருத்திப் பங்காளர்களாலும் வழங்கப்படும் நிதிகளுக்கு மேலதிகமாக வட மாகாணத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றவர்களிடமிருந்து அவர்களால் ஒன்று திரட்டப்பட்ட நிதியியல் மற்றும் மனித மூலதனத்தை அபிவிருத்தி செயல்முறைக்கு மாற்றுவதற்காக அவர்களிடமிருந்து முதலீட்டையும் வியாபார ஆர்வத்தினையும் கவருவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்படும். இத்தகைய அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அழிவடைந்த வட மாகாணத்தை புனரமைப்பதற்கும் மீளக்கட்டியெழுப்புவதற்கும் இழந்த சுபீட்சத்தை இந்தப் பிரதேசத்திற்கு மீளக் கொண்டு வருவதற்கும் அரசு எதிர்பார்க்கின்றது.

வழங்கப்பட்ட ஏறத்தாழ ஐ.அ.டொலர் 5.9 பில்லியன் கொண்ட ஒன்று திரண்ட நிதி வழங்கப்படுவதற்கு இருந்ததுடன் இத்தொகை இலங்கையின் விடுவிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கின் மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்பிற்கு எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு நிதியிடலுடன், நடுத்தர காலத்தில் மேலும் அதிகரிக்கும் போல் தோன்றுகின்றது.

**2009 பெப்புருவரியில் ஒற்றை இலக்க மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்த பணவீக்கம் 2009ஆம் ஆண்டு முழுவதும் ஒற்றை இலக்க மட்டத்தில் இருக்குமெனவும் நடுத்தர காலத்தில் குறைந்த மட்டத்தில் உறுதி அடையுமெனவும் எதிர்பார்க்கப்பட்டது.** இலங்கையின் பொருளாதாரத்தில் பலயீனமானதொரு விடயமாகப் பணவீக்கம் நீண்டகாலம் காணப்பட்டமைக்கு விரிவடைந்த இறைப்பற்றாக்குறைக்கு வங்கி மூலங்களினூடாக அதிகளவில் நிதியிடப்பட்டமையே முக்கிய காரணமாகும். பணவீக்கத்தினையும் பணவீக்க எதிர்பார்ப்புக்களையும் கட்டுப்படுத்தும் பொருட்டு 2007இலும் 2008இலும் இலங்கை மத்திய வங்கி அளவினை அடிப்படையாகக் கொண்ட கடுமையான பணவீக்க கொள்கை உபாயங்களைப் பின்பற்றியதுடன், பன்னாட்டு பண்ட விலைகள் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக இவ் விரும்பத்தக்க பெறுபேறுகளையும் விளைவித்தன. எதிர்பார்க்கப்பட்ட உலகளாவிய மீட்சியுடன், பன்னாட்டு பண்ட விலைகள் நெருக்கடிக்கு முன்னைய மட்டங்களுக்கு மீளக்கூடும். எனவே, நடுத்தர காலத்தில் பணவீக்கத்தினை தனியொரு இலக்கத்தில் பேணுவதற்கு பொருத்தமான இறுக்கமான நாணய கொள்கை நிலையைப் பேணுகின்ற வேளையில், நிதியியல் நெருக்கடியின்

**அட்டவணை 1.5** — **நடுத்தரகாலப் பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு 2008 - 2012 (அ)**

| குறிகாட்டி | அலகுகள் | 2007 | 2008(ஆ) | எறிவுகள் 2009 | 2010 | 2011 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை** | | | | | | | |
| சந்தை விலைகளில் மொ.உ.உ | ரூ. பில்லியன் | 3,579 | 4,411 | 4,927 | 5,665 | 6,485 | 7,324 |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 6.8 | 6.0 | 2.5 | 5.0 | 6.0 | 6.5 |
| பணவீக்க மொ.உ.உ சுருக்கி | % | 14.0 | 16.3 | 9.0 | 9.5 | 8.0 | 6.0 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ % | 28.0 | 27.5 | 24.0 | 27.0 | 29.0 | 32.0 |
| உள்நாட்டு சேமிப்பு | மொ.உ.உ % | 17.6 | 14.1 | 16.6 | 18.7 | 20.3 | 22.8 |
| தேசிய சேமிப்பு | மொ.உ.உ % | 23.4 | 18.0 | 21.5 | 24.2 | 26.2 | 29.5 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | | |
| வர்த்தக இடைவெளி | ஐ.அ.டொ.மில் | -3,656 | -5,871 | -3,365 | -3,967 | -4,476 | -5,171 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ.மில் | 7,640 | 8,137 | 7,394 | 7,911 | 8,720 | 9,620 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ.மில் | 11,296 | 14,008 | 10,759 | 11,878 | 13,196 | 14,790 |
| பணிகள், தேறிய | ஐ.அ.டொ.மில் | 302 | 402 | 300 | 357 | 449 | 581 |
| நடைமுறை கணக்கு நிலுவை | ஐ.அ.டொ.மில் | -1,401 | -3,775 | -931 | -1,165 | -1,269 | -1,208 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ | -4.3 | -9.3 | -2.2 | -2.7 | -2.7 | -2.4 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ.மில் | 531 | -1,225 | -141 | 592 | 603 | 614 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் (மாதத்திற்கான இறக்குமதி) (இ) | மாதங்கள் | 3.3 | 1.5 | 3.0 | 3.2 | 3.5 | 3.6 |
| படுகடன் பணிவிகிதம் (ஈ) | % | 13.1 | 15.0 | 17.2 | 14.8 | 13.9 | 16.5 |
| **இறைத்துறை** | | | | | | | |
| அரசிறை | மொ.உ.உ % | 15.8 | 14.9 | 15.1 | 16.0 | 16.7 | 16.7 |
| செலவினம் மற்றும் தேறிய வழங்கல் | மொ.உ.உ % | 23.5 | 22.6 | 22.1 | 22.0 | 21.7 | 21.6 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ % | -1.6 | -2.0 | -1.3 | -0.3 | 1.0 | 1.1 |
| திரண்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ % | -7.7 | -7.7 | -7.0 | -6.0 | -5.0 | -4.9 |
| உள்நாட்டு நிதியிடல் | மொ.உ.உ % | 4.1 | 7.0 | 6.9 | 4.4 | 3.5 | 3.3 |
| **நிதியியல்துறை (உ)** | | | | | | | |
| ஒதுக்குப் பண வளர்ச்சி | % | 10.2 | 1.5 | 11.9 | 13.3 | 14.2 | 12.6 |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) | % | 16.6 | 8.5 | 14.0 | 14.5 | 14.0 | 12.7 |
| குறுகிய பண வளர்ச்சி ($M_1$) | % | 2.7 | 4.0 | 8.0 | 10.0 | 10.0 | 8.0 |
| தனியார்துறைக் கொடுகடனின் வளர்ச்சி | % | 19.3 | 7.9 | 14.1 | 13.3 | 12.6 | 11.0 |
| அரச துறைக் கொடுகடனின் வளர்ச்சி | % | 8.9 | 46.2 | 24.1 | -1.4 | -0.8 | 0.3 |

(அ) 2009 மார்ச்சு மாத நடுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) ப.நா. நிதியத்திலிருந்து 2009இலிருந்து எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகளின் உட்பாய்ச்சல்கள் உள்ளடங்களாக
(ஈ) வணிக ஏற்றுமதிகளிலும் பணிகளிலிருந்துமான வருவாய்களின் சதவீதமாக மொத்தப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்.
(உ) ஆண்டின் இறுதிப் பெறுமதிகளில் புள்ளிக்குப் புள்ளி வளர்ச்சி

மூலங்கள் : நிதி திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

மோசமான தாக்கத்தினைக் குறைப்பதற்காக உறுதியளிக்கப்பட்ட காலப்பகுதியில் ஓரளவிற்கு இணங்கிப் போவதும் தவிர்க்க முடியாததாகும்.

**கடந்த சில ஆண்டுகளாக தொழிலின்மை வீதத்தில் அவதானிக்கப்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி உலகளாவிய பொருளாதார மந்தங்களின் தாக்கம் காரணமாக 2009இல் மாற்றமடையக் கூடுமெனினும் உலகளாவிய மீட்சியினாலும் அதன் விளைவாக உள்நாட்டு உற்பத்திக்கு கிடைக்கும் உத்வேகம் மற்றும் வடக்கு, கிழக்கு பகுதிகளின் அதிகரித்த புதிய பொருளாதார நடவடிக்கைகளின் ஆதரவுடன் நடுத்தர காலத்தில் இது பழைய நிலையை அடையும் போல் தோன்றுகின்றது.** அரசதுறை ஆட்சேர்ப்பில் காணப்பட்ட கணிசமான அதிகரிப்பு, அதிகரித்த வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் நிலையான விரிவாக்கம் என்பனவற்றின் முக்கிய காரணமாக நாட்டின் தொழிலின்மை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தது. எனினும் இலங்கை தொழிலாளரை முக்கியமாக வேலைக்கமர்த்தும் நாடுகளில் கடுமையான பொருளாதார இறக்கம் காணப்படுவதனால் தற்போதைய உலகளாவிய நிலைமைகளின் காரணமாக வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கான ஆட்சேர்ப்பு பாதிக்கப்படக் கூடிய அதேவேளையில் இலங்கை உற்பத்திகளுக்கான வெளிநாட்டுக் கேள்வியும் வீழ்ச்சியடைகின்றமையானது, குறைந்த உள்நாட்டு உற்பத்திக்கு வழிவகுத்து 2009இல் சில வேலை இழப்புக்களுக்கு காரணமாகலாம். 2007இல் 6.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த தொழிலின்மை வீதம் வெளிநாட்டு தொழில் வாய்ப்பிற்காக சென்றவர்களின் தொகையில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு அரசதுறைக்கான ஆட்சேர்ப்பு என்பனவற்றின் காரணமாக 2008இல் ஏறத்தாழ 5.2 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. எதிர்பார்க்கப்படும் உலகளாவிய மீட்சியுடன் உள்ளூரிலும் வெளிநாட்டிலும் அண்மைய எதிர்காலத்தில் கூடியளவு தொழில் வாய்ப்புக்கள் கிடைப்பதற்கு சாத்தியமுள்ளமையினால் தற்போதைய நிலைமையினை தொழிலற்றவர்களுக்கு கூடியளவு தொழில் வாய்ப்புள்ள துறைகளில் பயிற்சிகளையும் மீள்பயிற்சிகளையும் வழங்குவதற்கு பயன்படுத்திக் கொள்வது முன்மதியுடைய செயலாக இருக்கும். அதேவேளை அரச பணிகள் மேலதிக அலுவலர்களை ஏற்கனவே கொண்டிருப்பதுடன் வரவு செலவுத்திட்ட ஒதுக்கில் கணிசமான பகுதியினை ஈர்ப்பதனால் அரசாங்கத்தின் மேலதிக ஆட்சேர்ப்புக்களை மட்டுப்படுத்துவதும், அரசதுறையில் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பதவிகளை மீள் மதிப்பீடு செய்வதும் தவிர்க்க முடியாததாகும்.

**இறைத் தொழிற்பாடுகளின் நியதிகளில், குறிப்பாக தொடர்ச்சியாக காணப்படும் உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் பொருளாதார மெதுவடைவு என்பன, புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மனிதாபிமான, அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டிய தேவையுடன் இணைந்து கொள்வதனால் 2009ஆம் ஆண்டு சவாலுக்குரியதொன்றாக விளங்கும்.** இவ்வாண்டுக் காலத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய எந்தவொரு மேலதிக வீழ்ச்சியும் 2009இல் எதிர்பார்க்கப்படும் அரசிறைச் சேகரிப்புக்களை மோசமாகப் பாதிக்கும். உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளினால் கசியக்கூடிய சாத்தியமான தாக்கங்கள்; அத்தகைய எதிர்க்கணிய தாக்கங்களைத் தணிப்பதற்காக மேலதிக இறை வழிமுறைகளூடாக உறுதியானதும் சரியான கருத்துக்களைக் கொண்டதுமான பதிலிறுப்புக்களைப் பின்பற்ற அரசினைத் தேவைப்படுத்தக் கூடும். அத்தகைய சூழ்நிலையில், வரையறுக்கப்பட்ட இறை வசதிகளைக் கருத்திற் கொண்டு, அவ்வாறு அறிமுகப்படுத்தப்படுகின்ற வழிமுறைகள் நன்கு இலக்கிடப்பட்டவை என்பதனையும் தற்காலிகமானவை என்பதனையும் குறிப்பிடத்தக்களவு இறை நழுவல்களைக் கொண்டிராத விதத்தில் பொருளாதார நடவடிக்கைகளை தூண்டுவதற்கு பங்களிக்கக்கூடியவை என்பதனையும் உறுதிப்படுத்துவதும் இன்றியமையாததாகும். அதேநேரம், வடக்கு, கிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கு போதுமான நிதியினை ஒதுக்குவதனை அவற்றின் மிகுந்த முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு தொடர வேண்டியிருக்கும். ஆகவே, அரசிறையில் ஏற்படும் வீழ்ச்சியை மிகக் குறைப்பதற்கும் மேலதிக செலவினங்களை இயன்ற அளவிற்கு எதிரீடு செய்யும் விதத்தில் மீண்டெழும் வரவு செலவுத்திட்டத்தில் வசதிகளை உருவாக்குவதற்கும் முழுமையான வழிமுறைகளை மேற்கொள்வதற்கு உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளிலிருந்து தோன்றுகின்ற பாதகமான தாக்கங்களை மிகக் குறைப்பதனை நோக்கிய ஒட்டுமொத்த இறை உபாயங்களுக்கு இம் முக்கியமான கட்டத்தில் மிக உயர்ந்த முன்னுரிமையளிக்கப்பட வேண்டும். இப் பிரச்சனைகள் காத்திரமான முறையில் கட்டுப்படுத்தப்படும் பொழுது, அரசாங்கம் 2009 வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு வழமையான நடுத்தர கால திரட்சிப் பாதைக்கு மாறக்கூடியதாயிருக்கும்.

**குறைந்த இறைப்பற்றாக்குறை மற்றும் விலை உறுதிப்பாடு என்பனவற்றை உறுதிப்படுத்துவதற்கு, இறைத் திரட்சியை நோக்கிய வழிமுறைகளைத் தொடர்வது இன்றியமையாததாகும்.** நீடித்த உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும், குறைந்த பணவீக்கத்தினை நோக்கி, பணவீக்க எதிர்பார்ப்புக்களை உறுதியாக நிறுத்துவதற்கும், அரசாங்கம் இறைத்திரட்சி வழிமுறைகளை முன்னுரிமை அடிப்படையில் விரைந்த வேகத்தில் நடைமுறைக்கிடுவது மிக அவசியமானதாகும். இன்னமும் நாட்டின் இறைமுறைமையில் காணப்படும் குறைபாடுகளைக் கட்டுப்படுத்துவதன் மீது கவனம் செலுத்துவதற்கு குறிப்பாக நடுத்தர கால இறைத்திரட்சி தேவையாகும். அரசிறைச் சேகரிப்பின் வீழ்ச்சி, அதிகரித்த செலவினம் என்பன அரசின் கடன்பாட்டுத் தேவைப்பாட்டினை அதிகரிப்பதன் மூலம் வெளிநின்ற படுகடனையும், எதிர்கால வட்டிச் செலவுகளையும் பெருக்குகிறது. வங்கித்தொழில் முறையிலிருந்தான அரசின் கடன்பாடுகள் அதன் ஆரம்ப இலக்குகளை கணிசமான தொகையினால் விஞ்சுவது, நாணயக் கொள்கையினை நடத்துவதில் நாணய மேலாண்மைக்கு அடிக்கடி பாரிய சவால்கள் ஏற்படுத்தி வருவது அவதானிக்கப்பட்டிருக்கின்றது. மேலும், குறிப்பாக மீண்டெழும் செலவினங்களை ஈடுசெய்வதற்கான உயர்ந்த உள்நாட்டுக் கடன்பாடுகள் அரச

முதலீடுகளுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள மூலவளங்களை முன்கூட்டியே கவர்ந்து விடுவதனால், இது நாட்டின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களை மிகக் கடுமையாகப் பாதிக்கின்றது. எதிர்காலத்தில் மூலதனச் செலவுகளிலிருந்து நாடு பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகளுடன் ஒப்பிடுகையில் இது மிகப்பெரிய அமையச் செலவாக விளங்குகின்றது. நாட்டின் மிகையான நாணய விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக நடைமுறைக்கிடப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள், அரச கடன்பாடுகள் சந்தை வட்டி வீதங்களுக்கேற்ப எளிதில் மாறாதாகையால் தனியார்துறைக்கான கொடுகடன்களைச் சுருக்குவதற்கு அது வழிவகுப்பது தவிர்க்க முடியாததாக இருக்கும். இது, பொதுவாக உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பங்கிற்கு பங்களிக்கும் தனியார்துறையின் மீது மோசமான தாக்கத்தினை கொண்டிருப்பதன் மூலம் இது அத்துறையின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களைக் குறைத்து விடுகின்றது. தற்போதைய உலகளாவிய நிலைமைகளின் கீழ் வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன்களைத் திரட்டுவது மிகச் சவாலுக்குரிய விடயமாக இருக்குமென்பதனால் உள்நாட்டு வங்கித்தொழில் முறையிலிருந்தான அரசின் கடன்பாடுகள் 2009இல் மிகக் கூடுதலாக அதிகரிக்கும் போல் தெரிகிறது. இப் பின்னணியில், உலகளாவிய நிதியியல் சந்தைகள் மீட்சியடையும் வரை எந்தவொரு புதிய பாரிய செயற்றிட்டத்தினதும் நடைமுறைப்படுத்தலை பிற்போடுகின்ற அதேவேளையில் ஏற்கனவே செயற்பாட்டிலுள்ள செயற்றிட்டங்களை உள்நாட்டு நிதியிடல் தேவைப்பாடுகளுடன் ஒத்துச் செல்லும் விதத்தில் மெதுவான வேகத்தில் கட்டுப்படுத்துவது முன்மதியுடைய செயலாக இருக்கும். மாற்று வழிமுறையாக, அரசாங்கம் முழுச் செயற்றிட்டத்திற்குமான நிதியிடல் தேவைப்பாட்டினை அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கான சாத்தியங்களைக் கண்டறிதல் வேண்டும். கடந்த காலத்தில் செலவுகளை பிரதிபலிக்கும் விதத்தில் உள்நாட்டு எரிபொருள் விலைகள் சீராக்கம் செய்யப்பட்டு, பயணிகள் போக்குவரத்துக் கட்டணங்களும் மின்வலு விலைகளில் திருத்தங்களும் செய்யப்பட்ட போதும் அரசிற்குச் சொந்தமான சில தொழில் முயற்சிகளின் செயலாற்றம் இன்னமும் கரிசனைக்குரியதாகவும் முக்கிய அரச வர்த்தக தொழில் முயற்சிகளின் நிதியியல் ஆற்றல் அரச வரவு செலவுத்திட்டத்தின் மீது சுமையினை ஏற்படுத்துவதாகவும் இருப்பது, இப்பிரச்சனைகளைச் சீர்செய்வதற்கு பொருத்தமான வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தினை எடுத்துக் காட்டுவதாகவுள்ளது.

**பல்வேறு தடைகளின் காரணமாக, சந்தை வட்டி வீதங்களையும் உயர் தனியார்துறைக் கொடுகடன்களையும் குறைப்பது கடினமானதாகவுள்ளது.** அரச வங்கிகள் அரசிற்கு பெருமளவிற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளமையும் அதன் காரணமாக அவை தனியார்துறைக்கான கொடுகடனை விரிவாக்க முடியாமல் இருப்பது வைப்பு வீதங்களுக்கான அடித்தள அளவீடாக இருக்கும் உயர்ந்த திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் மற்றும் நிதியங்களின் உயர்ந்த செலவு என்பன அவற்றுள் சிலவாகும். எனவே, அரச வங்கிகளின் வெளிப்படுத்துகைகளைக் குறிப்பிடத்தகளவிற்கு குறைப்பதுடன் இறைத்திரட்சியை எய்தினாலொழிய நாணயக் கொள்கை தாக்கமுடையதாக இருக்கமாட்டாது.

**உறுதியற்ற மட்டங்களுக்கு இறைக்கூட்டுக்கள் விலகிச் செல்வதனால் ஏற்படும் தாக்கங்களை அடையாளம் கண்ட பின்னர் அரசாங்கம் பத்தாண்டு தொலைநோக்கு உட்பட பல்வேறு கொள்கை ஆவணங்களில் காணப்படும் மேற்சொன்ன குறைகளை கட்டுப்படுத்துவதற்கான அதன் கடப்பாடுகளை ஏற்கனவே அறிவித்திருக்கிறது.** இது குறிப்பாக வரி நிருவாகத்தினை மேம்படுத்துதல் மற்றும் வரித் தளத்தினை விரிவுபடுத்தல் மீண்டெழும் செலவினத்தினைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஒப்பீட்டு ரீதியில் அரச முதலீடுகளை உயர்ந்த மட்டத்தில் பேணுதல் என்பனவற்றின் மூலம் அரசிறையினை உயர்த்துவதனூடாக இறை முகாமைத்துவ (பொறுப்பாண்மை) சட்டத்திலுள்ள இலக்குகளை ஈடுசெய்வதற்கு திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை வலுவானதொரு மட்டத்தில் குறைப்பதற்கான நடுத்தரகாலத் திட்டங்களை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. அதேவேளை, இலங்கை மத்திய வருமான நாடொன்றாகத் தோற்றம் பெற்றுவருவதனால் எதிர்காலத்தில் வெளிநாட்டுச் சலுகை நிதியிடலைப் பெறுவதில் எதிர்நோக்கும் சவால்களை கருத்திற்கொண்டு, உள்நாட்டுப் படுகடன் சந்தை நடவடிக்கைகளை மேம்படுத்தும் விதத்தில் படுகடன் முகாமைத்துவக் கொள்கையினை நெறிப்படுத்த வேண்டியிருப்பதுடன், அரச வரவு செலவுத்திட்டம் மீதான சுமையினைக் குறைப்பதற்கு அரச - தனியார்துறைப் பங்குடமை போன்ற மாற்று நிதியிடல் மூலங்களையும் கண்டறிதல் வேண்டும். இப் பின்னணியில், எதிர்பார்க்கப்படும் இலக்குகளை எய்துவதற்கும், அதன் மூலம் நாணய முகாமைத்துவம் மற்றும் நடுத்தர காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற உயர்ந்ததும் வலுவானதுமான பொருளாதார வளர்ச்சியினைப் பெற்றுக் கொள்வதும் உட்பட நாட்டின் ஒட்டுமொத்த பேரண்ட பொருளாதார முகாமைத்துவத்தின் மீது உயர்ந்த இறைப்பற்றாக்குறைகளுடன் கூடிய பல்வேறு மோசமான தாக்கங்களைத் தவிர்ப்பதற்கும், சரியான நேரத்தில் அர்ப்பணிப்புடன் கூடிய திட்டமிடப்பட்ட இறைத்திரட்சி கட்டமைப்பினை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும்.

**தற்போதைய உலகளாவிய நிலைமைகளின் கீழ், சிறிய நடுத்தர தொழில் முயற்சிகள் கடுமையான இடர்ப்பாடுகளை எதிர்நோக்குவதனால் இந் நெருக்கடியான நிலைமைகளின் கீழ் அவை நிலைத்திருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு இறை மற்றும் நாணய உதவிகள் தேவைப்படுகின்றன.** ஒன்றில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஏற்றுமதிகளுடன் தொடர்புபட்டுள்ள பொருளாதாரத்தின் சில துறைகள் உலகளாவிய பொருளாதார மந்தங்களினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இது தொடர்பாக, சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் உற்பத்திக்கான கேள்வி போதுமானதாக இல்லாமையாலும் உயர்ந்த நிதியிடல் செலவுகள் தொழிற்பாட்டு ஆற்றலை அச்சுறுத்துவதனாலும் அக் கைத்தொழில்கள் உயிர் வாழ்வதற்கு இடைக்காலத் தீர்வுகளை தொடர்வதற்கான தேவை காணப்படுகின்றது. அவர்களினால்

தற்போது எதிர்நோக்கப்படும் இடர்ப்பாடுகளுக்கு உலகளாவிய காரணிகளே காரணமென்பதனாலும் கணிசமானளவு மக்கள் தமது வாழ்வாதாரங்களுக்கு இத்துறையிலேயே தங்கியிருப்பதனாலும் அரசாங்கம் அவர்களுக்கு உதவும் விதத்தில் சில இறை ஊக்குவிப்பு வசதிகளை வழங்குதல் வேண்டும். மத்திய வங்கி, வர்த்தக வங்கிகளுக்கான நேர்மாற்று மீள் கொள்வனவு வசதியின் மீதான தண்ட வட்டி வீதங்களை குறைத்திருக்கின்ற வேளையில் சந்தை திரவத்தன்மையினை அதிகரிக்கும் பொருட்டும் நிதிச் செலவுகளைக் குறைப்பதற்காகவும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகள் படிப்படியாகக் குறைக்கப்படுகின்றன. எனினும், இத்தகைய சோதனையான சூழ்நிலையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் தமது உற்பத்தியாக்கத்தினை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு, எதிர்வரும் காலத்தில் மறைந்து போய்விடும் என எதிர்பார்க்கின்ற தற்போதைய சவால்களை எதிர்நோக்குவதற்கு தாமாகவே தம்மை மீள ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும்.

**வாடிக்கையாளர்களுக்கான வங்கிக் கடன் வழங்கலும் வங்கிகளுக்கிடையிலான கடன் வழங்கலும், இணைக்கிணை தரப்பினரின் இடர்நேர்வுகள் மீதான கரிசனைகள் மற்றும் சுயமாக விதிக்கப்பட்ட வங்கிகளுக்கிடையிலான கடன் வழங்கல் வரையறைகள் இறுக்கமாக்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக பாதிக்கப்பட்டன.** தீவிரமடைந்த உலகளாவிய நிதியியல் நெருக்கடிகள் மற்றும் அதன் பெறுபேறாக சந்தைகளில் தோன்றிய நிச்சயமற்ற தன்மை என்பனவற்றின் காரணமாக நிதியியல் சந்தை மீதான நம்பிக்கைகள் குறிப்பிடத்தக்களவிற்கு சிதைந்த போயின. இதன் விளைவாக, வங்கிகளும் ஏனைய கடன் வழங்கல் நிறுவனங்களும் கடன் வழங்குவதில் பெருமளவு எச்சரிக்கையுடன் நடந்து கொண்டதுடன் கடன் வழங்கலின் மீது உயர்ந்த கட்டணங்களையும் விதித்தமையினால் கடன்பாட்டுச் செலவுகளும் அதிகரித்தன. இந் நிகழ்வுகளின் விளைவாக, வங்கிகள் முதலீட்டாளர்கள், வியாபாரங்கள் மற்றும் கடன்பாட்டாளர்களுக்கிடையேயான நிதியியல் பாய்ச்சல்கள் பாதிக்கப்பட்டதுடன், ஏறத்தாழ வறிது நிலையைக் அடைந்து நாட்டின் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியினையும் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களையும் பாதிக்கிறது. இப் பின்னணியில், தற்போதைய உலகளாவிய சூழ்நிலைகள் அண்மைய எதிர்காலத்தில் எதிர்த் தாக்கமொன்றை ஏற்படுத்துமெனஎதிர்பார்க்கப்படுவதனாலும் பொருளாதாரம் மீட்சியடைந்தும் வங்கிகள் கூடியளவு வியாபார வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முடியுமாகையாலும் பொருளாதார நடவடிக்கைகளில் மேலும் சரிவுகள் ஏற்படுவதனை தவிர்ப்பதற்காக வங்கிகளும், ஏனைய நிதியியல் நிறுவனங்களும் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று கடன் வழங்குவதிலும் மற்றைய பொருளாதார முகவர்களுக்கு கடன் வழங்குவதிலும் ஈடுபட்டிருந்தன. மத்திய வங்கி, நாணயக் கொள்கை நிதியினை தளர்த்தியமையின் மூலமும், சந்தைப் பங்கேற்பாளர்களின் தேவையினை ஈடுசெய்வதற்கு திரவத்தன்மையினை வழங்கியமையின் மூலமும் வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கும் செயற்பாடுகளுக்கு ஊக்குவித்து வசதியளித்தது.

**சட்டத்திற்கு முரணான வைப்புக்களை ஏற்கின்ற நிறுவனங்கள் பல முறிவடைவது நிதியியல் முறைமை உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி பொதுமக்களிடையே நிச்சயமற்ற தன்மையினை உருவாக்குவதனால் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட நிதியியல் நிறுவனங்களுக்கும் இப் பிரச்சனை பரவுவதை தடுப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகள் அவசியமாகின்றன.** உள்நாட்டு வங்கிகளும் ஏனைய நிதியியல் நிறுவனங்களும் உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளினால் முக்கியமாக, இந் நிதியியல் நிறுவனங்களினால் வெளிநாட்டு முதலீடுகள் மீது தற்போதுள்ள கடப்பாடுகளின் காரணமாக நேரடியாகப் பாதிக்கப்படாத போதிலும் சட்டத்திற்கு முரணாக வைப்புக்களை ஏற்கின்ற சில நிறுவனங்கள் முறிவடைந்தமையானது உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் பீதியைத் தோற்றுவிக்க காரணமாகியது. இதன் விளைவாக, பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளிடமிருந்த வைப்புக்களைக் கூட மீளப்பெறும் மனப்போக்கு காணப்பட்டமையானது நிதியியல் நிறுவனங்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. மத்திய வங்கி வெளியீடுகளூடாக விழிப்புணர்வூட்டுவது உட்பட பொதுமக்களுக்கு தொடர்ச்சியாக அறிவூட்டி வந்தது. அது பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளின் பட்டியலை பொது ஊடகங்களில் வெளியிட்டதுடன், வேறுபட்ட நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்டவர்களினால் வேறுபட்ட பொய்த் தோற்றங்களுடன் சட்டத்திற்கு மாறாக வைப்புக்கள் திரட்டப்படுவது பற்றி பொதுமக்கள் விழிப்பாயிருக்குமாறும் பொதுமக்களுக்கு ஊடகங்களூடாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு வந்தது. எனினும், பொதுமக்களில் சில பேர் தமது வைப்புக்களுக்கு உயர்ந்த வருவாய்களைத் தேடி ஓடுவதனால் சட்டத்திற்கு மாறான நிறுவனங்களில் தமது பணத்தினை வைப்புச் செய்வதில் பின்னிப் பிணைந்துள்ள உயர்ந்த இடர்நேர்வுகளை அவர்கள் புறக்கணித்துள்ளனர். இச் சூழ்நிலையினை கருத்திற் கொண்டு, சட்டத்திற்கு மாறான நிதியியல் நிறுவனங்களையும் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதனையும் தடை செய்யும் ஏற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்குடன் நிதிக்கம்பனிகள் சட்டத்தினை திருத்தும் வேலைகளை வங்கி மேற்கொண்டது. மேலும், "வைப்புக்கள்" என்ற வரைவிலக்கணமும் பரந்த வீச்சிலான நிதி திரட்டும் நடவடிக்கைகளை உள்ளடக்கும் விதத்தில் விரிவாக்கப்பட்டுள்ள வேளையில் அதிகாரமளிக்கப்படாமல் வைப்புக்களை ஏற்றுக்கொள்வதும் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது.

**இலங்கையின் முக்கிய சந்தைகளில் காணப்படும் பொருளாதார மந்தமானது பொருட்களின் வகை அதுபோல் சந்தைகள் என்பனவற்றின் நியதிகளில் பன்முகப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தினை எடுத்துக் காட்டுகின்றது.** தற்போதைய பிராந்திய மற்றும் இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளை பரந்த வீச்சில் சரியான முறையில் நடைமுறைக்கிடுவதனூடாக பரந்த பிராந்திய சந்தைகளுடன் பணிகள் தொடர்புகளை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாயிருக்கும். நாடு அமைவு பெற்றுள்ள கேந்திரம் அதனுடன் இணைந்துள்ள ஏற்பாட்டு வசதிகள் என்பனவற்றைக் கருத்திற் கொள்கையில் சரியான முறையில் திட்டமிடப்படின் அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்கள் மற்றும் தோற்றம் பெற்று வரும் சந்தைகள் ஆகிய இரண்டிலுருந்துமான

கேள்வியை பூர்த்தி செய்வது ஒரு கடினமான இலக்காக இருக்காது. ஐரோப்பிய ஒன்றியம், ஐ. அமெரிக்கா போன்ற நாடுகளுக்கான சந்தைகளை அணுகும் தன்மையினை மேலும் அதிகரிப்பதற்கு வர்த்தக இராஜதந்திர முயற்சிகளை உருவாக்குவது அவசியமாக இருக்கும். 1977இல் பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்ட பின்னர் நாட்டின் ஏற்றுமதி அமைப்பு ஓரளவிற்கு பன்முகப்படுத்தப்பட்டிருக்கின்ற போதும் ஆடை உற்பத்திகள் தனியொரு பாரிய கைத்தொழில் ஏற்றுமதியாக தொடர்ந்தும் இருந்து வருகிறது. சந்தைகளின் நியதிகளில், ஐ. அமெரிக்காவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வரும் வேளையில் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகரித்த சந்தைகளின் கீழ் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் மேம்பட்டன. ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தினை 2009 - 2011இற்கு 3 ஆண்டுகள் நீடித்த வேளையில் ஐக்கிய நாடுகளின் விதிகளுக்கு நாடு இணங்குவது தொடர்பான மீளாய்வும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப்பின்னணியில் ஐக்கிய அமெரிக்காவிற்கான சந்தைகளை தீர்வையின்றி பெற்றுக் கொள்வதற்கும் ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளை தீர்வையின்றி தொடர்ந்து அணுகவும் அரசாங்கம் இராஜதந்திர நடவடிக்கைகளை கூட்டாக ஆரம்பிப்பதற்காக ஆடை ஏற்றுமதியாளர்களுடன் கூட்டான நடவடிக்கைகளை ஆரம்பிப்பது அவசியமானதாகும். அதேவேளை, ஏற்றுமதியாளர்கள் மற்றைய நோக்கம் பெற்று வருகின்ற சந்தைகளுக்குள் நுழைவதற்கு ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியதுடன் அரசாங்கம் ஏற்றுமதி அமைப்பினையும் சந்தைகளையும் பன்முகப்படுத்துவதற்கான காத்திரமான கைத்தொழில் மயமாக்கமொன்றினையும் ஏற்றுமதி உபாயங்களையும் வடிவமைத்துக் கொள்ளுதல் வேண்டும். இது தொடர்பாக, சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தீர்வையற்ற சந்தையினை அடையக் கூடியதாகவிருந்தும் இன்னமும் முழுமையாகப் பயன்படுத்தப்படாதிருக்கும் இந்தியா மற்றும் பாக்கித்தானின் பாரிய சந்தைகளுக்குள் ஏற்றுமதியாளர்கள் நுழையத்தக்க விதத்தில் இணைந்த உபாயங்களை வடிவமைப்பது அவசியமானதாகவுள்ளது.

**உயர்ந்த படுகடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு எதிர்காலத்தில் கூடியளவு மூலவளங்கள் தேவைப்படுகின்ற நிலையில் இச் செயற்றிட்டங்களை அரசாங்கம் முழுமையாக நிதியிடுவது உயர்ந்த இறைச் சுமையினை ஏற்படுத்துமாகையால் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளில் நிதியிடுவதிலும் தொழிற்படுவதிலும் தனியார்துறையின் பங்கேற்பு ஊக்குவிக்கப்படல் வேண்டும்.** இறைத் தடைகள் காணப்பட்ட போதும், உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான வரவு செலவுத்திட்ட ஆதரவு தொடர்ந்தும் கிடைப்பது வரவேற்கத்தக்கதாகவுள்ள வேளையில், அரச முதலீடுகளுக்கு துணை நிரப்பு செய்வதற்கும் உட்கட்டமைப்பின் உறுதியான அபிவிருத்திக்கும் அரச, தனியார் பங்குடமையினூடாக பெருமளவு தனியார் நிதியிடலை ஊக்குவிப்பதற்கு கூடியளவு முயற்சிகளை மேற்கொள்வது அவசியமானதாகும். உண்மையில், அரச தனியார் பங்குடமை என்பது அரசாங்கத்திற்கும் தனியார் துறையினருக்குமிடையிலான கூட்டு முயற்சி ஆகும். இங்கு தனியார்துறை மூலதனத்திற்கு பங்களித்து, முகாமைத்துவத்தில் ஈடுபட்டு இலாபத்தில் அல்லது நட்டத்தில் பங்கு கொள்கிறது. இதனைப் பொறுத்தவரை, முதல் நடவடிக்கையாக, அரசியல்வாதிகள் மற்றும் கொள்கை வகுப்போர் உட்பட அனைத்து ஆர்வலர்களுக்குமிடையே அரச தனியார் பங்குடமை தொடர்பான விழிப்புணர்வினை அதிகரிப்பது அவசியமாகியுள்ள வேளையில், தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் தரமான பணிகளையும் நியாயமான விலையிடலையும் உறுதிப்படுத்துவதற்கும் தேவையான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் நிருவாகப் பொறிமுறைகளையும் உருவாக்குதல் அவசியமானதாகும். பொருளாதாரம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் இரண்டிலும் தனியார்துறை முதலீடுகளை மேம்படுத்துவதற்கு மாறாக கொள்கை, நல்ல ஆளுகை மற்றும் வெளிப்படையான தன்மை, நிறுவன ரீதியாக இயலளவினைக் கட்டியெழுப்புதல், காத்திரமான ஒழுங்குவிதிகள் மற்றும் வினைத்திறன் கொண்ட நிதியியல் சந்தை என்பன முற்தேவைப்பாடுகளாக உள்ளமையினைக் கவனித்தல் வேண்டும். நாட்டின் தலைக்குரிய வருமானம் அதிகரிக்கின்றமையின் விளைவாக இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான சலுகைக் கடன்கள் படிப்படியாகக் குறைவடைந்து கொண்டிருக்குமொரு பின்னணியில் அரச தனியார் பங்குடமையினை மேம்படுத்துவதற்கு பொருத்தமானதொரு பொறிமுறை அரசின் வர்த்தகக் கடன்பாடுகளை முழுமையாகக் குறைத்துவிடுவதுடன் அரசின் எதிர்கால இறைச் சுமையினையும் கணிசமாகக் குறைக்கும். இது தனியார்துறை வழங்குவதற்குத் தயங்கும் அரச பணிகளை அரசாங்கம் வழங்குவதற்கு மட்டுப்படுத்தப்பட்டளவில் காணப்படும் மூலவளங்களை அது பயன்படுத்திக் கொள்வதனை இயலச் செய்யும். இதன் மூலம் ஒட்டுமொத்த பொருளாதார வினைத்திறன் உயர்வடையும்.

**இலங்கை மின்சபை வர்த்தக செயலாற்றும் வாய்ந்ததாக இயங்குவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் அதன் அமைப்பியல் தடைகளை அகற்றுகின்ற நோக்குடன் நாடாளுமன்றத்தில் இலங்கை மின்வலு மசோதாவை நிறைவேற்றுவதன் மூலம் அரசாங்கம் பாராட்டத்தக்க முயற்சிகளை எடுத்திருக்கிறது.** பொது வசதிகளிலொன்றான இலங்கை மின்சபை, பல்வேறு அமைப்பியல் பலவீனங்களின் காரணமாக தொடர்ச்சியாக தொழிற்பாட்டு இழப்புக்களைக் கொண்டிருந்தது. இப் பின்னணியில், இலங்கை மின்வலுச் சட்டம், மின்வலுத் துறையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழுவினை அனுமதிக்கும் விதத்தில் குறித்துரைக்கப்பட்ட தொழிற்பாட்டு நடவடிக்கைகளை வெவ்வேறாக்குவதற்கான அடிப்படை சட்டக் கட்டமைப்பினை வழங்குகின்றது. இவ்வாறிருப்பினும், இச்சட்டம் மின் உருவாக்கம், விநியோகம் போன்ற முக்கியமான துறைகளின் தொழிற்பாடுகளில் தனியார்துறைகளின் பங்கேற்பின் மீது இன்னமும் சில தடைகளை விதித்திருக்கிறது. அந்த வகையில் உருவாக்கம் மற்றும் விநியோகம் என்பனவற்றில் அரசாங்கத்தின் ஈடுபாடு ஒன்றில் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ

இருத்தல் கட்டாயமானதாகும். மேலும், இலங்கை மின்சபை ஒருங்கிணைக்கப்பட்ட முழுமையான நிறுவனமாக தொடர்ந்தும் தொழிற்பட்டு உருவாக்கம், கடத்தல் மற்றும் விநியோக உரிமங்களை ஏக காலத்தில் கொண்டிருப்பதனை அனுமதிக்கிறது. மேலும், இலங்கை மின்சபை, எதிர்காலக் கேள்வியினை வழங்குவதற்கு ஏற்கனவே திட்டமிட்டவாறு அடையாளம் காணப்பட்ட குறைந்த செலவினைக் கொண்ட புதிய வலுச் செயற்றிட்டங்களை நடைமுறைக்கிடுவது அவசியமானதாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் விடுவிக்கப்பட்டதுடன் இது மேலும் அதிகரிக்கும் போல் தோன்றுகிறது.

**அனைத்து அரச கூட்டுத்தாபனங்களினதும் வர்த்தக ஆற்றலினை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமானதும் ஆற்றல் வாய்ந்ததுமான வியாபார உபாயங்களை அறிமுகப்படுத்துவது அவசியமானதாகும்.** இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடுமையான திரவப் பிரச்சனைகளை எதிர் நோக்குவதற்கு, கணிசமான தொகையினைச் செலுத்த வேண்டியிருக்கும் இலங்கை மின்சபை உட்பட அரச நிறுவனங்கள் பலவற்றிலிருந்தும் வெளிநின்ற உண்டியல்கள் இன்னமும் தேறல் செய்யப்படாமையே காரணமாகும். இதன் காரணமாக வர்த்தக ஆற்றல் வாய்ந்த நிறுவனமாக இது நிலைபெறுவது கடினமாக்கப்பட்டிருக்கிறது. இதன் விளைவாக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இறக்குமதி செலவுகளை தீர்ப்பனவு செய்வதற்காக வர்த்தக வங்கிகளிடமிருந்து பாரியளவில் கடன்பட்டமையானது பாரிய நிதியியல் செலவுகளை ஏற்படுத்தி தொழிற்பாட்டு இழப்புக்களுக்கு வழிவகுத்தது. இந்நிலைமையானது, இழப்புக்களை ஏற்படுத்துகின்ற கூட்டுத்தாபனங்களின் வர்த்தக ஆற்றலினை சரியாக மதிப்பிட்டு அவற்றை இலாப மீட்டும் தொழில் முயற்சிகளாக இயங்க வைப்பதற்கான பொருத்தமான வியாபார உபாயங்களை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் காட்டியது.

**2007இல் எண்ணெய் அகழ்வுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முனைவுகள் நாட்டின் உள்ளார்ந்த பெற்றோலிய வளங்களை பயன்படுத்தும் விதத்தில் தொடர்ந்தும் முன்னெடுப்பது அவசியமானதாகும்.** எண்ணெய் அகழ்வு செயற்பாடுகள், எண்ணெய் விலைகள் வரலாற்றிலே மிக உயர்ந்த விலைகள் எட்டப்பட்ட ஆண்டான 2007இல் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கமைய, மன்னார் படுகையில் 2, 3 மற்றும் 4ஆம் காணித்துண்டுகளில் பெற்றோலிய அகழ்வுகளை மேற்கொள்வதற்காக பன்னாட்டு எண்ணெய்க் கம்பனிகளிடமிருந்து பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு கேள்விப்பத்திரங்களைக் கோரியது. வரையறுக்கப்பட்ட கய்ரன் இந்தியா எனப்படும் நிறுவனத்திற்கு முழுமையாகச் சொந்தமான துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட கய்ரன் இந்தியா வெற்றிகரமான கேள்விப்பத்திர கோருநராகத் தெரிவு செய்யப்பட்டு காணித்துண்டு 2 இல் எண்ணெய் அகழ்வு மேற்கொள்வதற்கான உரிமம் வழங்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட கய்ரன் லங்கா 2009இல் முதற் காலாண்டில் அகழ்வு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. பன்னாட்டு எண்ணெய் விலைகளில் கடுமையான வீழ்ச்சி காணப்படுகின்ற போதும், எதிர்காலத்தில் உலகளாவிய பொருளாதாரம் மீட்சியுற்றதும் எண்ணெய் விலைகள் திடீரென உயரக்கூடுமாகையால் திட்டமிடப்பட்டவாறான இச் செயற்பாட்டினைத் தொடர்வது மிக முக்கியமானதாகும்.